# அகிலா கோவிந்த்

வெண்ணிலா
நாவல்

அக்டோபர்2012

ரூ.15/-



# என் கண்மணி,
# என் காதலி.!




அகிலாகோவிந்த்








"கவிக்கண்ணு..." என்ற குருநாதரின் அன்பான அழைப்பு கவிதாவின் காதுகளில் விழுந்தது. உடனே நிமிர்ந்து அவசர அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

கிட்டத்தட்டஅதுவரை பம்மி பதுங்கியிருந்த அறையிலிருந்துவெளிப்பட்டு இதழ்களில் புன்னகையை மலரவிட்டபடி அவர் முன் போய் நின்றாள்.

அவள் உடை எதுவும்மாற்றாமல் அதே கோலத்தில் இன்னும் இருப்பதைக் கண்டு வியப்பு காட்டியவர், "கவிக்கண்ணு இன்னும் கிளம்ப வில்லை...? சீக்கிரம்மா..!" என்றார் வாட்சைப் பார்த்தபடி துரிதப்படுத்துவது போல்.

அகிலாகோவிந்த்

இல்லை மாமா! நான் வரவில்லை. எனக்கு தலைவலி வந்துவிடும்.... தன்னிடம் பரிவாய் கேட்டவர் நோகக் கூடாது என்பதற்காக மெல்லிய குரலிலே சொன்னவள் அவர் நம்பவேண்டும் என்பதற்காக விரல்களால் தலையைப் அழுந்தப் பிடித்தும் காட்டினாள்.

ஓ....அது...வேறா...?என்ற குருநாதர் மேலும் ஏதோ சொல்ல வருவதற்குள் அத்தை கனகம் தனது கனத்தசரீரத்துடன் எதிர் ரூமிலிருந்து வெளிப்பட்டவள், 'பிடிக்கவில்லை தலைவலி' என்று சொன்னால்... சரி... என்று விடுவீர்களா? அதை விட்டுவிட்டு உங்கள் கவிக்கண்ணுவை நொய்... நொய்யென என்னு வரும்படி நச்சரித்து எரிச்சலாக்கி விடுவீர்கள் போலவே...?' என முத்தாய்ப்புடன் வந்து சொல்லவும் வாயை மூடிக் கொண்டார் குருநாதர். கூடவே தாமரை மலர் போல அழகான விரிந்த அலைப்பு கொண்ட கவிதாவின் முகம் கூம்புவரையும் கண்டார்.

கவிதாவிற்கு அத்தையின் பேச்சுபழகிவிட்டாலும் அன்று அவள் மறுத்து ஒதுங்கிய சூழ்நிலையிலும் இப்படி அத்தை பேசுவது சுருக்கென மனதை தைக்கத்தான் செய்தது. பொதுவாக இப்படி எங்காவது வெளிக்கிளம்பும்போது... கவிதாவை அவர் குருநாதர் சரிசமமாக இப்படி அழைத்துச் செல்வது அத்தைக்கு ஒருபுறம் பிடிக்காததும்கூட.

அதைவிட அவர் நொடிக்கொருமுறை, 'கவிக்கண்ணு.. கவிக்கண்ணு' என விளித்து கூப்பிடுவது மிகுந்த எரிச்சலை அவளுக்கு உண்டாக்கும். கொஞ்சிக் கூப்பிட சொந்த மகள்,அருமைமகள் மஞ்சரி குத்துக்கல்லாய் இருக்கும்போது அக்காள் மகளை,அதுவும் சிறுவயதிலேயே பெற்றோர்களை விபத்தில் பறிகொடுத்துஅனாதையாய் தங்களுடன் வந்து ஒட்டிக் கொண்ட அக்காள் மகளை இப்படிக் கொஞ்சுகிறாரே? என உள்ளுக்குள் பொருமுவாள்.

அதற்கு மேல் பார்த்தால் இன்னொருகாரணமும் சொல்வாள். கவிதாவை உடன் அழைத்துச் சென்றால் காசுபணம் கூடுதலாக விரையம் ஆகுமே? உங்களது குமாஸ்தா சம்பளத்தில் இப்படியெல்லாம் செலவழித்தால் பின் குடும்பம் நடத்துவது எதிர்காலத்திற்கு சேமிப்பது எல்லாம் எப்படி? என்பாள்.



முன்பு ஒருமுறை இப்படித்தான் மாமாவின் வற்புறுத்தலுக்காக அவள் கிளம்பி அவர்களுடன் சினிமா ஒன்றுக்கு சென்றுவிட்டாள். சினிமா பார்த்து விட்டு வந்த அடுத்த இரண்டு நாட்களும் கனகம் புலம்பித்தள்ளிவிட்டாள்.

'அப்பப்பா...!' டிக்கெட் இருபத்தைந்து ரூபாயாமே...? மொத்தமாய் நூற்று இருபத்தைந்து ரூபாய்.. எவ்வளவு பெரிய தொகை... நீ மட்டும் வராதிருந்தால்.... இருபத்தைந்து ரூபாயாவது மிச்சமாயிருக்கும்... நீ வந்ததால் அதுவும் செலவாகி விட்டது....!' என ஒருநூறுதரமாவது அங்கலாய்த்து இருப்பாள்.

அன்றிலிருந்தே கவிதாவிற்கு இந்த சினிமாப் பார்க்கும் ஆசையே போய்விட்டது. முதலில், அத்தை தனக்கு செலவழித்ததை தண்டம் போல் நினைக்கிறார்களே... என வருந்தியவளுக்கு அத்தையின் பேச்சு கூட நியாயம்தான் எனவும் சில சமயம் தோன்றித்து.

எதோ சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து அனாதையாய் நின்றவளுக்கு சொந்தம் என அபயக்கரம் நீட்டி அணைத்துக் கொண்டது இந்த அத்தையும் மாமாவும்தான்.மேலும் அத்தை அடிக்கடி சொல்வது போல் மாமாவின் குமாஸ்தா வேலையில் கிடைக்கும் வருமானத்தை வைத்து ஓட்டும் நடுத்தரக்குடும்பம்தான் அவர்களது.

இதில் வரும்படிக்கு ஏற்றார்போல் பார்த்துப் பார்த்து செலவழிக்க வேண்டும் என அவர்கள் நினைப்பது நியாயம்தானே? ஏதோ சொந்தம் என்று அனாதையாய் ஆகிவிட்டதால், ஆதரவு கொடுத்தார்கள். வீட்டில் கூட வைத்து மூன்றுவேளை சாப்பாடு போடுகிறார்கள் அதற்குமேல் அவள் அவர்களிடம் எதிர்பார்ப்பதும் பிழை அல்லவா?

இப்படியெல்லாம் நினைப்பு ஓடும்போது இந்தச் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்து இப்படி யாருமில்லாத அனாதையாகிவிட்ட தன் நிலையை நினைத்து அவளுக்கு அழுகை முட்டிக்கொண்டு வரும். எத்தனையோ நாட்கள் யாரும் பார்க்காத வண்ணம் மொட்டைமாடிப் பக்கம் சென்று பிழியப் பிழிய அழுதிருக்கிறாள் அவள்.

ஒருநாள் அப்படி வழக்கம் போல் அழுதவள்தான் திடீரென ஞானம் வந்தது போல் யோசித்தாள். இப்படி அழுதால் வேதனை

கூடுகிறதே தவிர குறையவில்லையே... என உணர்ந்தாள். கண்டுபிடித்தாள்.

அன்றிலிருந்து... பிறந்தாயிற்று... வாழ்ந்து விடுவோம்.. கடவுள் நமக்காக ஒரு நல்ல வழி காட்டாமலா போய் விடுவார்? என்ற நம்பிக்கையை மனதுள் விதைத்து நிமிர்ந்து நிற்கவும் தானாகவே கற்றுக்கொண்டாள் அவள்.

இன்றும் அதே சினிமாப் பிரச்சினை தான்! அன்று சனிக்கிழமை, காலையில் கல்லூரிக்குச் செல்லும்போதே மஞ்சரி, இன்று மாலை அந்த புதுப்படத்திற்கு போகவேண்டும். நாம் போகிறோம் எதாவது சாக்கு போக்கு சொல்லக்கூடாது... என தாயிடமும் தந்தையிடமும் உத்தரவே போட்டிருந்தாள்.

பொதுவாகவே அந்த வீட்டில் மஞ்சரி சொன்னால் சொன்னதுதான். அவள் வைத்ததுதான் சட்டம். ஒரே செல்ல மகள் என்பதால் சிறுவயத முதலே அவளுக்கு அதிகமாகவே செல்லம் கொடுத்து அதிகமாகவே கொஞ்சி வளர்த்தார்கள்.

அதனாலே அவள் விருப்பப்படும் சினிமா, ஷாப்பிங், கடற்கரை பீச் போன்ற செல்ல உத்தரவுகளுக்கு தாய் கனகம் கூட முகம் சுளிக்காது ஒப்புக்கொண்டுவிடுவாய்.

இன்றும் அப்படித்தான் ஆயிற்று.... கவிதாவும் அதனாலே சுதாரித்து வழக்கம்போல் தனது தலைவலி அஸ்திரத்தை கையில் எடுத்து மாமாவின் அன்பு அழைப்பில் இருந்து தப்பித்துக்கொண்டாள்.

மஞ்சரியும் கூட, 'பிகு பண்ணாமல் வாயேன்!' என தன் பங்கிற்கு கூப்பிட்டுப் பார்த்தாள். அதற்கும் கவிதா தலைவலியை காரணம்காட்ட சரியென விட்டுவிட்டாள் அவள்.

அவள் மஞ்சரி ஒரு ஐஸ்கிரீம் பைத்தியம், கவிதா வராவிட்டால் கனகம் அவள் கேட்கும் இரண்டு ஐஸ்க்ரீம்களை வாங்கிக்கொடுப்பாளே... என்ற சந்தோஷம் ஒருபுறம்.

ஆனாலும் மஞ்சரி அந்தப் புது மஞ்சள் பட்டுப்பாவாடை தாவணியை கட்டிக்கொண்டு கிளம்பத்தயாராய் வந்து நிற்கும் போது அவளுள் அந்த ஏக்கம் எழாமலில்லை.

இதேபோல் ஜரிகை பார்டருடன் கூடிய 'பாவாடை ஜாக்கெட்டை அணிய அவளுக்கு கொள்ளை ஆசை உண்டு. ஆனால் அதை யார் வாங்கித் தருவது?



ஒவ்வொரு வருடம் தீபாவளி அன்று அவளுக்கு ஒரு செட் உடைகள் கிடைக்கும். குறைந்தவிலை துணிகள் ஆனாலும் அதற்கும் கனகம் பார்த்து இரண்டு மூன்று கடை ஏறி இறங்கிதான் வாங்குவாள்.

தன்னிடம் அந்தப் புதுத்துணிகளை கொடுக்கும்போது மனமகிழ்வாய் நன்றிப்பெருக்கோடு வாங்கிக் கொள்வாள். பக்கத்தில் அவர்களது செல்ல மகள் மஞ்சரி காஞ்சிபுரம்பட்டில் பளபளப்பாய் நிற்கும்போது அவளுக்கு வாங்கிக்கொடுத்திருப்பதில் நியாயமுண்டு என்பதையும் உணர்ந்து கொள்வாய்.

ஆனால் அந்த ஏக்கம் மட்டும் எப்போதும் அவளுள் இருந்துகொண்டே இருக்கும். இன்றும் அந்த ஏக்கத்துடனேயே சினிமாவுக்கு கிளம்பிய அவர்களை வழி அனுப்பினாள்.

கனகம்தான், கதவை இறுக சாத்திக்கொண்டு இரு. யார் வந்தாலும் திறக்காதே. இரவுக்கு உணவாக சாதமும் ஊறுகாயும் இருக்கிறது. சாப்பிட்டுக்கொள். நாங்கள் படம் பார்த்துவிட்டு எதாவது ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வருவோம் தனியாக இருக்கிறோம்.... என்று பயப்படாமல் தைரியமாக இரு...! என ஆத்திச்சூடி அறிவுரை போல் எல்லாவற்றையும் வரிசையாக சொல்லிக்கொண்டு கிளம்பினாள்.

பெரிய தலையாட்டலுடன் அவர்களை வழி அனுப்பி வைத்தாள் கவிதா.

வெளியே நடந்து தெருப்பகுதியை அவர்கள் எட்டுகையில் மாமா, 'பாவம் குழந்தை, நாம் ஹோட்டலில் சாப்பிடும்போது அவளுக்கும் பார்சலாய் எதுவுமவாங்கிவருவோமா?' என கேட்பதும் பதிலுக்கு அத்தை, 'அப்படியானால் பழைய சாதம் பானையில் இருப்பது வீணாகி விடுமே? அதை யார் சாப்பிடுவது?' என எதிர்கேள்வி கேட்டு மாமாவின் வாயை அடைப்பதும் அவள் காதுகளில் தெளிவாய் விழுந்தது.

அப்போதும், அத்தை சொல்வது நியாயம்தானே? என தனக்குத்தானே சமாதானமாகிக்கொண்டாள் அவள்.

மேலும் அவளுக்கு அத்தை மீது ஒரு தனி மதிப்பு உண்டு. என்னதான் கனகம் இதுபோன்ற சிறு விஷயங்களில் சில்லறைக்கணக்கு பார்த்து செலவழிக்க யோசித்தாலும் மற்ற நிறைய விஷயங்களில் மிக நல்லவளாகவே நடந்து கொண்டாள்.

அவள் கதைகளில் சினிமாக்களில் பார்த்த கொடுமைக்கார சித்தி, அத்தை போல் எல்லாம் கொடுமைப்படுத்தும் ரகம் கனகம் கிடையாதுதான்.

அனாதையாய் ஆதரவு நாடி வந்தவள்தானே... கேட்க ஆள் இல்லைதானே...? என்றெல்லாம் இளக்காரமாய் நினைத்து அவள் தலையில் ஒரு வண்டி வீட்டு வேலைகளைக் கட்டிஅவளை வேலைக்காரி ஆக்கிவிடும் ரகமும் கனகம் கிடையாது.

சமையலிலும் சரி வீட்டு வேலைகளிலும் சரி.... அளவோடுதான் அவளை வேலை வாங்குவாள். அவள் கவிதா ஏதாவது ஒரு பெரிய வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாலும், முதலில் எழுந்திரு. நீ சின்னப்பெண், உன்னால் எல்லாம் இதைசெய்ய முடியாது...! என விரட்டி விட்டு தானே செய்வாள்.

கவிதாவிற்கு,அத்தை மாமா வீட்டில் வாழ்வதில் ஏற்பட்ட ஒரே குறை அவளது படிப்பு விஷயம்தான்! மஞ்சரிக்கும் அவளுக்கும் ஒரே வயதுதான்.

இருவரும் பக்கத்து கார்ப்பரேஷன் பள்ளியில் சேர்ந்து பத்துவரை படித்தார்கள். அப்போதெல்லாம் கவிதா பாடத்திலும் படிப்பிலும்அதிக கவனம் செலுத்தியதால் தன்நிலைபற்றியோ தான் வளர்ந்து வரும் சூழல் பற்றியோ அவள் ஒரு போதும் கவலைப்பட்டதில்லை.

ஆனால் பத்து முடித்து ப்ளஸ் ஒன்றுக்கு வேறு பள்ளி மாற வேண்டிய சூழ்நிலையில்...இனி கவிதாவின் படிப்பிற்காக ஸ்கூல் பீஸ் மற்றும் படிப்புச் செலவுகளை ஏற்க முடியாதது தங்களது பொருளாதாரச் சூழ்நிலை... என கனகத்தால் காரணம் காட்டி அவள் படிப்பு நிறுத்தப்பட்டது.

அப்போதுதான் அவள் நொந்து போனாள்.

பெற்ற தாயும் தந்தையும் இருந்தால் இப்படி அவளுக்கு நடக்குமா? இப்படி தவிக்கவிட்டுப் போய்விட்டார்களே... என தனக்குள்ளே புலம்பித்தீர்த்தாள்.

அவள் படிப்பை செலவு காரணம் காட்டி நிறுத்துவதில் மாமா குருநாதருக்கு உடன்பாடு இல்லைதான்! ஆனாலும் படிக்க வைத்து அவள் டிகிரி முடித்தால் கூட உடனே வேலையா கிடைக்கப் போகிறது? அதற்குப் பதில் அவளுக்கு அப்படி படிப்பிற்காக



செலவழிக்க நினைக்கும் பணத்தை மிச்சப்படுத்தி நாம் சேமித்து வைத்தால்... நாளை அந்த பெண் பிள்ளைக்கு கல்யாணம் காட்சி என ஒன்று செய்ய வசதியாய் இருக்கும் புரிகிறதா? என கனகம்பதிலுக்குச் செல்ல வாயடைத்துப்போனார் மாமா!

கவிதாவிற்கு ஒரே ஆற்றாமை,மிகப் பெரிய ஏமாற்றம்! அவள் படிப்பு அவ்வளவு தானா? பத்தோடு நின்று விட்டதா? யாரிடம் போய் சொல்வாள்?

மாமா தனக்காக இரண்டு மூன்று முறை இயன்று வந்து சொல்லியும் அத்தை, அதைவிடுங்கள், நம்மால் அவளை படிக்க வைக்க முடியாது. நம் சக்திக்கு மீறிய விஷயம்.. என பிடிவாதமாய் உறுதியுடன் சொல்லிவிட்டபோது... அவளால் என்ன செய்ய முடியும்?

அந்த ஏமாற்றத்தை தாங்க முடியாமல் ரொம்ப மாதங்கள் புழுங்கித் தவித்தாள். மஞ்சரி புத்தகங்களுடன் தினம் காலை கிளம்பிப் போவதைப் பார்க்கும் போது அவளுக்கு அழுகை முட்டிக்கொண்டு வரும்.

அதைவிடக் கொடுமைஅவளுக்கு நேரம் போகாமல் ஏற்படும் தனிப்புதான்.

பதினோரு மணிக்குள் சமையலில் அத்தைக்கு ஒத்தாசையாய் இருந்து வேலைகளை எல்லாம் முடித்து விடுவாள். அதற்குப் பின்மாலை மஞ்சரி வரும் வரை அவளுக்கு என்ன செய்வது எப்படி பொழுது போக்குவது என்றே தெரியாது.

சும்மா... சுவரைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தால் கவலையும் அழுகையுமேவருவதை உணர்ந்தவள் எழுந்து பக்கத்துத் தெரு லைப்ரரிக்குச் சென்றாள். புத்தகங்கள் எடுத்து வந்து படித்தாள்.

அதிலும் நேரம் போகாதபோது மஞ்சரி வீட்டில் விட்டுச் சென்றிருக்கும் அவளது பாடப் புத்தகங்களை எடுத்து ஆசையாய்ப் புரட்டினாள்.

அதை ஒருநாள் கவனித்து கண்டுபிடித்த மஞ்சரி குஷியாகி, 'உனக்கு தினம் நான் பாடம் எடுக்கிறேன். என்னிடம் படி. இனி... நான் தான் உன் கிளாஸ் டீச்சர்!...' என பாடம் எடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

தினம் அவளுக்கு வகுப்பில் நடக்கும் பாடங்களை

மாலையில் வந்து மிஸ்போல் அவளுக்கு சொல்லிக்கொடுப்பதை தனது வேலையாக்கிகொண்டாள். இதற்காக குருநாதர் தெரிந்த நண்பர் ஒருவர் விட்டில் சும்மா கிடந்த கரும்பலகை ஒன்றை வாங்கி வந்து வேறு கொடுத்துவிட... போர்டு சாக்பீஸ் சகிதம் அசல் டீச்சர் போலவே ஆகிவிட்டாள் மஞ்சரி.

மஞ்சரி படிப்பில் சுமார் ரகம்தான். கவிதாவோ பத்து படிக்கும் வரை முதல் ரேங்க் அவள்தான். என்ன செய்ய.. காலத்தின் கோலம்.. என... மஞ்சரி... அரைகுறையாய் சொல்லித்தந்த பாடங்களையும் அலட்சியப்படுத்தாமல் முழுமனதோடு படித்தாள் தெரிந்து வைத்துக் கொண்டாள்.

இந்த டீச்சர் மாணவி விளையாட்டு மஞ்சரி ப்ளஸ் டூ முடிக்கும் வரை தொடர்ந்தது. ப்ளஸ்டு முடித்து மஞ்சரி கல்லூரிக்குச் சென்றதும் மஞ்சரியே சலித்தவளாய் நிறுத்திவிட்டாள்.

அதன்பின் தான் அஞ்சல்வழிக்கல்வி... விட்டிலிருந்தே டிகிரி படிக்கலாம் என்பதெல்லாம் அவளுக்குத் தெரிய வந்து மாமாவை நச்சரித்து அத்தையிடம் கெஞ்சி அதற்கு சம்மதிக்க வைத்தாள்.

ஏகலைவன் போல் தான் விருப்பப்பட்ட பாடம் ஒன்றை தேர்ந்தெடுத்து அஞ்சல் வழிக் கல்விமூலம் பல்கலைகழகம் ஒன்றில் தனக்கான டிகிரி படிப்பையும் படிக்க ஆரம்பித்துவிட்டாள்.

ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை எடுத்து புரட்டுவதே அவளது சந்தோஷமான வேலை. இன்றும் அப்படியே எடுத்து வைத்து படிக்க உட்கார்ந்தாள்.

சினிமாவுக்குப் போயிருக்கிறார்கள். ஒரு மூன்றுமணிநேரம் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் நிம்மதியாய்ப் படிக்கலாம் என அவள் நினைத்தபோதுதான் அந்த காலிங்பெல் சப்தம் கேட்டது.

என்ன இது...? யாராக இருக்கும்? ஒருவேளை டிக்கெட் கிடைக்காமல் திரும்பிவிட்டார்களா? அத்தை உடனே வந்து திறக்காவிட்டால் அதற்கும் ஏசுவார்களே?

பயத்தோடு விடுவிடுவென கதவுப்பக்கம் ஓடிப்போய் திறந்தாள்.

அவள் முகம் திகைப்பானது.

வெளியே... நல்ல உயரமும் உடற்கட்டும்மாய் வாட்ட சாட்டமான ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்!

அவனது சுருள் முடியையும்அடர் மீசையையும் காந்தமாய்



சுழன்ற கண்களையும் அவள் வியந்து ஒரு கணம் பார்த்தாள்.

அதை உற்றுக் கவனித்து வசீகரப் புன்னகையொன்றை சிந்தியவன் அவளையும் அதிசயித்துப் பார்த்தான்.

பால் போன்ற வெண்மையான முகம் கள்ளம் கபடமற்ற பார்வை. அழகான தாமரை மலர் விரிந்தாற்போல் பொங்கும் இளமைஅனிச்சமலர்போல் சட்டென குனிந்து தரை தாழ பார்க்கும் நாணம் என அவளின் எல்லா அழகும் ஒரு சேர சேர்ந்து அவனை வசீகரித்தது போலும். கண்இமைக்காமல் அவளைப் பார்த்தான் அவன்.

'கதவை நன்றாகத் திற. உன் அத்தான் வந்திருக்கிறேன்..!' என்றான் அவன்

அத்தானா? அதுவும் அவளுக்கா?

திகைத்தாள் அவள்.



## 2

கவிதா திகைத்துகதவை அந்தப் பாதி திறந்த நிலையிலேயே பிடித்திருக்க அவன் உரிமையுடன் தள்ளிவிட்டு உள்ளே வந்தான்.

அப்போதுதான் கையில் ஒரு சூட்கேஸும் சின்ன லெதர் பேக் ஒன்றையும் அவன் வைத்திருப்பதை கவனித்தாள்.

அத்தை பயங்காட்டிச் சொன்னது அவள் காதுகளில் ஓடியது. யாராக இருந்தாலும் கதவைத் திறந்து விடாதே.. புரிகிறதா?

அவள் எங்கே திறந்தாள்? அவன் பாட்டுக்கு கதவைத் தள்ளி உள்ளே நுழைந்து விட்டானே! யாராவது திருடனாயிருந்தால்? அவள் அந்த விட்டில் தன்னந்தனியே இருப்பதை தெரிந்து கொண்டு வந்திருக்கும் பலே திருடனாய்... ஒருவேளை இருந்து விட்டால்...?

அவள் முகம் திகைப்பில் கலவரமாகுவதைப் பார்த்தவன், 'ரொம்பவும் யோசிக்காதே, நான் ஒன்றும்திருடன் இல்லை. உன் அத்தான் என்று சொன்னேனே...அது உன் காதுகளில் விழவில்லை?' என்றான் விரட்டுவது போல்.

முகத்தை பார்த்தே யூகிப்பதை கண்டுபிடித்துவிட்டானே

இவனிடம் ஜாக்கிரதையாகத்தான் பேச வேண்டும் என நினைத்தவள். 'மிஸ்டர்....' என்றாள் குரல் உயர்த்தி.

'மறுபடியும் மிஸ்டரா...? சரிதான் உனக்கு அத்தான் என்ற வார்த்தையே பிடிக்கவில்லைதான்... போல...' என்றவன் அவளை மேலும் கீழும் அளவெடுப்பது போல் நிதானமாய் பார்த்துவிட்டு சின்ன வயதில் உன்னைப் பார்த்தது '...ம்ம்... ஆனால்... இப்போத... அழகாய்... இப்படி பிரமிக்கவைக்கும் அழகோடு இருப்பாய் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை...' என்றான் எதையோ கண்டுபிடிப்பதுபோல்.

'மிஸ்டர் யார் நீங்கள்? முதலில் அதைச் சொல்லுங்கள்...!' என்றாள் அவள் கோபம் பொங்க.

'நான் திவாகரன் உன் அத்தான்... முதலில் உள்ளே போய்... உன் தந்தையை... என்...மாமாவை கூட்டிக்கொண்டு வா...!' என்றான்.. கைகளால் சைகைசெய்து தன் எரிச்சலைகாட்டியபடி

'வீட்டில் யாரும் இல்லை...!' என்றாள் அவளும் கையை விரித்து காட்டிக்கொண்டு.

'ஓ... அதுதான் விஷயமா? அதனால் தான் பயப்படுகிறாயா?' என்றவன், 'பயம் வேண்டாம் பெண்ணே... என்னிடம் ஆதாரம் இருக்கிறது'. .... என்றபடி டக்கென கையில் வைத்திருந்த சூட்கேஸை கீழேவைத்து திறந்தான்.

உள்ளிருந்து ஒரு போட்டோ ஆல்பத்தை விரித்து அவளிடம் நீட்டினான்.

'பார்...!' என்றான் ஒற்றை வார்த்தையில்.

பார்த்தாள்.

அவன் சொல்வதுஉண்மைதான்! அந்த போட்டோ ஆல்பத்தில் வரிசையாய் படங்கள், கனகம் அத்தை, குருநாதர்மாமா சின்னவயது மஞ்சரி... போட்டோவை புரட்ட இதோ சின்ன வயது அவள் படம் கூட! பக்கத்தில் அவள் தந்தையும்தாயும்...! கோயில் கொடைவிழா ஒன்றில் அபூர்வமாக எடுக்கப்பட்ட புகைப்படம்இது... இது எப்படி...இவனிடம்?

பெரும் ஆவலாகி அந்தப் படத்தை ஆசை மிகுதியால் கண்களில் வைத்து ஒற்றிக்கொண்டு, என் தாய் தந்தை...என்னிடம் இல்லாத அபூர்வ புகைப்படம் இது... இதை... இதை.... என்னிடம்



கொடுத்து விடுங்களேன்... ப்ளீஸ்.. என்றாள் கெஞ்சுவது போல்.

'ம்ம்... எடுத்துக்கொள்...' என்றவன் பக்கத்தில் வந்து அவள் காட்டிய புகைப்படத்தை பார்த்து விட்டு, 'அப்படியானால் நீ மஞ்சரி இல்லையா...?' என்றான் திகைப்பாய்.

அவளுக்கும் புரிந்தது. இவ்வளவு நேரம் குருநாதரின் பெண் மஞ்சரி என நினைத்துக் கொண்டுதான் அவளிடம் பேசி விளையாடியிருக்கிறான்... அது தெரியாமல் விரட்டுவது போல் பேசி விட்டோமே?

தவறுக்கு வருந்தியவளாய் உதட்டைக் கடித்துக் கொண்டு, 'என் பெயர் கவிதா. நான் லட்சுமிஅம்மாவின் மகள்...' என்றாள்.

அவனும் பக்கத்தில் இருந்த மர இருக்கையை இழுத்துப்போட்டு உட்கார்ந்தவன், 'என் பெயர் திவாகரன் உனக்கு டெல்லி அத்தை என்று செல்லமாய்ச் சொல்வார்களே அவர்களை ஞாபகம் இருக்கிறதா?' என்றான்.

'ஓ... டெல்லி அத்தையா?' சிவப்பாக எப்போதும் சிரித்த முகத்துடன்... சின்னவயதில் பார்த்தது ஞாபகம் வருகிறது... என அவள் நெற்றியில் கைவைத்தவாறு உதடுகளை ஓவென ஆச்சரியம் காட்டிச் சொல்ல... அதை ரசித்து பதிலுக்குப் பார்த்தவன் கூடவே, 'அதே தான்! அவர்களேதான்! அப்படி நீ பார்த்த டெல்லி அத்தைக்கு அருமையாய் அழகாய் ஒரு மகன் பிறந்து அவன் கிடுகிடுவென வளர்ந்து ஒரு... ஆறடி ஐந்து அங்குலத்தில் இருப்பதாய் கற்பனை பண்ணி பார்...' என்றவன் ஒரு நிமிட இடைவெளிவிட்டு, 'என்ன கற்பனையில் பார்த்துவிட்டாயா? .... இப்போது நிஜத்தில் பார்! அது.. நான்.. நான்தான் அடியேன்தான்! என முடித்தான்அவன்.

அவளுக்குஇப்போது எல்லாம் புரிந்துவிட்டது. டெல்லி அத்தை என சொல்லப்படும் அன்னபூரணியை பற்றி சிறுவயதில் பார்த்த ஞாபகம் மட்டுமல்ல கேள்வியும் பட்டிருக்கிறாள்.

டெல்லி அத்தை, டெல்லி மாமா ராஜாமணி. அதில் மாமாவுக்கு வேலைகாரணமாக டெல்லி சென்றவர்கள் அங்கே செட்டிலாகிவிட்டார்கள் என்றும் ஒரு சிறு சொத்து தகராறில் பிணக்குஏற்பட்டு யாரிடமும் பேச்சுவார்த்தை கொள்ளாமல் ஒதுங்கி விட்டார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறாள்.

அப்படியானால்... அவர்களது ஒரே மகன்...சிறுவயதிலேயே

அதிகம் சேட்டைகள் செய்யும் சிறுவனாய் துறுதுறுவென வளர்வதாய் மாமா அடிக்கடி முன்பு சொன்னது இவனைத்தானா?

அவள் நினைப்பை யூகிப்பது போல், அந்த சேட்டைக்காரன் நான்தான்...! என்றான்.

பின் அவன் அவளைப்பற்றி விசாரிக்க... தனது தாய் தந்தையை விபத்தில் முன்பே பறிகொடுத்து இப்போது மாமா குருநாதர் வீட்டில்தான் வளர்வதுவரை விவரித்தாள்.

அவன் முகம் சோகமாய் மாறி, உன் தாய், தந்தை இறந்தது எல்லாம் எங்களுக்குத் தெரியாமல் போயிற்றே? என கவலைப்பட்டான்.

பின் அவன தான் வேலைப்பார்க்கும் மல்டிபிராண்ட் கம்பெனியின் மேனஜராய் ட்ரான்ஸ்பராகி சென்னை வந்திருப்பதாகவும் பழைய சொந்தங்களை உறவுகளை புதுப்பித்துக்கொள்ள தேடி வந்திருப்பதாகவும் அவன் விளக்கிச்சொன்னபோது கதைபோல்தான் கைகளை கன்னம் பதித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அது என்னவோ அவனுடன் பேசியது... ஒரு அந்நியத்தன்மையை உண்டாக்காமல் ரொம்ப நாள் பழகிய ஒருவரிடம் பேசுவது போலவே இருப்பது கண்டு அதிசயித்தாள்.

பேச்சினூடே அவன், 'உன் தாய், தந்தையை சிறுவயதில் பார்த்த ஞாபகம் இன்னும் எனக்கு இருக்கிறது. அவர்களும் எனக்கு மாமா முறைதான். அதனால் நீயும் எனது அத்தைபெண்தான். அதனால் தாராளமாக அத்தான் என்றே கூப்பிடலாம்.... சரிதானா?' என்றபோது அவளது இதயம் இதுவரை அவள் அறிந்திராத விதமாய் படபடத்தது. அவளுக்கும் சொல்லிக்கொள்ள இன்னும் ஓர் சொந்தம்... அவளுக்காக கவலைப்பட இன்னுமொரு ஜீவன்...?

அவள் நினைத்தது போலவே பரிதாபமும் பட்டான் அவன்!

'இந்த சிறு வயதிலே நிறைய வேதனைகளை அனுபவித்திருக்கிறாய். ஆனால் கடவுள் அதை ஈடுசெய்யும் பொருட்டுதான் உனக்கு நிறைய அழகை கொடுத்திருக்கிறார்...' என்று பேசியவன் அவள் முகம் பிரகாசமடைவதைப் பார்த்து, 'அழகோடு சேர்த்து நிறைய அறிவும் இருக்கவாய்ப்பிருக்கிறது தான் ஆனால் அதை இப்போது அல்ல.... போகப் போகத்தான்



உறுதிப்படுத்துவேன்!' என்றான் உதடுகளை வேண்டுமென்றே இறுக்கமாய் வைப்பது போல் வைத்தவாறு.

'சரி... மேதாவி... சார்...!' என்றபடி தலையசைத்த அவள் கலகலவென அடக்க முடியாமல் நகைத்தாள்.

அதை கவனித்தவன், 'ஆஹா...! என்ன ஒரு இனிமையான நகையொலி...! கேட்டுக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறதே... எனக்காக இன்னொரு முறை சிரியேன்... சிரித்துக் காட்டு பார்ப்போம்...!' என்றபடி வேடிக்கையாய் தனது காதுகளைத் திருப்பி அவள் பக்கம் காட்ட.. அதைக் கண்டு மேலும் நகைத்தாள் அவள்.

அப்போதுதான் தான் இதுவரையோ, இதற்கு முன்போ இப்படி மனம் விட்டு ஒரு சிரிப்பு சிரித்ததில்லையே..? என்பதையும் இனிமையாய் உணர்ந்தாள் அவள்!




கேலியும் சிரிப்புமாய் திடீரென வந்து உறவுக்காரன் என்று சொல்லிய அந்நியன் ஒருவனிடம் நாம் பாட்டுக்கு யாருமில்லாத சமயமாய் இப்படி பேசிக்கொண்டிருக்கிறோமேஎன அவளுக்கு உரைத்தபோதுதான் வெளியே கேட்கதவு திறக்கும் அரவமும் கேட்டது.

'அத்தை மாமா வந்து விட்டார்கள் போல...' என்றபடி சாய்திருந்த நிலைப்படி கதவிலிருந்து விடுபட்டு தன்னை நேர்படுத்திக்கொண்டாள் கவிதா.

அவள் திவாகரனும் ஆவலாகி முன்புறம் பார்க்க, என்ன பேச்சு சப்தம்? யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய்? என கேட்டபடியே முதலில் நுழைந்தது கனகம்.

பின்னால் குருநாதர், மஞ்சரி வந்தார்கள்.

மூவருமேடிப்டாப்பாய் சூட்கேஸும் கையுமாய் வந்து நிற்பவனைப் பார்த்து திகைத்தார்கள். ஆனால் திவாகரன் சிரித்தபடி உரிமையோடு அவர்கள் பக்கம் போனான். 'நான் உங்கள்

உறவுக்காரன். ஆனால் யாரென்று நீங்கள் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...' கேட்டுவிட்டு சவால் விடுவது போல் பார்த்தான் திவாகரன்.

குருநாதர் அவனை நெருங்கி முகத்தை உற்றுப் பார்த்தார். நான். கண்டு பிடித்துவிட்டேன்... என்றார் உற்சாகமாக. 'நீ... நீ... என...' யோசனையோடு அவர் இழுத்தார்.

திவாகரன் சட்டென குறுக்கிட்டு, 'நீங்கள் சொல்லிவிடாதீர்கள். அத்தை கண்டுபிடிக்கிறார்களா... என்று பார்ப்போம்...' என பிடிகை போட்டான்.

'என்ன... அத்தையா...?... நான் அத்தை என்றால் இது... இது? என்னை அத்தை என்று கூப்பிடுகிறான் என்றால்? இது... இது... திவா...வாக...டெல்லி அன்னபூரணியின்மகன் திவாகராகத்தான் இருக்கும்.... என்ன சரிதானேப்பா...?

நெற்றியில் தட்டியபடி யோசித்து கனகம் பேசி முடிக்க, 'அத்தைக்கு நூறுமார்க்!' என்றான் திவாகரன்.

'ஏன்ப்பா... முதலில் கண்டுபிடித்தது நான்.. எனக்கு மார்க்குகள் கிடையாதா?' என்றார் குருநாதர்.

'உங்களுக்கு இருநூறு மார்க்...!' என்றான் திவாகரன்.

எல்லோரும் சிரித்தார்கள்.

வந்ததுமேஎல்லோரையும்இப்படி சட்டென வசிகரித்து சிரிக்க வைத்துவிடுகிறானே.. என கவிதா அவனையே வியப்பாய் வைத்த கண் வாங்காமல் பார்க்க...அவன் திவாகரன் மஞ்சரி பக்கம் திரும்பி, 'யார்... இது? உங்கள் சீமந்த புத்திரியா?' என்றான் கேலியாய்.

'தெரியவில்லையா...? நீ சிறுவயதல் பார்த்திருப்பாயே... மஞ்சரி... அவளேதான்! இப்போது நெடுநெடுவென வளர்ந்து விட்டாள்...' கனகம் சொல்ல... திவாகரன் அவளை உற்றுப் பார்த்தான். மஞ்சரியும் அதே போல் அவனை அளவெடுக்கும் பார்வையை ஆர்வமாய் மேலிருந்து கிழ்வரை ஓடவிட்டாள்.

அதை கவனித்தவன், 'ஆனாலும் முறைமாமனை இப்படி முறைக்காமல் கொஞ்சம் வெட்கப்பட்டால் நன்றாக இருக்கும்...' எனச் சொல்லவும் மஞ்சரி சட்டென தன் பார்வையைத் தாழ்த்தியவள் உதட்டைக் கடித்தபடி முகம் சிவந்தாள்.

'இந்த வெட்கம் போதும் மஞ்சரி...' என திவாகரன் கேலி செய்ய... மறுபடியுமஅங்கு ஒரே சிரிப்பு.



அப்போதுதான் கனகம் கவிதா வாய் விட்டு கலகலவென நகைப்பதையும் திவாகரன் பார்வை அடிக்கடி அவள் பக்கம் செல்வதையும் கவனித்து விட்டாள்.

உடனே முகம் மாறியவளாய் கவிதாவை பார்த்து, 'என்ன பெண் நீ? வந்த விருந்தினரை உபசரிக்காமல் நீயும் நின்று கொண்டு போ! போய் திவாவுக்கு உணவை ரெடி பண்ணு...!' என அவளை விரட்டினாள்.

கவிதா அங்கிருந்து பாயாத குறையாய் சமையலறைக்குள் மறைந்தாள்.

பின் திவாகரன் நடுநயமாக அமர மூவரும்அவனைச் சூழ உட்கார்ந்து கொண்டார்கள்.

ஒரு அரைமணிநேரம் ஒரே பேச்சுதான்..!

திவாகரன் தன் அம்மா அப்பா அவர்கள் கோபித்துக் கொண்டு டெல்லியிலே தங்கிவிட்டதில் ஆரம்பித்து... தான் வேலை விஷயமாய் ட்ரான்ஸ்பராகி இங்கு வந்தது வரை கதைபோல் சொல்லி முடித்தான்.

தாயும்,தந்தையும் அப்படி கோபித்து இவ்வளவு வருடங்கள் பாராமுகமாய் இருந்து விட்டதற்கு ரொம்பவும் வருத்தப்படுவதாகவும் திரும்பவும் உதடுகளை புதுப்பித்துக்கொள்ள அவர்க்ள ஆசைப்பட்டதாகவும், அந்நேரம் பார்த்து தனக்கு சென்னைக்கு மாற்றல் கேட்டு வந்து விட்டதாகவும் தெரிவித்தான்.

சரி... அவர்களும் உன்னுடன் வந்திருக்கலாமே? என குருநாதர் கேட்டதற்கும் விளக்கம் கொடுத்தான் அவன்...

அவர்கள் உடன் வர கிளம்பியதாகவும் தான் தான் தடுத்து இங்கு பேசி நிலைமையை கோபத்தை எல்லாம்சரி செய்துவிட்டு அவர்களை வரவழைத்துக்கொள்வதாக சொன்னதாகவும் விவரித்தான்.

எங்களுக்கு அப்படியெல்லாம் கோபம் ஒன்றும் இல்லையே? கோபம் இருப்பதாய் யார்... சொன்னது? அப்பாவியாய் கைகளை விரித்தார் குருநாதர்.

'இல்லை மாமா... நீங்கள் அவர்கள் மீது கோபப்படவேண்டும். ஏதோ ஒரு சின்னப் பிணக்கில் இப்படி வீறாப்பாய் எத்தனை வருடங்கள் பார்க்காமல் பேசாமல்

இருந்திருக்கிறார்கள்? கூட்டி வந்து உங்கள் முன் நிறுத்துவேன். நீங்கள் கோபமாய் சண்டைபோட வேண்டும். நான் தலையிட்டு சமரசம் செய்வேனாக்கும். சரிதானா?' எனத் திவாகரன் சீரியஸான முகத்துடன் கேட்க சட்டென சிரித்தார்கள். அவர்கள்.

'அன்னபூரணியின் பிள்ளை அல்லவா... பேசக் கற்றுக்கொடுக்கவா வேண்டும்?' என கனகம்சொல்ல அதற்கும் திவாகரன் விடாமல், அத்தை 'அப்படியானால் என் அம்மாவுக்கும் நன்றாக பேச வருமா? இவ்வளவு நாள் அவர்களை பேச்சு வராத ஊமையென்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்..?' என்று சொல்லி மறுபடியும் சிரிக்கவைத்தான்.

அவர்களது பேச்சும், சிரிப்பும் சமையலறையில் அவசர அவசரமாய் உப்புமாவை கிளறிக்கொண்டிருந்த கவிதாவின் காதுகளில் விழுந்து கொண்டுதான் இருந்தது.

அவளுக்கு திவாகரனை பார்த்ததில் இருந்து ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவளும் எத்தனையோ ஆண்களை சந்திக்கத்தான் செய்கிறாள். ஆனால் சிரிக்கச் சிரிக்க பேசும் இந்த இனிய சுபாவம் சட்டென எளிதில் பேசிப் பழகிவிடும் இந்த வசீகரத்தன்மை இதுவரை அவள் யாரிடமும் காணாதது. அதனாலே அவனைப் பார்க்க அவன் பேச்சை கேட்க அவளுள் ஆவல் அதிகரித்தது.

அதனால் உப்புமாவை சுவைபட உருவாக்கியவள் அதை பீங்கான் பிளேட்டுகளில் வைத்து எடுத்துக் கொண்டு முன்னறைக்கு ஓடினாள். அதை நேராய் அவனிடமேபோய் கொடுக்க.. ஆவலாய் வாங்கிக் கொண்டான் திவாகரன்.

பின் பேசியபடி ரஸித்தும் சாப்பிட ஆரம்பித்தான்.

பின் ஏதோ தோன்றியவனாய் சட்டென பேச்சை நிறுத்தியவன் நிமிர்ந்து, கவிதாவைப் பார்த்தவாறு, 'ஆமாம். இந்த அழகி யாரென்று சொல்லவில்லை. நீங்கள் அறிமுகப்படுத்தவே இல்லையே..?' என்றான் ஒருவித குறும்புடன்.

அவன் அப்படிக் கேட்பான் என கவிதாவே கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதைவிட அப்படி ஒருவிதஆழமான பார்வையுடன், 'அழகி' என திவாகரன் விளித்துக் கேட்டது



பிடிக்காமல் அத்தையின் முகமும் மஞ்சரியின் முகமும் எரிச்சலாகி ஒருசேர கறுப்பதைக் கண்டு ரொம்பவே திடுக்கிட்டாள் கவிதா.




திவாகரன் அப்படி 'அழகி...' என்று அவளைச் சொல்லிவிட்டு கண்கள் விரித்து அப்படி ஒரு பார்வை பார்க்க... கவிதாவிற்கு ஒரு கணம் என்னவோ போல் தான் ஆயிற்று.

அவள் அறிந்திராத விதமாய் இதயம் சந்தோஷமாய் துடித்து ஒருவித படபடப்பைக் காட்டிய போதும், அத்தையும் மஞ்சரியும் இதனால் முகம் மாறுவதைக் கண்டு துணுக்குற்றாள்.

அவன் திவாகரனோ இன்னும் பார்வையை அவளிடமிருந்து விலக்காமல் தான் சொன்ன கூற்று மெய்தான் என ரஸித்தபடி உணர்த்திக் கொண்டிருந்தான்.

இதனால் சங்கடப்பட்டவள் கவிதா தான்.

அதனால் சூழ்நிலையை சற்று மாற்றுமவிதமாக, 'அவர்கள் விளையாடுகிறார்கள் அத்தை. உங்களைத் தேடி வந்து விசாரித்தபோதே என்னைப் பற்றிய அனைத்து விபரங்களையும் கூறிவிட்டேன்...' என்றாள் அதை விளக்குவது போல்.

அதற்கு திவாகரனோ, 'அது... என்ன... 'அவர்கள்? எனக்கு அத்தனை மரியாதைகள் எல்லாம் தேவையில்லை. உனக்கும் நான் அத்தான்தானே? அத்தான் என்றே என்னைக் கூப்பிடு...' என்றான்.

கவிதா அதற்கு பதில் சொல்லாமல் மஞ்சரியை பார்க்க அவள் முகம் மேலும் கறுத்தது.

அதற்கு மேலும் அங்கு நிற்பது சரியல்ல என்ற நினைப்பில் திரும்பவும் சமையலறைப் பக்கம் ஓடிவிட்டாள் அவள்.

தொடர்ந்து மூவரும் பேசினார்கள் அவர்கள் பேச்சில் இருந்து முதல் இரண்டு நாள் திவாகரன் அவர்களுடன் தங்கப் போவதற்காகவும் மூன்றாம் நாள் முதல் அவன் நண்பன் ஒருவனுடன்பேச்சிலர் ஹாஸ்டலில் தங்கப் போவதாகவும் தெரிந்து கொண்டாள்.

குருநாதரும் கனகமும், நம் வீடு இருக்க.. ஹாஸ்டல் எதற்கு? என வற்புறுத்திய போதும் பிடிவாதமாய் மறுத்துவிட்டான் திவாகரன். மேலும் தனது கம்பெனியின் ப்ராஞ்ச் மேனஜராய் இங்கு மாற்றலாகி வந்திருப்பதால் அவன் வேலை பார்க்கும் டைல்ஸ் கம்பெனியின் முழுப்பொறுப்பும் அவன் தான் எனவும், அதனால் இரவு நேரங்களில் லாரி லோடு வரும் சமயமெல்லாம் சூபர்வைஸ் செய்ய செல்ல வேண்டும் என சில காரணங்களைக் கூறி சமாளிக்கவும் செய்தான்.

ஆனால் குருநாதர் தினம் காலை உணவிற்கு கண்டிப்பாய் வீட்டிக்கு வந்து விட வேண்டும் என அன்புக் கட்டளை போட்டதும் மனமுவந்து சம்மதிக்கவும் செய்தான் அவன்.

அதன்பின் நேரமாகிவிட்டதை உணர்ந்து படுக்கச் சென்றார்கள். திவாகரன் மொட்டை மாடியில் உள்ள ஒற்றை ரூமில் படுத்துக் கொண்டான். மறுநாள் சீக்கிரமே அலுவலகம் செல்ல காலையிலேயே கிளம்பிச் சென்றான்.

மாலை வந்தான் மறுபடியும் குருநாதர் கனகம் அவனுடன் உட்கார்ந்து பழைய கதைகள் பேசினார்கள். டெல்லியில் தான் படித்தது, வளர்ந்த விதம் எல்லாவற்றையும் விவரித்தான் திவாகரன்.

மஞ்சரி அவ்வப்போது வந்து அவர்கள் பேச்சில் கலந்து கொண்டாள். கவிதாதான் சமையலறையே கதி என கிடக்க வேண்டியதாயிற்று.

ஆயினும் அவள் காதுகள் இரண்டும் தானாகவே கூர்மையாகி அடிக்கடி காதில் விழும் அந்த திவாகரனின் பேச்சைக் கேட்கவே ரொம்பவும் பரபரத்தது.

இதில் தற்செயலாகவோ இல்லை அவளும் தன் பேச்சை கேட்க வேண்டும் என்றோ திவாகரன்தான், தண்ணீர்... காபி... என ஏதாவது கேட்டு அவளைக் கொண்டு வரும்படி சொல்லிக் கொண்டிருந்தான்.

அவளும் தம்ளரைக் கொண்டு பயபக்தியாய் அவனிடம் நீட்டிக் கொண்டிருந்தாள். அதை கவனித்து, 'அத்தான் என்றால் அப்படி ஒரு பயம் இருக்க வேண்டும்...' என அவளை செல்லமாய் மிரட்டிச் சிரித்தான் அவன்.



யாரும் அறியாமல் அவனுக்கு மட்டும் தெரியும் படி உதட்டை வலித்துக் காட்டி, இந்தக் கேலிக்கு எல்லாம் பயப்படுகிற ஆள் நான் இல்லை... எனச் சொல்லாமல் சொன்னாள் அவள்.

அன்று திவாகரன் வந்து சென்று விட்ட பிறகு மஞ்சரி அவளைத் தேடி வந்தாள். ஷாப்பிங் போகலாமா? என்றதும் கவிதா உற்சாகமாகி அவளுடன் கிளம்பிவிட்டாள்.

கடைத்தெரு வரை நானும் கவிதாவும் போகிறோம்... என்று அவளே கனகத்திடம் சொல்லிவிட்டு அவளை அழைத்துச் சென்றாள்.

பொதுவாக மஞ்சரி அவளிடம் ஒருவித அன்பை பாசத்தை காட்டுபவள் தான் பார்! உன் சூழ்நிலை... அப்பா, அம்மாவை பறிகொடுத்து விட்டு இப்படி வந்து மாட்டிக் கொண்டாய். அவர்கள் மட்டும் இன்று உயிரோடு இருந்தால் உன்னை ஜாம் ஜாமென்று வளர்த்திருப்பார்களே...! என அடிக்கடிச் சொல்லி இரக்கப்படுவாள்.

கூடவே, ஆனால் பார் என் வீட்டிலும் அப்பா ஒருவர்தான் சம்பாத்யம், அந்த குறைந்த சம்பாத்யத்தில் உன்னையும் படிக்க வைக்க முடியாமல் போயிற்று! எனவும் சலித்து பரிதாபம் காட்டுவாள்.

மேலும் அஞ்சல் வழிப்படிப்பாய் அவள் டிகிரி படிக்க வைக்க கனகம் யோசித்தபோது மஞ்சரிதான் கவிதாவிற்காக வாதாடி சம்மதிக்க வைத்தாள்.

அவளின் அது போன்ற பாசத்தைக் கண்டு கவிதாவும் நெகிழ்ந்துதான் போவாள். அதனால் மஞ்சரியின் உடைகள், துணிமணிகளை எல்லாம் ஒன்று விடாமல் துவைக்கும் பொறுப்பை தானே மனமுவந்து ஏற்றுக்கொண்டாள்.

கனகம் வேலை அதிகமாக இருக்கும் நேரத்தில் மஞ்சரியை ஒத்தாசைக்காக வரக் கூப்பிட்டாலும் அவளை உடல் வலிக்க ஒரு வேலை செய்ய விடமாட்டாள் கவிதா.

அதனால் இருவருக்கும் சிறு வயது முதல் ஒத்துப்போய் தோழிகள் போலவே இருவரும் பழகி வந்தனர். அந்த அன்பிலே எங்காவது கடைத்தெருப் பக்கம்போய் அங்குள்ள பேன்ஸி கடைகளில் ஜிமிக்கி, தொங்கட்டான், முகப் பாலிஷ் என தனக்கு வாங்கும் போது கவிதாவிற்கு அவள் மறுத்தும் பிடிவாதமாய் வாங்கிக்

கொடுப்பாள் மஞ்சரி.

அன்றும் அப்படியே இருவரும் கிளம்பினார்கள்.

அன்று கடைத்தெரு பஜாரில் மஞ்சரி என்றுமில்லாததாய் நிறைய பொருட்கள் வாங்கினாள்.

விதவிதமான ஸ்னோக்ரீம்கள், தொங்கட்டான்கள், ஜடை மாட்டிகள், ஜிகினா சமாச்சாரங்கள் என கண்ணில் பட்டதை எல்லாம் வாங்கினாள்.

திரும்பி கவிதாவையும் அவள் பங்கிற்கு எதாவது எடுத்துக் கொள்ளுமாறு சொல்ல கவிதா ஒரே ஒரு நெயில் பாலிஷை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

அதற்குமேல் அவள் விருப்பப் படவில்லை. மஞ்சரிக்கு செலவு வைக்கவும் விரும்பவில்லை!

ஆனால் மஞ்சரி அழகுப்பொருட்களை எல்லாம் அப்படித் திடீரென தேடிப்பிடித்து வாங்குவதற்கு என்ன காரணமாயிருக்கும் என்றுதான் புரியாமல் குழம்பினாள்.

ஆனால் மறுநாள் திவாகரன் வரும் சமயமாய்ப் பார்த்துஅவள் அதிக கவனத்துடன் அலங்காரங்கள் செய்ய ஆரம்பித்ததுதான் கவிதாவை திகைப்புறச் செய்தது.

நேற்று கடைத்தெருக் கடையில் வாங்கி வந்த தொங்கட்டான்கள், தலைமாட்டிகள் புதுவகை க்ரீம்கள் என ஒன்று விடாமல் போட்டு முகத்தை பாலிஷ் செய்யாதகுறையாய் அழகு பார்த்தாள். கண்ணாடி முன் அரைமணி நேரம் செலவழித்து செய்தவள் கண்ணாடியில் உடலை முன்னும் பின்னும் திருப்பி அழகுபார்த்துவிட்டு திருப்தியடைந்தாள். திவாகரனுக்காக கதவையும் வாசல்புரத்தையும் அடிக்கடி பார்த்தபடி அவள் நடந்த போதுதான் கவிதா விஷயத்தைப் புரிந்து கொண்டாள்.

அவளுக்கு ஏனோ மஞ்சரியின் அந்த செய்கை சுத்தமாய் பிடிக்கவில்லை. எதற்காக இப்படி ஒரு வண்டி மேக்கப்புகளை போட்டுக்கொண்டு அவன்முன் போய் மயக்குக்காரிபோல நிற்க வேண்டும்? என நினைத்தாள்.

கூடவே அவன் செய்தால் செய்துவிட்டுப் போகட்டுமேஎன்று ஒதுக்கி விட்டுப் போக மனமில்லாமல் புதியதாய்இதயத்தில் ஒரு குறுகுறுப்பு உண்டாகுவதையும்



திடுக்கிடலாகவே உணர்ந்தாள்.

அதனாலோ என்னவோ..அவளும் தன்னையறியாமல் நிலைப்படிசுவர் அருகே இருந்த சிறிய கண்ணாடியில் தன் முகத்தையும் அழகு பார்த்தாள்.

நெற்றியில் படர்ந்த சுருள் முடிக் கற்றைகளை ஒழுங்குபடுத்தியபடி அவள் இப்படி அப்படி தன்னைக் கண்ணாடியில் அழகு பார்க்கும் சமயம் பார்த்தா... பின்னால் திவாகரன் தோன்ற வேண்டும்?

'ஆஹா... இளவரசியார் அழகு படுத்தும் படலமா?அந்தப்புறத்தில் அத்துமீற நுழைந்து விட்டேனோ?'

குரல் கேட்டுத் துள்ளித் திரும்பியவள் பின்னால் குறுகுறுப்பாய் நின்றவனைக் கண்டு முகம் சிவந்துதான் போனாள்.

பின் சமாளித்து, 'ஒன்றுமில்லை...! ஒன்றுமில்லை...!' என்றாள்.

'ஒன்றுமில்லையா...? பின் எதற்காக இந்த அழகு பார்க்கும் ஒப்பனை...?' என்றவன் சட்டென குரல் தாழ்த்தி, 'யாருக்காக? யார் வரவையும் எதிர்பார்த்தோ?' என அதே குறுகுறுப்பு பொங்க எதையோ கண்டுபிடிக்க விரும்புவது போல் கேட்க, ஐயைய்யோ...! என பதறியே விட்டாள் அவள்.

அதற்குள் பேச்சுஅரவம் கேட்டு தன் தனியறை ஜன்னலில் திவாகரனுக்காக காத்துக் கிடந்த மஞ்சரி திகைப்பாகவே வந்து விட்டாள்.

'எப்படி அத்தான் உள்ளே நுழைந்தீர்கள்? நான் தான் முன்புறம் விடாமல் பார்த்துக் கொண்டிருந்தேனே?' என்றாள் திகைப்பை விடாமல்.

வீட்டுத் தோட்டத்து பின்புறக் கதவைக் காட்டினான் திவாகரன்.

'வரும் வழியில் அந்தக் கதவு திறந்தபடி கிடக்க இப்படி வந்துதான் பார்ப்போமேஎன தோட்டம் வழியாக வந்து விட்டேன்.

இங்கு அப்படி சத்தமில்லாமல் நுழைந்து உள்ளே வந்து பார்த்தால் இந்தக் கவிதா.... என்று ஆரம்பித்த திவாகரன் அதைஅப்படியே நிறுத்தி விட்டு கவிதாவைப் பார்க்க இவன் அதையும் மஞ்சரியிடம் சொல்லிவிடக் கூடாதே என்ற

பதற்றத்தோடு... கவிதா பல்லைக் கடித்தவள் 'அச்சச்சோ...!' என கைகளை உதறிக்கொண்டு பதறத்தான் செய்தாள்.

அதை ரஸிப்புடன் கவனித்தவன் சட்டென மாற்றி, வந்தால்... 'இந்தக் கவிதா இப்படி பல்லைக் கடித்துக் கொண்டு நிற்கிறாள்...' எனச் சொல்லி முடிக்கவும் 'அப்பாடா...' என நிம்மதி கொண்டாள் அவள்.

ஆனால் மஞ்சரியோ இது என்ன வெட்டிப் பேச்சு? என்பதுபோல் முகம் சுருக்கி, 'திவா அத்தான் என்னைக் கொஞ்சம் பாருங்களேன். என் அலங்காரங்கள் எப்படி?' என்றாள் குரலிலும், உடம்பை வளைத்து தோற்றத்திலும் மிடுக்கு காட்டியபடி.

'இப்படி வெட்கமில்லாமல் கேட்கிறாளே..? என கவிதா வியக்க, திவாகரனோ மஞ்சரியை மேலும் கீழும் அளவெடுப்பதுபோல் பார்த்தபடி, 'அலங்காரங்கள் ஒப்பனைகள் எல்லாம் சரிதான். ஆனால் இயற்கையான அந்த இளவரசியார் முன் இந்த அழகு எடுபடாமல் தோற்றுப் போய் விடுகிறதே?' என அவளையும் கவிதாவையும் மாறி மாறி பார்த்தபடி சொல்ல... மஞ்சரிக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆனால் கவிதாவிற்கு சுருக்கென புரிந்து தூக்கி வாரப்போட்டது.

கொஞ்ச விநாடிகளுக்கு முன் இளவரசி என திவாகரன் விளித்தது அவளைத்தானே?

அப்படியானால்...?

தன்னை தன் அழகை இவ்வளவு தூரம் கவித்து பாராட்டுகிறானா?என முகம் சிவந்தவள் குனிந்தபடியே நின்றாள்.

உள்ளுக்குள் பட்டாம்பூச்சிகள் பறந்தாலும் அதை வெளிக்காட்டாமல் பக்கத்தில் மஞ்சரி நிற்கிறாளே... என்று அவளைப் பார்த்தாள்.

மஞ்சரி திவாகரன் சொல்லியதின் அர்த்தம் விளங்காமல் திருதிருவென விழித்துக் கொண்டிருந்தாள்.

'என்ன அத்தான் சொல்கிறீர்கள், இளவரசியா...? யார் அது...? நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே...?' என்றாள்.

'புரிய வேண்டியவர்களுக்கு புரிந்தால் சரி...' என்றான் திவாகரனும் விடாமல்.



குனிந்த கவிதாவோ நிமிர்ந்து அவனைப் பார்க்க முடியாமல் தலையை குனியவே வைத்திருந்தாள். நிமிர்ந்தால் திவாகரன் எதாவது ஜாடை காட்டியோ, சிரித்தோ... குறுகுறுப்பாய் ஏதோ... ஒரு சைகை செய்து விடுவான். பின் அதை மஞ்சரி பார்த்து விட்டால் அவ்வளவுதான்?

அவள் தவிப்பாய் பயந்து நடுங்க திவாகரனே சூழ்நிலையை மாற்றியவனாய், 'அந்தக் காலத்து இளவரசி போல் நீ அழகுதான்! அதைத்தான் சொல்ல வந்தேன்!' என முடித்தான். அப்படி முடித்து விட்டு கவிதாவை நோக்கித் திரும்பி, 'என்ன நான் சொல்வது சரிதானே?' என கண்களைச் சிமிட்டியபடி மஞ்சரி அறியா வண்ணம் அந்தச் சைகையையும்செய்தான்.

அதைக் கவனியாதவள் போல் விடுவிடுவென உள்ளே ஓடிப்போனாள் அவள்.

பின் மஞ்சரி திவாகரனை தன் ரூமிற்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து தனது கல்லூரி புத்தகங்களை எடுத்து அவன் முன் அடுக்கினாள்.

என்ன மஞ்சரி இது?

'அத்தான்... நான் படிக்கும் இயற்பியல் படிப்பில் ஏகப்பட்ட சந்தேகங்கள்... நீங்கள்தான் விளக்கி புரிய வைக்க வேண்டும்...' என்றாள். உள்ளுக்குள் இன்று இதை சாக்கு வைத்தாவது ஒரு மணிநேரம் வேனுடன் பேசிப் பழகிவிட வேண்டும் என்ற ஆவல் அவளுள் துடித்தது. 'என்னை... என்ன அவ்வளவு மேதாவியாய், படிப்பில் புலி என்று நினைத்து விட்டாயா மஞ்சரி?' என்றான் திவாகரன் ஆச்சரியப் பார்வையுடன்.

'என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் பெரிய மேதாவிதான் அத்தான். எவ்வளவு விஷயங்களை தெரிந்து வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு தீர்க்கமாய் பேசுகிறீர்கள்? நிச்சயமாய் நீங்கள் ஒரு ஜீனியஸ்தான்...!' என்ன அவள் முடிக்கவும் திவாகரன் கடகடவென சிரித்தான்.

'ஏய்.... ஏய்.... ரொம்பவும் ஐஸ் வைக்காதே! யார் உனக்கு இப்படியெல்லாம் பேசக் கற்றுக்கொடுத்தார்கள்?' என்றான் நம்ப முடியாத குறும்புப் பார்வையுடன்.

'ஐயோ! நிஜமாகத்தான் சொல்கிறேன். வேண்டுமானால்

சத்தியம் செய்யட்டுமா?' என்றபடி டக்கென திவாகரனின் தலையில் தன் கையை வைத்துக் காட்ட திவாகரனே திடுக்கிட்டுப் போய்விட்டான்.

அந்த நேரம் பார்த்து கவிதா திவாகருக்கான காபியை கோப்பை ஒன்றில் கொண்டு வந்தபடி அங்கு நுழைந்தாள்.

நுழைந்தவள் திவாகரன் மர இருக்கையில் அமர்ந்திருப்பதையும் அவன் தலையில் மஞ்சரி கைவைத்திருப்பதையும் பார்த்து திடுக்கிட்டாள்.

அதைவிட அவள் நுழைந்ததைப் பார்த்த மஞ்சரியின் முகம் அஷ்ட கோணலாகி எரிச்சலுக்குப் போனது.

திவாகரனோ நிலைமையை சமாளிக்கும் விதமாய் எழுந்து விட்டவன் மஞ்சரி தன் தலையில் வைத்த கையை விலக்கி, 'மஞ்சரி அதற்காக வயது வந்த பெண் இப்படி ஆண்களின் தலையில் எல்லாம் கை வைத்து தொடுதல் கூடாது...' என்றான் லேசாய் கண்டிப்பது போல்.

ஆனால் அதற்கு மஞ்சரி பற்களை காட்டி, 'நீங்கள் வேறு யாரோவா.... என் அத்தான் தானே? அந்த உரிமையில்தான் தொடுகிறேன்...' என்றாள் அசடு வழிய.

'நானும் அந்த உரிமையில்தான் உன்னை கண்டிக்கவும் செய்கிறேன்...!' என திவாகரன் அழுத்தம் கொடுத்துச் சொல்ல, மஞ்சரியின் முகம் சட்டென கூம்பிச் சிறுத்தது.

நடக்கும் இதை எல்லாம் கவிதா வேறு பார்த்துக் கொண்டிருக்கிறாளே என்ற எரிச்சலுடன் திரும்பி கவிதாவை பார்த்தாள். 'உன்னை யார் இங்கு காபி கொண்டு வரச் சொன்னது?' என தன் கோபம் முழுவதையும் அவளிடம் காட்டினாள்.

கவிதா என்ன பதில் சொல்வது எனப் புரியாமல் திணற, 'நான் தான் கொண்டு வரச் சொன்னேன். வரும்போது சைகை செய்தேன்..!' என்றான் திவாகரன் குறுக்கிட்டு அவளைக் காப்பாற்றும் விதமாய்.

ஆனால் மஞ்சரி அதற்கும் விடாமல், 'சரி... சரி... கொடுத்து விட்டுப் போ...! நிறைய சமையல் வேலைகள் இருக்கும். அம்மா தேடுவாள்...' என அவளை விரட்டினாள்.

கவிதா கிட்டத்தட்ட பயந்துதான் தப்பித்தோம் பிழைத்தோம் என அங்கிருந்து ஓடி வந்தாள்.



மஞ்சரி தன்னிடம் கோபப்பட்டது எரிச்சலாய் முகத்தை கோணலாக்கி ஒருவித விரட்டும் தொனியில் பேசியது எல்லாம் அவள் கொஞ்சமும் எதிர்பாராதது. இதுவரை அவள் ஒருநாளும் அப்படிக கோபப்பட்டதோ..... இப்படி கடுகடுத்ததோ.... கிடையாது. இன்று... மட்டும் ஏன்? திவாகரனா... திவாகரனுடன் அவள் இருக்கும்போது.... கரடி போல் அவள் நுழைந்து விட்டதலா? அதுதான் காரணமா?

அப்படியானால்?

மஞ்சரியின் நோக்கம் காரணம் எல்லாம் தெள்ளத் தெளிவாய் அவளுக்கு புரிபட... பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானாள் கவிதா!

## 5

அன்று கிட்டத்தட்ட அரைமணி நேரம் பாடங்களில் ஏதேதோ சந்தேகம் கேட்பது போல்தான் திவாகரனுடன் கேள்விகளைக் கேட்டு பேசி பொழுதை ஓட்டினாள் மஞ்சரி.

அவளுக்கு திவாகரன் தன்னை நன்றாகப் பார்த்தானா.... என்று கூட அடிக்கடி சந்தேகம் உதித்தது போலும். அதனாலே இரண்டொருமுறை வாய் விட்டே, 'என் அலங்காரம் எப்படி? புது காதணி, புது ஜடைமாட்டி, கழுத்து டாலர் செயின், இந்த தாவணி கூட புதிதுதான் இப்போதுதான் கட்டுகிறேன்...' என்றெல்லாம் சொல்லி திவாகரன் கவனத்தை ஈர்த்து தன்னை பார்க்க வைத்தாள்.

திவாகரன் நெற்றியை சுருக்கி ஒரு கணம் பார்த்தாலும் மறுகணமே முகத்தை மாற்றிக் கொண்டு, 'அழகை விட அறிவும் முக்கியம் மஞ்சரி. இந்த வயதில் நீ படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்...' என அறிவுரை சொல்லி அவள் எண்ணத்திற்கு எதிர்பார்ப்பிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முயன்றான்.

அனால் அதே திவாகரன் கிளம்புகையில் பின்புற தோட்டப்பக்கம் நின்ற கவிதா பக்கம் வேண்டுமென்றே வந்து யாருமறியாமல், 'வருகிறேன் இளவரசியாரே...' என விடைபெற்று

விட்டுப் போனான்.

அவன் அப்படித் தன்னைத் தேடி வந்து சொல்லிவிட்டுப் போனதுஅவளை உச்சிகுளிர வைத்து, பெரும் கிளர்ச்சியை இதயத்தில் இளப்பினாலும் யாரும் இதை பார்த்துவிடக் கூடாதே என்றுதான் பயந்து நடுங்கினாள் அவள்.

அனால் அன்று இரவு திவாகரன் தன்னிடம் அப்படியெல்லாம் பேசியதை நினைத்து நினைத்து மகிழ்ந்தாள். தூக்கம் வராமல் புரண்டாள், எல்லாவற்றையும் விட அனாதையாய் யாருமற்ற தன் மீது இவ்வளவு பாசம் காட்டுகிறானே.... இவன் நல்லவன்...மிக மிக நல்லவன்... குணத்தில் ரொம்பவும் உயர்ந்தவன்... என்றெல்லாம் குதூகலம் கொண்டாள்.

கூடவே ஒரு ஜாக்கிரதையுணர்வு எழுந்து அவளை எச்சரிக்கவும் செய்தது. மஞ்சரி என்னவோ அத்தான் அத்தான்... என திவாகரனையே ஒருவித எண்ணத்துடன் சுற்றி வருகிறாள். அதனால் தான் திவாகரனுடன் ஒரு வரைமுறையுடன் மனதை வீண் கற்பனைகளுக்கு ஆளாக்காமல் பழகுவதே நல்லது என தனக்குத்தானே சொல்லியும் கொண்டாள்.

ஆனால்....

மறுநாளே அவள் நினைத்த நினைப்பு எல்லாம் தகர்ந்து போகும்படி திவாகரன் ஒரு காரியத்தைச் செய்தான்.

மறுநாள் மளிகைச் சாமான்கள் வாங்க கவிதா கடைத்தெருவிற்கு வந்திருந்தாள். வழக்கமாய் அவளும் மஞ்சரியுமே அரட்டையடித்தபடி வாங்கிச் செல்வது வழக்கம்.

செமஸ்டர் பரிட்சை வருவதால் படிக்கவேண்டும் என மஞ்சரி ஒதுங்கிக்கொள்ள அவள் மட்டும் வந்திருந்தாள். தான் வழக்கமாய் வாங்கும் ஸ்டோரில் வாங்கிவிட்டு கூடையுடன் திரும்பும்போதுதான் அந்தக் குரல் அவளை நிறுத்தியது.

'ஹலோ... கவிதா...'

திரும்பிப் பார்த்தாள்... பின்புறமஅவனது டூவீலரில் உட்கார்ந்தபடி திவாகரன்! அவன் அமர்ந்திருந்த விதத்தைப் பார்த்தால் அவளைக் கடந்துதான் அவள் மளிகைக் கடைக்குச் சென்றிருக்க வேண்டும். அவள் அவனை கவனியாமல் சென்றிருக்கிறாள். அவன்தான் அவளைப் பார்த்துவிட்டு அவள்



வரட்டும் என தனது வண்டியில் செல்லாமல் நின்றிருக்கிறான்.

தனக்காக காத்திருக்கிறானா? என அவள் மகிழ்ச்சியாய் நினைக்கையிலேயே, 'உன்னை பார்த்துவிட்டுத்தான்... காத்திருக்கிறேன் கவிதா...' என உறுதி செய்தான் அவன்.

தன் பெயரைஅப்படி அவன் உச்சரிப்பதே விசித்திரமாய் ஆனந்தமாய் இருந்தது அவளுக்கு. என்னவோ பல்லாண்டு அவளுடன் பழகியது போல் எவ்வளவு இயல்பாய் உரிமையாய் அழைக்கிறான்?

அவள் வியப்பை மேலும் அதிகரிக்கும் வண்ணம் கையிலிருந்த ஹெல்மெட்டை அப்படியே வண்டியில் மாட்டிவிட்டு, எங்காவது போய் பேசுவோமா? என்றான் அதே இயல்புடன் பேசவா....?

அவள் அதிர்ந்தாள்.

அவள் முகத்தின் திகைப்பை பார்த்துவிட்டு 'உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்...' என்றான்.

அவளுக்கு என்னவோ உள்ளுக்குள் படபடத்தாலும் மஞ்சரியின் கோபமான முகமும், அத்தையின் ஒருவிதமான பார்வையும், ஞாபகத்தில் வந்துவிட்டுப் போக அவசரமாய் மறுத்து தலையாட்டினாள்.

'நேரமாகி விடும்..அத்தை தேடுவார்கள்...' என்றாள்...

திவாகரன் கடகடவென சிரித்தான்.

'அட...ஏன் பயப்படுகிறாய்? நீ என்ன சிறு பிள்ளையா தொலைந்து போவதற்கு...? நானே உன்னை பத்திரமாய் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன்... போதுமா?' எனவும் அவளது தயக்கம் அதிகரிக்கத்தான் செய்தது.

அவள் மட்டும் அவனுடன் வீட்டிற்கு சேர்ந்து வந்து இறங்கினாள்... அவ்வளவுதான்!...

மேலும் பயந்தவள் அதை மறைத்தவாறு, 'என்ன பேசவேண்டும்?' என்றாள்.

'உன்னைப் பற்றித்தான்! என்னுடன் வா!' சுட்டுவிரலால் அவளை நோக்கி காட்டியபடி நடக்க ஆரம்பித்துவிட்டான்.

அவள் எப்படியும் பின்னால் வருவாள் என்ற தைரியத்தில் ஒரு எட்டு முன்னால் நடந்தவன் சட்டென நின்று, ரெஸ்ட்டாரண்ட்

போய் எதாவது சாப்பிட்டபடி பேசலாம்... ஆனால் நீ... பயந்து நடுங்குவாய்... என ஆரம்பித்து அவனே பதில் சொல்லி விட்டு எதிரில் தெரிந்த பூங்காவை காட்டினான்.

'அங்கு போய் பேசுவோம்...!'

அவன் முன்னால் நடக்க தலையாட்டியபடி பின் தொடர்ந்தாள் அவள்.

காலை நேரமானதால் பூங்காவில் அவ்வளவு கூட்டமில்லை. மரநிழல் ஒன்றில் இருந்த பெஞ்சில் உட்கார்ந்தபடி அவளையும் உட்காரச் சொன்னான்.

அவன் என்ன பேசப் போகிறான்? எதைப் பற்றி பேசுவான்? என்ற ஆவல் அவளுள் பன்மடங்கு பெருகி நிறைய எதிர்பார்ப்புகளை உண்டாக்கியது. எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு அவனை சலனமில்லாமல் பார்த்தாள்.

'நான் ஊருக்கு வந்ததும் என்னை பாதித்த முதல் விஷயம் நீ தான்...' என ஆரம்பித்தான் திவாகரன்.

அவள் மைவிழிகள் முழுவதையும் விரித்து திகைப்பாய் அவனைப் பார்த்தாள்.

'விரிவாய் சொல்லுகிறேன்...' என்றபடி அவளைப் பற்றி மடமடவென பேச ஆரம்பித்தான். அவளுடைய சிறுவயது இழப்பு,சோகம் பற்றியெல்லாம் பேசியவன் கடைசியில் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நீ உன் அத்தைக்கு பாரமா இருக்கப் போகிறாய்? என்று கேட்டதும்தான் அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

விளையாட்டில்லை. இவன் நிஜமாகவே சீரியஸான விஷயம் ஒன்று பேசத்தான் தன்னை அழைத்திருக்கிறான் என்று புரிந்து கொண்டாள்.

அவனே தொடர்ந்து, 'புரியவில்லை உனக்கு? இன்னொருவருக்கு நாம் சுமையாக இருந்தால் அவர்களே கதி என்று நம்பி இருந்தால் அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டு சகித்துதான் ஆக வேண்டும்...' என்றவன் அவளைநோக்கித் திரும்பி, 'நேற்று என் முன்னிலையிலேயே மஞ்சரி உன்னை அந்த விரட்டு விரட்டுகிறாள்.... எனக்கு.... எனக்கு... எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா?' என குரல் உயர்த்தி முடிக்கவும் திகைப்பாகவே



அவனைப் பார்த்தாள் அவள்.

என்னை விரட்டியதும் கோபம் வந்ததா...? எனக்காக வரிந்து கட்டிக்கொண்டு ஆத்திரப்படுகிறானா...? நம்மீது இரக்கப்பட்டு பரிவு காட்ட இன்னொரு ஜீவனாய் இவன் வந்திருக்கிறானா? நம்ப முடியாத அதிசயத்தோடு, 'என் மீது இரக்கம் காட்டுவதற்கு நன்றி...!' என்றாள்.

அதற்கும் கோபப்பட்டான் அவன்.

'நன்றியா...? ஏன்... அதை ஒரு பெரிய போஸ்டராய் அடித்து ஊரெல்லாம் ஒட்டிவிடேன். பார்த்துக் கொண்டே இருக்கிறேன்...' என்றவன் இழுத்து மூச்சு விட்டவாறு, 'இப்படி மற்றவர்களின் பரிதாபத்தையும் இரக்கத்தையும் எதிர்பார்ப்பதை முதலில் விடு. அது... சுய பச்சாபத்தை உண்டாக்கி உன் தன்னம்பிக்கையையே குலைத்து விடும். அதனால் நீ தான் எதுவானாலும் நிமிர்ந்து நிற்க பழகிக் கொள்ள வேண்டும். மற்வர்கள் முட்டுக் கொடுத்தோ... மற்றவர்களை தாங்கிப் பிடித்துக் கொண்டோ கேவலமான ஒரு வாழ்க்கையை நீ வாழக்கூடாது. புரிகிறதா?'

இம்முறை அவன் நிஜமாகவே விரட்ட பயந்துதான் தலையாட்டினாள் அவள். 'அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்றாள் அதே பயம் தொனிக்கும் கீச்சுக் குரலில்.

'அப்படிக் கேள்... சொல்கிறேன்...' என்றபடி படபடவென விவரித்தான் திவாகரன்.

அவள், அவளது படிப்பில், அஞ்சல் வழிக் கல்வியில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி படிக்க வேண்டும். படித்து டிகிரி வாங்கி ஒரு நல்ல வேலையை தேடிக்கொள்ள வேண்டும். அப்படி வேலை,தேடி சம்பாதிக்க ஆரம்பித்ததும் அத்தைக்கு பாரமில்லாமல் அங்கிருந்து வெளியேறி எதாவது ஒரு மகளிர்விடுதியில் தங்கிக்கொள்ளவேண்டும். தன் எதிர்காலம் பற்றியோசித்து தனக்கென ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என வரிசையாய் சொல்லி தனது நீண்ட உரையை முடித்தவன், 'நீ மட்டும் இப்படி செய்யாது எல்லாவற்றையும் மற்றவர்களை எதிர்பார்த்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்ட நினைத்தால்.... பின் .... ரோட்டில் போகிற நாய் கூட உன்னை மதிக்காது... உன்னைப் பார்த்ததும் குரைக்க ஆரம்பித்துவ விடும்....' என சீரியஸாய் ஆரம்பித்து

புன்னகையுடன் முடிக்க அவளும் டக்கென் சிரித்து விட்டாள்.

ஆனால் அவன் சொன்னதின் உண்மைஉள்ளுக்குள் நன்றாகப் புரிந்து உரைத்தது. அவன் சொல்வது... நியாயம்தானே? அடுத்தவர்களின் தயவையே எப்போதும் எதிர்பார்ப்பது கேவலமான செயல் அல்லவா? நமக்கென்று ஒரு வழி தேடி யாருக்கும் பாரமில்லாமல் முன்னேற நினைப்பதுதானே புத்திசாலித்தனம்? இதுவரை அப்படி நினைக்காமலே இருந்திருக்கோமே? எதனால் அப்படி இருந்து விட்டோம்? என தன்னையே குறைபட்டு நினைத்தாள் அவள்.

அதனாலே, 'நீங்கள் சொன்னது சரி இவ்வளவு நாள் யோசித்துப் பார்க்காமல் முட்டாள்தனமாகவே இருந்துவிட்டேன். இனி... படிப்பில் முழுகவனம் செலுத்துகிறேன்.... நீங்கள் சொன்னது போல் சுயமாய் சொந்தக் காலில் நின்று ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயற்சிக்கிறேன்...' அவள் முடிப்பதற்குள், 'அதற்கு நான் உறுதுணையாக இருப்பேன்....' என்றான் அவன்.

'ரொம்பவும் நன்றி.... அத்....' சட்டென அதைச் சொல்ல வந்தவள் தயங்கி பல்லைக் கடித்து பாதியிலேயே நிறுத்தினாளட்.

அவன் முறைத்தவன், 'மறுபடியும் பயமா? இப்போது தானே எதற்கும் பயம் கொள்ளாது வாழ்க்கையை துணிவாய்...' என அவன் மறுபடியும் லெக்சர் கொடுப்பது போல் ஆரம்பிக்க அவசரமாய், 'சரி.... அத்தான்! புரிகிறது அத்தான்! இனி பயப்படமாட்டேன் அத்தான். உங்களை இப்படியே கூப்பிடுகிறேன் அத்தான். சரியா அத்தான்?' என படபடவென சொல்லி அவள் தனது கிணுகிணுப்பு சிரிப்பை சிரிக்க ஆரம்பித்தாள். 'அடி...குறும்புக்காரி...! என்னையே கிண்டல் செய்கிறாயா...? உன்னை என்ன செய்கிறேன்.... பார்....' என்றபடி அவளை நெருங்கியவன் சட்டென அவளை தன் பக்கம் இழுத்து இறுக அணைத்தான். கன்னங்களில் ஆசையாய் முத்தமிட்டான்.

அந்த அணைப்பையும் முத்தத்தையும் எதிர்பாராது திடுக்கிட்டவளின் காதுகளில், 'இப்போது இன்னொன்றும் புரிகிறதா?' என்றான்.

அவள் புரிந்து புரியாதது போல் முகத்தை வைத்துக்கொண்டு அவனைப் பார்த்து விழித்தாள்.

'பால் வெண்மையான முகம். கள்ளம் கபடமற்ற பார்வை.



தரை தாழ்வெட்கப்படும் மைவிழிக் கண்கள்... மொட்டவிழ்ந்தாற் போல் பவள உதடுகள் பிரிய... இனிமையான ஒர சிரிப்பு....' என அவளை வர்ணித்தவன், 'இவ்வளவு நாளும் இப்படியொரு பெண்ணைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். நீ கிடைத்து விட்டாய்.... 'சந்தோஷப் பூரிப்பில் அவனை சொல்ல மேலும் முகம் சிவக்க குனிந்தாள் அவள்.

அப்படி குனிந்தவளின் முகம் நிமிர்த்தி, 'இனி எதற்கும் நான் உனக்கு உறுதுணையாக இருப்பேன் புரிகிறதா?' என்றான்.

அவள் காதுமடல்கள் அதிர ஏதோ நினைப்பில் தலையாட்டினாள். கூடவே, மஞ்சரியும், கனகம் அத்தையும் தன் எதிரே தோன்றி பார்வையால் சுட்டெரிப்பது போல் ஒரு கணம் தவித்தாள்.

அந்த தவிப்பினாலே மேற்கொண்டு எதுவும் அவனிடம் பேசாமல், அவனையும் பேசவிடாமல் விடைபெற்று ஓடினாள் அவள்.

## 6

அன்று வீடு திரும்பும் வரை திவாகரன் தன்னுடன் பேசியதையாரும் பார்த்திருக்கக் கூடாதே என்ற பயத்துடன் தான் கவிதா திரும்பியிருந்தாள்.

நல்லவேளையாய் அன்று நேரம் ஆனதைப் பற்றி கனகம் ஒன்றும் கேட்கவில்லை. ஆனால், மஞ்சரிதான் வீட்டின் முன்னும் பின்னும் நடந்து, திவா அத்தான் இன்று எப்படியும் வருவாரே...? வரக் காணுமே? என வாயிலைப் பார்த்தவாறு கைகளைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

அவள் முகத்தில் இருந்த ஆர்வமும் எதிர்பார்ப்பும் கவிதாவை ரொம்பவே திடுக்கிட வைத்தது. இன்றும் மஞ்சரி புது தாவணி ஒன்றை பளிச்சென உடுத்தி முகத்தல் வெள்ளை அடிக்காத குறையாய் அழகு க்ரீம்களை தடவியிருந்தாள். அவளது தோற்றத்தைமாற்றி சிவப்பழகு என்று பிறர் சொல்லும்படி கொண்டு வர அவள் முயற்சி எடுத்திருப்பது அப்பட்டமாய் தெரிந்தது.

அதற்கும் கவிதா தான் காரணம் என்று சொல்ல வேண்டும். சில தோழிகள் உறவினர்கள் கூட அவள் காதுபட, கவிதா ரொம்பவும் சிவப்பு. நீ நிறம் கம்மி! எனச் சொல்லும் போதெல்லாம் அதை சகிக்க முடியாதவளாய் கவிதாவிடமேவந்து, அப்படியா நீ சிவப்பா? என்னை விட சிவப்பா? என்றெல்லாம் கேட்டு அவளது பதிலை எதிர்பார்ப்பாள்.

'அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை மஞ்சரி. நீயும் சிவப்புதான்!' நல்ல அழகு தான்! என அவள் எதிர்பார்க்கும் பதிலைக்கூறி அப்போதெல்லாம் அவள் வாயை அடைத்துவிடுவாள் கவிதா.

ஆனால் இப்போது மஞ்சரி தனது சிவப்பு நிறத்திற்கு பயந்துதான் வழக்கத்திற்கு மாறாக ஒரு வண்டி க்ரீம்களை தடவி தன்னை அழகுபடுத்த முயன்றிருக்கிறாளோ... என்ற சந்தேகம் தோன்றியது.

மேலும்மஞ்சரியின் குறி நோக்கம் திவாகரன்தான். அவன் தன்னை பார்க்கவேண்டும். தன்னைப் பார்த்து மயங்குவேண்டும் என நினைக்கிறாள். அவள்திவாகரனைப் பற்றி உள்ளுக்குள் மனதில் என்ன கனவு கொண்டிருக்கிறாள் என்பதும் கவிதாவிற்கு புரியாமல் இல்லை.

அதை உறுதிப் படுத்துவது போலவே அன்று மாலை மொட்டை மாடிக்கு, 'வா... பேசுவோம்...' என அழைத்துச் சென்ற மஞ்சரி வரிசையாய் அந்த கேள்விகளைக் கேட்டு திணறடித்தாள்.

முதல் கேள்வியாய், 'திவா அத்தானைப் பற்றி என்ன நினைக்கிறாய்?' என்று மஞ்சரி கேட்டதே அவளை மூச்சடைக்க வைத்தது.

ஆனாலும் சமாளித்து, நான் நினைக்க என்ன இருக்கிறது? எனப் புரியாதது போல் எதிர் கேள்வி கேட்டாள்... கவிதா.

'நீ... ஒன்றும் நினைக்க வேண்டாம். திவா அத்தான் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?' என்றாள் மஞ்சரி விளக்கமாய் அழுத்தந்திருத்தத்துடன் இப்படிக் கேட்டால் என்ன செய்வது? திகைத்த கவிதா,அது... அது... மஞ்சரி... என ஆரம்பித்தவள் அவளையே மடக்கும் விதமாய், எனக்குத் தெரியவில்லை. உன்னைப் பற்றி என்ன நினைப்பார்....? நீ சொல்! என்றாள்.



ஆனால் அவள் பதிலை மஞ்சரி சரியாக உள்வாங்கிக் கொள்ளாமல் அவளது நோக்கத்தையே வெளிப்படுத்தினாள்.

'நான் அவரை விரும்புவது அவருக்கு தெரிந்திருக்குமா? அவர் உணர்ந்திருப்பாரா?' என்றாள் பெரிய ஆராய்ச்சியாய்.

கவிதாவிற்கு திக்கென்று இருந்தது.

எதை நினைத்து பயந்தாளோ... அதை வாய்விட்டே சொல்லி விட்டாளே...! இதற்கு என்ன செய்வது?

கவிதா உதட்டையும் பற்களையும் ஒருசேர அழுந்தக் கடித்துக் கொண்டு நிற்க அது புரியாமல் மஞ்சரி, 'என்ன கவிதா... புரியவில்லையா? நான் கேட்டதற்கு பதில் சொல்! என்றாள்.

மறுபடியும் திக்கித் திணறியவளாய், 'எ... எனக்கு எனக்குத்... தெ...தெ... தெரியவில்லை...' என்றாள்.

ஆனால் மஞ்சரி அவளை லேசில் விடுவதாயில்லை. 'இது உனக்குத் தெரியாதுதான் கவிதா. ஆனால் திவா அத்தான் என்னுடன் பேசுவது, சிரிப்பது போன்ற சில செய்கைகளை உற்றுக் கவனித்தால் இது புரிந்திருக்குமே' என்றாள் விடாப்பிடியாய்.

'அட......அசடே.... திவா அத்தான் சுற்றி வருவது என்னைத்தானே...' என உள்ளுக்குள் துடிதுடித்த நெஞ்சுக்குமுறலை அடக்கியவள், 'எனக்குப் புரியவில்லை. இது பற்றி நீயே திவா அத்தானிடம் நேரடியாக கேட்டு விடேன்...' என்றாள் அவளை எச்சரிக்கும் விதமாய்.

'கேட்கப் போகிறேன்! ஆனால் நான் அல்ல... நீ...!' என்றாள் அவள் தலையில் பெரிய குண்டைப் போட்டவாறு.

நானா...?

வெகுவாய் அதிர்ந்து கவிதா கேட்க மஞ்சரி வேகமாய் தலையாட்டியவள்,ம்ம்.... அதுதான் சரியான வழி!

'இன்று திவா அத்தான் வரட்டும். நான் சொன்ன மாதிரியே என் முன்னால் அந்தக் கேள்விகளை அவரிடம்கேள் நானும் ஒளிந்திருந்து கேட்கிறேன். அவரது பதிலை ஆவலாய் தெரிந்த கொள்கிறேன்....'

மறுபடியும் கவிதாவிற்கு தூக்கிவாரிப்போட்டது.

இது என்ன அற்பமான விளையாட்டு? அவளை விட்டு அவள் வாயாலே மஞ்சரிக்காக கேட்டு...அதை இவள் வேறு மறைந்திருந்து

கேட்பாளாமே?

அப்படிக் கேட்டால் திவாகரன் சொல்கிற பதிலால் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போய்விடுவாளே!

அது புரியாமல் இப்படி ஏதேதோ பிதற்றிக்கொண்டு இருக்கிறாளே!

இவளை எப்படிச் சமாளிப்பது?

யோசித்தவள் மின்னலாய் யோசனை ஒன்று தாக்கி நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

'வேண்டாம் மஞ்சரி, நான் கேட்பதை விட நீ கேட்டால்தான் நன்றாக இருக்கும். திவா அத்தானுக்கும் தனது உண்மைநிலையை உனக்கு எடுத்துரைக்க சரியாக இருக்கும்...' என்றாள் பிரச்சனைக்க தீர்வு கண்டது போல்.

மஞ்சரி புருவங்களைச் சுருக்கி இவளைப் பார்த்தாள்

அது.... என்ன உண்மைநிலை...?

அது...அது.... என கவிதா முதலில் திணறியவள், பின், உன்னை விரும்புகிறாரே அந்த உண்மைநிலை... என சமாளித்தாள்.

அதற்குள் அரவம் கேட்க இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். கனகம் மூச்சிரைக்க துணிகளை காயப்போட படியேறி வந்து கொண்டிருந்தாள். 'அவசரமில்லை கவிதா. சமயம் பார்த்து திவா. அத்தானிடம் நான் சொன்னவைகளை கேட்டு பதிலைக்கூறு...' என கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு மஞ்சரி அன்றுஅகன்று விட்டாள்.

மறுநாள் திவாகரனிடம் மஞ்சரி பற்றி என்ன பேசப் போகிறோம், எப்படி பேசப்போகிறோம் என்றெல்லாம் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு அன்று நடந்ததைப் பார்க்கையில் விசித்திரமாகவே இருந்தது.

அன்று மாலை வழக்கம் போல் வந்ததிவாகரன் மஞ்சரியைத் தேடிச்சென்று அவனே வலியப் பேசினான். பாடத்தில் சந்தேகம் இருக்கிறதா என அக்கறையாய்க் கேட்டு பொறுமையாய்ச் சொல்லி முடித்தான்.

அப்படி பாட சந்தேகங்களை முடித்ததும் அவளிடம் கேலியும் கிண்டலுமாய் பொது விஷயங்களைப் பேசினான்.

மஞ்சரியே திடீரென தன்னிடம் வந்து வழியாத குறையாய் பேசும் திவாகரனைக் கண்டு திகைத்துப் போனாள்.



அதைவிட ஆச்சரியம் அவள் திவாகரன் கவிதா பக்கம் திரும்பிக் கூட பார்க்காததுதான்! வழக்கம் போல் ஒரு சின்ன ரெடிமேட் சிரிப்பை அவளை நோக்கி வீசிவிட்டு மஞ்சரி ரூமிற்கு சென்று விட்டான். அதற்குப்பின் கவிதா பலமுறை அவர்கள் இருவரும் இருந்த ரூம் பக்கம் போய் நடமாடிய போதும் அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை. பார்க்க விரும்பவும் இல்லை.

கவிதாவே கதிகலங்கிப்போய் விட்டாள். என்னாயிற்று திவாகரனுக்கு?

அன்று திடீரென அணைத்து கட்டிப்பிடித்து உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்றெல்லாம் காதல் வசனம் பேசியவன் இன்று பாராமுகமாய் நடந்து கொள்கிறான்?

ஒருவேளை அன்று பூங்காவில அத்தை பார்த்து விடக் கூடாது என்ற பயத்தில் பாதியிலேயே அவனிடம் விடைபெற்று ஓடிவந்ததால் கோபம் கொண்டுவிட்டானா?

அந்த நினைப்பை உறுதிப்படுத்த அவள் மேலும்மேலுமஅவன் முகத்தை பார்த்து ஆராய்ச்சி செய்து தோற்றுத்தான் போனாள்.

அவளை அப்படியே பார்க்க நேர்ந்தாலும் சலனமில்லாத ஒரு பார்வையுடன் திரும்பிக் கொண்டான் அவன்.

மஞ்சரியிடம் அப்படி வலியப் பேசினவன் அத்தோடு நிறுத்தாமல் அத்தை கனகத்தையும் சமையலறையில் தேடிப் போய் பார்த்துப் பேசினான்.

பேச்சினூடே, 'அத்தை உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்?' என்று இழுத்து, என் நண்பர் ஒருவர் எக்ஸ்போர்ட் கம்பெனி ஒன்றை இங்கு வைத்து நடத்தி வருகிறார். அவர் வேலைக்கு நம்பிக்கையான பெண் இருந்தால் என்னை சொல்லச் சொன்னார். மாதம் ஐந்தாயிரம் சம்பளமாம். எனக்கு நம் கவிதாவின் நினைப்புதான் வந்தது. கவிதா வீட்டில் சும்மாதானே நேரத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறாள். போய் வேலை பார்த்து சம்பாதிக்கட்டுமே?' என கவிதா காதுபடச் சொன்ன போது அவளுக்கு ஓரளவு புரிந்துவிட்டது.

ஆக வேண்டுமென்றுதான் அவன் அப்படி பாராமுகமாய் நடமாடிக்கொண்டிருக்கிறான். அதுவும் அத்தையோ மஞ்சரியோ அவன் அவளைப் பார்ப்பதையோ, சிரிப்பதையோ பார்த்து சந்தேகப்

பட்டுவிடக் கூடாது என்கிற நல்லெண்ணத்தில்தான்!

மேலும் அவளுக்கு வேலை... ஐந்தாயிரம் சம்பளம் என்றெல்லாம் புதுக்குண்டை தூக்கிப் போடுகிறானே...? இதெல்லாம் உண்மைதானா? இதுவும் அவள் நன்மைக்குத்தானா?

அவள் யோசித்துக் கொண்டிருக்க அவன் பேச்சை தட்ட முடியாத கனகம் சம்மதிக்கவே செய்தாள். 'நல்ல யோசனைதான். மாதம் ஐந்தாயிரம் சம்பளம் என்றால், எனக்கு சம்மதம்தான் உடனே வேலையில் சேர்த்துவிடு!' என அனுமதியும் தந்தாள்.

அவன் பேச்சில் அவன் காட்டிய நிஜ அக்கரையில் யாரும் திவாகரனை சந்தேகப்படவில்லை. இந்த வேலை விஷயத்தை பின்னணியாய் வைத்துக்கொண்டு அவன் பெரிய திட்டமொன்று வைத்திருக்கிறான் என்றும் உணரவில்லை.

ஆனால் கவிதாவிற்கு மட்டும் அதை உணர்த்துவது போல் யாருமறியாமல் அவளை நோக்கி அர்த்தமான கண்சிமிட்டல் ஒன்று செய்தபடி சென்றான் திவாகரன்!



அடுத்து வந்த இரண்டு நாட்களில் நம்பமுடியாத ஆச்சரியம்தான் கவிதாவிற்கு. அத்தையும் மாமாவும் ஒப்புதல் தந்து விட்டார்கள். 'மஞ்சரியும்,நீ வேலைக்குப் போ. வீட்டிலேயே அடைந்து கிடக்கிறாயே....என அனுமதித்து விட்டாள்.

'திவாகரனும், உன் தலையெழுத்தே மாறப்போகிறது. மாற்றிக் காட்டுகிறேன்...' என்றான் ஆரூரைப்பதுபோல்.

அவளுக்கு அத்தை தன்னை அனுமதித்தது அதிசயம் என்றால் அதைவிட இன்னும் டிகிரி கூட முடிக்காத தனக்கு அப்படி யார் வேலை கொடுத்து விட முடியும் என்பது பெரிய அதிசயம்!

எல்லாம் என் ஏற்பாடுதான்! என் நண்பன் ஒருவனது கம்பெனிதான்! என்று கூறி அவளது பத்தாம் வகுப்பு சர்டிபிக்கேட்டுடன் அழைத்துச் சென்றான் திவாகரன்.

'உன்னைப் பற்றி எல்லாம் சொல்லி விட்டேன். நீ



கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸில் டிகிரி படிப்பதும் விரைவில் நீ அதை முடித்துவிடுவாய் என்பதும் அவர்களுக்குத் தெரியும். மேலும் உனக்கு கொடுத்திருப்பது அந்தக்கம்பெனி குடோனில் சுபர்வைசிங் வேலைதான். லாரியில் வந்து இறங்கும் சரக்குகளை குறிப்பேடுத்து பதிவு பண்ண வேண்டியதுதான் உன்னுடைய பணி. எளிதானதுதான். நீ வேகமாய் கற்றுக் கொள்வாய். ஒன்றும் பயம் தேவையில்லை...' என தைரியம் சொல்லி திவாகரன் கூட்டிச் சென்றான்.

அந்த எக்ஸ்போர்ட் கம்பெனியில் எல்லோருக்கும் அறிமுகமாகி அன்றே வேலைக்கும்சேர்ந்து விட்டாள் அவள்.

முதலில் அலுவலகச் சூழ்நிலையையும் புதுப்புது மனிதர்களையும் பார்த்து மலைத்தவள் கொஞ்சம் கொஞ்சமாக புரிந்து கொண்டாள். திவாகரன் சொன்ன தைரிய வார்த்தைகளை மனதில் கொண்டு வந்து இயல்பாக பணியாற்ற ஆரம்பித்தாள்.

'அத்தை வீட்டில் இருந்தால் ஒரு வேலைக்காரப் பெண்ணாய் கடைசியில் ஒரு வேலைக்காரி போலவே ஆகிவிடுவாய். ஆனால் இப்போது பார்...! உன் சூழ்நிலை மாறி விட்டது சமூகத்தில் நீயும் ஒரு பெண்ணாய்,அதுவும் சுயமாய் சம்பாதித்து யார் தயவுமில்லாமல் சொந்தக்காலில் நிற்கும் பெண்ணாய் ஆகிவிட்டாய். அதற்காக சந்தோஷப்படு...!' என்று கூறியிருந்தான் திவாகரன்

அவன் சொன்னது போலவே அன்று முழுவதும் சந்தோஷமாகவே இருந்தாள் அவள்.

புதியதாய் வேலைக்குச் சேர்ந்து தன் தலையெழுத்து மாறிய சந்தோஷத்தைவிட திவாகரன் தனக்காக இவ்வளவு அக்கறை எடுத்து எவ்வளவு ஏற்பாடுகள் செய்து விட்டானே? நம் மீது எவ்வளவு அன்பு காட்டுகிறானே? என்பதில் தான் ரொம்பவும் மனமகிழ்ந்தாள். அளவிடமுடியாத சந்தோஷத்தில் திக்குமுக்காடினாள்.

அன்று மாலை வேலைமுடிந்ததும் அவளை அழைத்துச் செல்ல வந்த திவாகரனிடம் அந்த மொத்த சந்தோஷத்தையும் நன்றியாய் காட்டினாள்.

அனால் திவாகரனோ, உன் நன்றியெல்லாம் இருக்கட்டும். வேலை பிடித்திருக்கிறதா? என்றான்.

'ரொம்பவும் பிடித்திருக்கிறது..' என்றாள்.

'அப்பாடா.. இது போதும்!' என இழுத்து மூச்சு

விட்டான் அவன்.

அவள் திகைக்க விளக்கினான். 'இது பிடிக்கவில்லை... என்றால் இன்னொரு வேலைக்கும் ஏற்பாடு செய்திருந்தேன்...' என்றான்.

அப்படியா...? என் மீது அவ்வளவு அன்பா? என்றாள் அவள் கண்கள் விரிய அதிசயத்து பின் இருக்காதா? என்றவன், 'இனிதான் நீ அலுவலகத்திலும் வீட்டிலும் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும். அத்தை உன்னை வேலைக்கு அனுப்ப சம்மதித்ததே பெரிய விஷயம்தான்...!' என முடித்தான்.

எனக்கும் அது பெரிய ஆச்சரியம்தான்...! என்றவளுக்கு டக்கென மஞ்சரியின் ஞாபகமும் அவள் சொன்னது எல்லாமும் ஞாபகத்திற்கு வந்தது.

'மஞ்சரி...' என ஆரம்பித்தவள் அதை அப்படியே நிறுத்தினாள்.

'ஏன் அவளுக்கென்ன?'

'அவள் உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்லச் சொன்னாள்...'

'அப்படியா.... என்ன விஷயம்?'

திவாகரன் புருவம் சுருங்க கேட்க ஒரு கணம் தயங்கியவள் பின் கடகடவென கொட்டினாள்.

'அது... அது...அவள் உங்களை விரும்புகிறளாம். இதை என் மூலமாக உங்களிடம் சொல்லச் சொன்னாள்.'

திவாகரன் முகம் மாறி இறுகினான்.

இது என்ன புதுக்கதை?

கவிதாவிற்கு அவன் காட்டிய அந்த அதிர்ச்சியும் ஆத்திரமும் நிம்மதியையே ஏற்படுத்தியது. அதனாலே உதடுகளைப் பிதுக்கியவள், அவள் மனதில் உள்ளதை தெரிவித்திருக்கிறாள் அவ்வளவுதான்! என்றாள் கைகளை விரித்து.

'சரி,அதற்கு நான் என்ன செய்ய?' என்றான் திவாகரனும் அவளைப் போல் கைகளை ஆட்டி.

'நீங்கள் உங்கள் பதிலை என் காதில் கூறுங்கள். நான் கொண்டுபோய் அவளிடம் சேர்த்துவிடுகிறேன்....'

'சரி..... சொல்லட்டுமா?



'சொல்லுங்கள்....'

'என் இதயத்தை கவிதா என்றொரு பேதைப் பெண் எப்போதோ திருடிச்சென்று விட்டாள்.'

'அதனால்....'

'அதனால்...?

'அவளதுகோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லிவிடு...'

'நிஜமாகவே என்னை விரும்புகிறீர்களா?' சட்டென கேட்டாள் கவிதா.

'சரிதான்... விடிய விடிய ராமாயணம் கேட்ட கதைபோல அல்லவா இருக்கிறது? அதனால் இவ்விஷயத்தைஇப்படியே விடக்கூடாது...?' என்றபடி குறுகுறுப்பு தோன்ற அவளை நெருங்கினான்.

'பின் என்ன செய்வீர்களாம்?' என்றவளின் நெஞ்சிலும் அவளையறியாமல் படபடப்புகூடியது.

மேலும் பக்கத்தில் வந்தவன் அவளை ஒரு கையால் தன் பக்கம் இழுத்தான். அப்படியே இழுத்து இறுக தன்னோடு அணைத்துக் கொண்டான்.

அணைத்த கரத்தை விலக்க அவளுக்கும் மனம் வரவில்லை.கூடவே அந்த அன்பில் அந்த ஸ்பரிசத்தில் அவளது உடம்பே ஒருவித நடுக்கமாய் நடுங்கியது.

அதைக் கவனித்தவன் பதறியவனாய் அவள் முகம் நிமிர்த்தி, 'என்ன...? என்ன ஆச்சு? என பதட்டமாய் கேட்க....அவன் கரங்களில் துவண்டவள் அதே நெகிழ்ச்சியுடன், 'தாய் தந்தையரை இழந்து விட்ட பிறகு இப்படி ஒரு அன்பை, அன்பான அரவணைப்பை நான் யாரிடமும் பெற்றதில்லை. அதனால்தான் மனம் முழுக்க ஒருவித பரவசமாக நெகிழ்ச்சியுடன் இருக்கிறது....' அவள் திக்கித்திணறி உணர்ச்சி ததும்ப சொன்னவள் அப்படியே அழுதும்விட்டாள்.

அவளை இறுக தன் நெஞ்சோடு அணைத்து ஆறுதல் படுத்தியவன், 'ரொம்பவும் வேதனைகளை அனுபவித்துவிட்டாய் கண்மணி. இனி எதற்கும் கவலைப்படாதே... நான் இருக்கிறேன் உனக்கு...!' உறுதியான குரலில்தைரியம் சொன்னான் அவன், அவர்களுக்கு வரப்போகும் ஆபத்தை உணராமல்




கவிதா வீடு திரும்பி விட்டாள். அத்தை, மஞ்சரி, குருநாதர் எல்லோரும் வேலை பற்றி கேட்டார்கள். சுலுவான வேலைதான் என அவர்களிடம் விவரித்தாள்.

எப்படியோ... சொந்தக் காலில் நிற்க உனக்கென்று ஒரு வழியாவது கிடைத்ததே.... என அத்தை தன் சந்தோஷத்தைக் காட்டினாள். கூடவே குருநாதர் யோசனைப்படி அவளது சம்பளம் ஐந்தாயிரத்தில் இரண்டாயிரத்தை அத்தையிடம் கொடுத்து விட்டு மீதி மூன்றாயிரத்தை கவிதா பெயரிலேயே பேங்கில் போட்டு வைப்பது என முடிவாயிற்று.

அவளது எதிர்காலத்திற்கு, முக்கியமாய் அவளது கல்யாணத்திற்கு அவளாகவே சேர்க்கும் பணமாம் அது. குருநாதர் சொல்லியபோது, அதற்கெல்லாம் அவசியமில்லை. திவாகரன் என்னை விரும்புகிறார். நானும் அவரை விரும்புகிறேன். அது தெரியுமா? என கத்தவேண்டும் போல் அவளுக்கு இருந்தது. அடக்கிக்கொண்டாள்.

அன்று இரவும் படுத்தவள் தூக்கம் வராமல் புரண்டாள். திவாகரன் தன் மீது காட்டும் அன்பு அக்கறை கண்டு மெய்சிலிர்த்தாள். அவன் இப்படி தன் மீது அன்பு கொண்டு ஈடுபாடு காட்டுவது தான் செய்த பாக்கியம் கடவுளின் கருணை என்றெல்லாம் நினைப்பு ஓடியது.

கூடவே மஞ்சரியை நினைத்து அவளுள் பெரும் கவலை உண்டானது. திவாகரனது மனம் தெரியாமல் ஏமாறப் போகிறாளே... என வருந்தினாள். மேலும் இந்த திவா தன்னை விரும்பும் விஷயம் தெரிந்தால் பெரிதும் அதிர்ச்சியடைவாளே.... என்று பயந்தாள்.

அதற்கேற்றார் போல் மறுநாள் மஞ்சரி, 'என்ன கவிதா, நேற்று திவா அத்தானை பார்த்தாய்தானே...நான் சொன்ன விஷயம் பற்றி அவரிடம் கேட்டாயா?' என்றாள்.

கவிதாவிற்கு கப்பென தொண்டையை அடைப்பது போல்



இருந்தது.

'அது...அது... என திணறியவள், மறந்துவிட்டேன்....!' என சமாளித்தாள்.

'எவ்வளவு முக்கியமான விஷயம்? மறந்துவிட்டாய் என சாதாரணமாகச் சொல்கிறாய்?' என மஞ்சரி கோபமாய் வினவவும், இது என்ன வம்பாய் போயிற்று? என திகைத்தவள், 'அது இல்லை மஞ்சரி... நேற்று எனக்கு புது வேலை.. புதுச்சூழ்நிலை அந்தப் பதட்டத்தில் மறந்து போயிற்று....' என மறுபடியும் சமாளித்தாள்.

'சரி.... விடு... நானே நேரிடையாய் கேட்டுக்கொள்கிறேன்....' என முகம் வெட்டிப் போனாள் மஞ்சரி.

முதல் வேலையாய் இவள் திவாகரனிடம் கேட்கட்டும் அவள் தெளிவுபடுத்தட்டும் என நினைத்துக் கொண்டாள்.

அதற்குப்பின் அந்த வாரம் முழுவதும் அவள் வேலை முடியும் சமயமாய் திவாகர் அவளைத் தேடி வந்தான். அவனது பைக்கிலே வீடுவரை கொண்டு வந்து விட்டுப் போனான். அப்படிப் பின்னால் உட்கார்ந்து அவன் தோள் உரச வருவது அவளுக்கு சிலிர்ப்பாகவே இருந்தது. அத்தை வீட்டில் அதை யாரும் தவறாக நினைக்கவில்லை என்பதிலும் நிம்மதி உண்டாயிற்று.

இடையிடையே வேலை சீக்கிரம் முடிந்து விட்டால் இருவரும் ரெஸ்டாரண்ட் செல்வார்கள். சில சமயம் பூங்கா, அழகான செடிகளுக்கிடையே உள்ள மரப்பெஞ்சில் உட்கார்ந்து மணிக்கணக்காய் பேசுவார்கள்.

திவாகரன் டெல்லியில் தான் வளர்ந்த விதம் சூழ்நிலை பற்றியெல்லாம் கதை கதையாய் சொன்னான். ஆவலாய் கேட்டாள் அவள். இருவரும் பேசப் பேச நிறைய விஷயங்கள் புரிந்தது. உடல் கவர்ச்சியை விட பேசும்போது, ஒரே கோட்டில் சிந்திக்கும் மனங்களாய் இருவரும் ஒத்துப்போகும் போது, மனதாலும் தாங்கள் இருவரும் நெருங்கி விட்டதாய் உணர்ந்தாள் கவிதா.

'அதனாலே, இப்படியெல்லாம் என் வாழ்க்கையில் நடக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை....' என்றாள் நெகிழ்ச்சியாக அவனது கைவிரல்களை அழுத்திப் பிடித்துக்கொண்டு.

பதிலுக்கு சிரித்ததிவாகரன், 'பின் உன் எதிர்காலம் பற்றி

என்னதான் கற்பனை பண்ணியிருந்தாய்?' என்றான்.

உதடுகளை பிதுக்கியவள், 'வேறு என்ன? வேலைக்காரிதான்! மஞ்சரியை கட்டிக்கொடுத்து அவள் வீட்டை விட்டுச் சென்று விட்டால் ஆயுசு முழுக்க அத்தைக்கும் மாமாவையும் கவனித்துக்கொண்டு அவர்களுக்கு பணிவிடை செய்தே காலத்தை ஓட்டிவிடுவது என்றுதான்...!' என்றாள் குரல் கம்ம.

'அப்படியானால் உன் கல்யாணம்பற்றி சிறிதேனும் நீ நினைத்துப் பார்க்கவில்லையா?' ஆச்சரியமாய் திவாகரன் கேட்க,

'எப்படி முடியும்? உண்ணுகிற உணவுக்கே அடுத்தவரை அண்டியிருக்கும்போது சுகமான படுக்கையும் கட்டிலுமாக எப்படி கனவு காண முடியும்? அதனால்தான் அப்படி விரக்தியையும் தாண்டிய ஒரு நிலைமையில் இருந்துவிட்டேன். அப்படியே மனதை பழக்கிவிட்டேன்' என்றாள் தலையாட்டலுடன் சிரிக்க முயன்றபடி.

அவளதுஆடிய தலையில் கை வைத்து விளையாட்டாய் ஆட்டிய திவாகரன், இப்போது எப்படி உணருகிறாய்...? என்றான் அவளது முகத்தின் பிரதிபலிப்பை எதிர்நோக்கியவாறு.

'இப்போது.... அந்த.... வறண்ட பாலைவனத்தில் ஒரு ரோஜாப்பூ பூத்து விட்டது. அதுவும் கண்குளிர பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல அழகாய்.....' என்றபடி அவள் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

'அப்படியா.... அப்படியானால் அந்த ரோஜா மலர் யார்.... நானா?' என்றான் ஆவலாய்.

'இல்லை...' என்பது போல் தலைவெட்டினாள் அவள்.

'பின் யாராம்?' திவாகரன் திகைப்புற்றுக் கேட்க,

'அது... உங்களது அன்பு... நீங்கள் என் மீது வைத்த காதல்...!' சொல்லியபடி கலகலவென இனிமையாய் சிரித்தாள்..... அவள்.

அதை உற்றுக் கவனித்தவன், 'உன் சிரிப்பு கூட மிக அழகாக ரசிக்கும்படி இருக்கிறது. இரு! அப்படியே எனது மனத்திரையில் பிரேம் பண்ணி வைத்துக்கொள்கிறேன்....' என்றபடி கை விரல்களை மடித்து வைத்து போட்டோ எடுப்பது போல் வைத்துக்கொண்டான்.

'ம்ம்.... சிரி....' என்றான்.



'சிரிக்க மாட்டேன்...' என்றாள் கவிதா புது பிடிவாதம் பிடித்தவளாய்.

'உன்னை சிரிக்க வைக்க வழி தெரியும்....' என்றான் திவாகரன் புருவங்களை உயர்த்தியவாறு.

'அது என்ன வழி?'

திகைப்பாய் பார்த்தாள் அவள்.

'சொல்ல மாட்டேன்... செய்துவிடுவேன். அது மட்டும் செய்தால் அப்புறம் நீ பைத்தியம் பிடிக்காத குறையாய் சிரிசிரியென சிரித்துக் கொண்டிருக்கப் போகிறாய்....'

'அப்படியா...? செய்யுங்கள் பார்ப்போம்....' என்றாள் அவள் துணிச்சலாய்.

திவாகரன் குறுகுறுப்பாய்அவளை நெருங்க ஆரம்பித்தான்.

அவன் என்னவோ குறும்பாய் செய்யப் போகிறான் என்ற பயத்தில் கண்களை மூடிக் கொண்டாள் கவிதா.

திவாகரன் மேலும் அவளை நெருங்கினான். அவள் முகத்தருகே சென்றான்.

அப்போது-

'நான் வேண்டுமானால் சிரிக்கட்டுமா?'

திடீர்க் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்.

பின்னால் மஞ்சரி நின்று கொண்டிருந்தாள்.




மஞ்சரியை இருவரும் அங்கு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

அப்படியே ஸ்தம்பித்துதான் போய்விட்டார்கள்.

கவிதாவிற்கோ மூச்சே வரவில்லை.

ஆனால் மஞ்சரி அவர்கள் இருவரும் எதிர்பாராத வண்ணம் கலகலவென சிரித்தாள்.

'என்ன சிரித்து விளையாடும் போட்டியா? நானும் கலந்து கொள்ளட்டுமா?' என்றாள்.

திவாகரன்தான் நிலைமையை சமாளிக்கும் விதமாய், 'ஒன்றுமில்லை மஞ்சரி. கவிதா வேலை முடிந்து கிளம்பினாள். நான்தான் உடல் அசதியாய் இருப்பதால் பூங்காவில் கொஞ்சம் ஓய்வெடுத்துவிட்டுப் போவோம் என கூட்டி வந்தேன்....'. என்றான்.

'வந்த இடத்தில்இப்படி சிரித்து விளையாடுகிறீர்களாக்கும்?'

மஞ்சரி இம்முறை முகத்தில் எவ்வித உணர்ச்சியும் காட்டாமல் இடக்காய் கேட்க... கவிதா ரொம்பவும்தான் பயந்தாள்..

மஞ்சரி தன்னையும், திவாகரனையும் மாறி மாறி ஒருவிதமாய் பார்த்த பார்வையில் அவளுக்கு நடுக்கமேவந்து விட்டது.

'அது.... இல்லை.... மஞ்சரி.... நான்.... நான்...'

கவிதா தந்தியடிக்கும் உதடுகளுடன் திக்கித் திணற, 'நீ ஒன்றும் பேசாதே...!' என்றாள் மஞ்சரி எரிச்சலாய் அவள் பக்கம் திரும்பி.

திவாகரன் முன்னால் மஞ்சரி பக்கம் வந்தான்.

'கோபப்படாதே மஞ்சரி. நீ நினைப்பது போல் ஒன்றும் நடக்கவில்லை...' என்றான்.

'நான் ஒன்றும் எதையும் நினைக்கவில்லை....' என்றாள் மஞ்சரி அதற்கும் கோபமாய்.

'பின் எதற்காக இந்தக் கோபம் எரிச்சல் மஞ்சரி?'

திவாகரன் சீரியஸாய் கேட்க, 'ஓ...அதுவா...?' என முகம் விரிய மஞ்சரி ஒருகணம் யோசித்தவள் மறுகணமேமுகத்தைமாற்றி, 'எல்லாம் உங்களது சிரிப்புப் போட்டியில் நான் கலந்து கொள்ளக்கூடாது. நான் சிரிக்கக்கூடாது... என்று சொல்லி விட்டதால்தான்.....' என்றவள் முகத்தில் வலிய சிரிப்பொன்றை வரவழைத்துக்கொண்டு,' திவா அத்தான் நிஜமாகத்தான் கேட்கிறேன். நான் உங்கள் காமிராவுக்கு போஸ் கொடுக்கட்டுமா? என்னை சிரிப்புடன் படம் எடுக்கிறீர்களா?' என்றாள்.

அவள் கேள்விதான் திவாகரனைப் பார்த்து கேட்டாள். ஆனால் பார்வை எல்லாம் கவிதாவையே துளைத்துக்கொண்டிருந்தது.

இவள் எப்போது வந்தாள்? ஆரம்பத்திலேயே வந்து



விட்டாளா? திவாகரன் தன்னுடைய பேசிய அத்தனையையும் கேட்டுவிட்டாளா?

கவிதா துணுக்குற்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

திவாகரன்தான் நிலைமையை சமாளிக்கும் விதமாய் யோசித்து, 'வாருங்கள் எதிரில் இருக்கும் ரெஸ்ட்டாரண்டில் எதாவது டிபன் சாப்பிடுவோம்.....' என மேற்கொண்டு பேசவிடாமல் இழுத்துச் சென்றான்.

மூவரும் நடந்து இருக்கை ஒன்று தேடி உட்கார்ந்தார்கள்.

அவளிடம் எதாவது பேசி சமாதானமாய் சகஜமாய் சூழ்நிலையை மாற்ற கவிதா தவித்தவளாய், 'காலேஜ் முடிந்து வருகிறாயா?' என்றாள்.

'ம்ம்...! ஆமாம்.... கவிதா! காலேஜ் முடிந்து பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். இங்கு பூங்காப் பக்கம் இரண்டு காதல் பறவைகள் தனிமையைத் தேடி ஒதுங்குவது போல் தெரிய... அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண நான் ஓடோடி வந்து விட்டேன்....' என்றாள் கொஞ்சமும் இடக்கு குறையாமல்.

ஐயோ... மஞ்சரி.. நாங்கள் ஒன்றும்.... கா.... சொல்ல வந்தவள் அந்த வார்த்தையை அத்தோடு மஞ்சரி மேலும் தன்னை முறைப்பதைப் பார்த்து நிறுத்தி விட்டாள்.

இனி இவள் என்ன சொன்னாலும் நம்பப் போவதில்லை... என கவிதா ஒரு கணம் சலித்தவள் மறுகணமே, உண்மையும் அதுதானே...? எதற்கு மறைக்க வேண்டும்? தெரிந்தால் தெரியட்டுமே...! என்ற மனநிலைக்கும் வந்துவிட்டாள்.

திவாகரன் தான் எது பேசினாலும் மஞ்சரி பாய்ந்து பிரச்சினையாக்கி விடுவாள் என நினைத்தவன் போல் எதுவும் பேசாமல் வடை காபிக்கு ஆர்டர் செய்தான்.

பணியாள் கொண்டு வந்ததும் இருவரையும் சாப்பிடச் சொல்லியபடி தானும் சாப்பிட ஆரம்பித்தான்.

மஞ்சரிக்கு திவாகரனைப் பார்க்கவும் அப்போதும் எரிச்சலாய் இருந்தது போலும்.

'அதனாலே, திவா அத்தான்இந்த வடை பார்ப்பதற்கு மெதுவாக இருந்தாலும் காரமாக அல்லவா இருக்கிறது.... எல்லாம் சாது போன்ற நடிப்பு... வடை கூட நடிக்கிறது இல்லையா?' என்றாள் இரட்டை அர்த்தத்தில் குத்தலுடன்.

திவாகரன் அதற்கும் வம்பில் மாட்ட விரும்பாதவனாய், 'நீ சொன்னால் சரியாகத்தான் இருக்கும்...' என்றான் சாப்பிடுவதிலேயே அக்கறை செலுத்தியபடி.

கவிதாவிற்கு வடையை ஒரு வாய் எடுத்து வைக்க முடியவில்லை. வேறு வழி இல்லாதவளாய் இரண்டு மூன்று துண்டுகளை விழுங்கி காபியை சாஸரில் ஊற்றி மடமடவென குடித்தாள்.

மஞ்சரி இன்னமும் சூட்டைக் குறைக்காமல் தன்னையும் திவாகரனையும் மாறி மாறி ஒரு குரோதப் பார்வை பார்த்தது அவளை என்னவோ செய்தது.

ஒரு வழியாய் மூவரும் டிபனை முடித்திருந்தார்கள்.

திவாகரன் தன் பர்ஸைத்திறந்து பில்லுடன் டிப்ஸுக்கான பணத்தையும் எடுக்கப் போனான்.

அதை கவனித்த மஞ்சரி, 'வேண்டாம் திவா அத்தான் டிப்ஸ் எல்லாம் கொடுக்காதீர்கள்...!' என்றாள் அவசரமாய்.

'எதற்கு மஞ்சரி?'

திவாகரன் புரியாமல் நிமிர்ந்து கேட்க, பல்லைக் கடித்தாள் மஞ்சரி.

'வேலைக்கார நாய்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும் அவர்களுக்காக நாம் எவ்வளவு செலவழித்தாலும் நன்றியையோ, விசுவாசத்தையோ அவைகள் காட்டாது. நமக்கு துரோகமே செய்யும்...!'என்றாள் அதே ஆத்திரத்தோடு.

கவிதாவிற்கு சுருக்கென மனதில் தைத்து விட்டது. மஞ்சரி ஜாடை மாடையாய் சொல்வது தன்னைத்தான் என்பது அவளுக்கு வெளிப்படையாய் எளிதில் புரிந்து போயிற்று.

கடைசியில் அவள்.... அவள்... ஒரு வேலைக்கார நாயா? அந்த வார்த்தையை மஞ்சரியே சொல்லிவிட்டாளே! அது மட்டுமில்லாமல் நன்றியில்லாதவள் துரோகம் செய்தவள்...! என என்ன வாய் கூசாமல் வார்த்தைகளை டக்கென கொட்டி விட்டாள்...?



கவிதா ரொம்பவும் அதிர்ந்தவள் அப்படியே கண்கலங்கி அழும் நிலைக்குப் போய்விட்டாள்.

அவளது அந்த நிலை கண்ட திவாகரனும் பதறித்தான் போனான்.

அந்த கோபத்தில் டக்கென நிமிர்ந்து மஞ்சரியை முறைத்தவன், நீ உன் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டாய்? என்றான் எரிச்சலோடு.

மஞ்சரியும் திவாகரனின் இந்த செய்கையை எதிர்பார்க்கவில்லை போலும்.

'ஆஹா...! அம்மாவைச் சொன்னதும் ஐயாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டதாக்கும்...? சரிதான்...! இனி நான் இங்கு எதற்கு...? நான் கிளம்புகிறேன்... சாமி...!' என்றபடி டக்கென எழுந்தவள் உட்கார்ந்திருந்த இருக்கையை வேகமாய் பின்னுக்கு தள்ளிவிட்டவாறு விறுவிறுவென அங்கிருந்த நடக்க ஆரம்பித்து விட்டாள்.

திகைத்துப் போய் அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தனர் திவாகரனும், கவிதாவும்



## 10

மஞ்சரி வந்தாள், பார்த்தாள், கோபித்துக் கொண்டு போய் விட்டாள். ஆனால் கவிதா...?

அவளுக்குத்தான் மனமேஇல்லை. வீட்டிற்குப் போக ஒரே பயம். எந்த முகத்தைவைத்துக்கொண்டு போவாள்?

திவாகரன் முதலில் வீடுவரை வந்து விட்டுப் போகிறேன் என்றவன் இப்போது பின்வாங்கினான்.

'வேண்டாம் கவிதா, இப்போது நான் உன்னோடு வந்தால் வீட்டில் மஞ்சரி இதை திரும்பவும் பிரச்சனை ஆக்கிவிடுவாள். இப்போதைக்கு இதை இப்படியே விட்டு விடுவோம். மஞ்சரியை சமாதானப்படுத்தி விட்டு அத்தையிடம் இதுபற்றி பேசுகிறேன்...' என விளக்கமும் கொடுத்தான் திவாகரன்.

அவன் சொல்வது சரிதான். ஆனால்... மஞ்சரி பார்த்த பார்வை... நன்றி மறந்தவள்... துரோகம் செய்தவள் என்றெல்லாம் அவள் பேசியது நினைவுக்கு வந்து அவனைப் பாடாய் படுத்தியது.

இந்நேரம் மஞ்சரிபோய் விஷயத்தை அத்தையிடம் சொல்லியிருப்பாள். அதைக் கேட்ட அத்தை கொதித்துப் போயிருப்பாளே?

என்ன செய்ய...? யோசனையுடன் தைரியம் சொன்ன திவாகரனிடம் விடைபெற்று வீடு நோக்கி நடந்தாள்.

வேறு வழியில்லை! எதுவானாலும் எதிர்கொள்ள வேண்டியதுதான். எந்த ஏச்சு ஏசினாலும் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான்!

இறுமாப்பு கொண்டவள் போல் விறுவிறுவென நடந்தாள்.

அவளுக்கு இன்னொரு விஷயமமபயம் கொடுத்தது.

அத்தை இதனால் ரொம்பவும் கோபமுற்று அவளது உடைமைகளை எல்லாம் தூக்கி எறிந்து, வெளியே போடி.... என ரகளை எதுவும் பண்ணினால் அவளால் என்ன செய்ய முடியும்?

எங்குதான் போவாள் அவள்?

கவலையும் பயமும் தொண்டையை அடைக்க எவ்வித நினைவுமின்றி எதிர்ப்பட்ட பஸ்ஸில் ஏறினாள் அவள்.

ஆனால் கவிதா நினைத்தது போல்தான் நிஜமும்மஇருந்தது. இப்படி திவாகரன் கவிதாவை அதுவும் போயும் போய் இந்தக் கவிதாவையா விரும்புவான்? என பெரும் அதிர்ச்சியிலும் ஆத்திரத்திலுமேஇருந்தாள் மஞ்சரி.

ரெஸ்ட்டாரண்டில் இருந்து வேகமாய் வெளியேறியவள் விறுவிறுவென ஆட்டோபிடித்து வீட்டுக்கு வந்து விட்டாள்.

வீட்டில் தாய் கனகத்திடம் விஷயத்தைச் சொல்ல அவளும் அதிர்ச்சியானாள். அனாதைக் கழுதைக்கு.... கொழுப்பைப்பாரு...? பல்லைக் காட்டி பல்லைக் காட்டி திவாகரனை மயக்கி இருக்கு! வரட்டும் அவ... இன்னிக்கு அவளை என்ன செய்யறேன் பாரு...! என கனகம் பற்களைக் கடித்தாள்.

அதற்கும், 'நீ ஒன்றும் செய்ய வேண்டாம்....' என்று எரிச்சலானாள் மஞ்சரி.

என்னடி சொல்ற...?

மஞ்சரி விளக்கினாள். 'நீ எது செஞ்சாலும் அதை கவிதா



உடனே புகாராய் போய் திவா அத்தானிடம் சொல்லுவாள். பின் அத்தான் கவிதாவிற்காக வரிந்து வந்து உன்னிடம் கேள்வி கேட்பார். பிறகு அது அசிங்கமாகப் போய்விடும்....'

'பிறகு என்னதான் செய்யலாம்.... சொல்லு!' கனகம் சலித்தாள்.

பதிலுக்கு மஞ்சரிமுகம் இறுகியவள், 'சொல்றேன் எனக்கு திவா அத்தான் கண்டிப்பாய் வேண்டும். அவரைத்தான் நான் கட்டிக்குவேன். அவரை கவிதாவிற்கு ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டேன்...' என்றாள்.

'நானும் அதைத்தான் நினைத்தேன். ஆனா... இந்த போக்கத்தவ... உன்னை முந்தப் பார்க்கிறாளே...' பயம் கொடுத்தாள் கனகம்.

'நான் விடமாட்டேன்...' என்றாள் மஞ்சரி மறுபடியும் உறுதியாக. கூடவே, அதற்காக திட்டம் ஒன்னு வைச்சிருக்கேன்... என்றாள்.

'திட்டமா?'

ஆமாம். வரும்போது ஆட்டோவில் யோசிக்கிட்டே வந்தேன். இந்த கவிதாவை விரட்ட ஓரங்கட்ட சரியான வழி அதுதான்...

'என்ன வழிடி?'

கனகம் ஆவலாய் கேட்க மஞ்சரி தன் முட்டைக் கண்களை மேலும் விரித்தபடி அவளுக்கு விளக்க ஆரம்பித்தாள்.

'முதலில் கவிதாவிடம் இதுபற்றி இன்றோ... இன்னும் இரண்டு நாட்களுக்கோ... கேட்காதே... அவள் பாட்டுக்கு வேலைக்குச் சென்று விட்டு வரட்டும். அப்போதுதான் நாம் செய்யப் போகும் வியத்தை திவா அத்தான் கவனத்திற்குப் போகாமல் தடுக்கவும் முடியும்......'

மஞ்சரி சொல்ல கனகத்திற்கு சுத்தமாய் ஒன்னும் புரியவில்லை.

'என்னடி புதுசு.... புதுஸா சொல்ற?'

புதுசு இல்ல... கொஞ்சம் புத்திசாலித்தனமாத்தான் நாம செய்யணும். அப்பதான் கவிதாவை நம்மவழிக்கு கொண்டுவர முடியும். மேலும் முக்கியமா ரெண்டு பேருக்கும் ஏற்பட்டிருக்கிற அந்த பழகத்தை உடனே நிறுத்தணும். அதுக்கு ஒரு வழியைத்தான்

நான் வைச்சிருக்கேன். அதன்படி நடந்தா கவிதாவையும் திவா அத்தானையும் நாம பிரிச்சிரலாம்....'

'அப்படியா..?

ஆமா! திவா அத்தானுக்கு கவிதா மேல கோபமும் ஒரேடியான வெறுப்பையும் வரவழைக்கணும். அப்படிச்செஞ்சிட்டா.... நாமநினைச்ச மாதிரி எல்லாம் நடந்து போயிரும்....

'அப்ப... அதை உடனே நீ செஞ்சிர வேண்டியது தானே? பரபரத்தாள் கனகம்.

'அதை செய்யப் போறது நான் இல்ல.... நீ... நீ...தான்! உன்னால தான் முடியும்...!' என்றாள்.

'என்னாலயா... என்ன சொல்ற மஞ்சரி..?'

கனகம் திகைக்க மஞ்சரி மறுபடியும் விளக்கினாள்.

அவள் அப்படி விளக்கிக் கூறியதும் கனகத்தின் முகம் பிரகாசமானது. 'நீ சொல்லும் இது சரியான யோசனைதான். இப்படிச் செஞ்சாத்தான் இருவரையும் பிரிக்க முடியும். ஆனா... கவிதா நாமநினைக்கிறபடி நடந்துக்கணுமே...?' என்றாள் சந்தேகம் பொங்க.

'எனக்கு கவிதாவைப் பத்தி தெரியும். அவ நாமஅப்படி மனலை உலுக்குற மாதிரி சொன்னா கண்டிப்பா கேட்கத்தான் செய்வா...!' மஞ்சரி உறுதியான குரலில் சொல்லி முடிக்க அன்றைய பேச்சு அத்தோடு முற்றுப்பெற்றது.

அதற்குப்பின் வந்த ஒரு வாரம் எவ்வித பிரச்சனையில்லாமல் ஓடியது. அதற்கு அடுத்த நாள் கனகம் வேலைக்கு கிளம்பிக்கொண்டிருந்த கவிதா முன் போய், 'உண்ட வீட்டுக்கு துரோகம் பண்ண நினைக்கிறியே.... நீ உருப்படுவியா?' என வெடித்தாள்.




கனகம் தீயாய் கொட்டிய அந்த வார்த்தைகளில் துடித்துதான் போய் விட்டாள் கவிதா. 'உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணப்



பார்க்கிறாயே...?' என்ற வார்த்தைகள் இவ்வளவு நாள் அவள் சோறு போட்டு வளர்த்ததை குத்திக்காட்ட அப்படியே கண்கலங்க நின்று விட்டாள் கவிதா.

'நான் அப்படியெல்லாம் இல்லை அத்தை...' என்று கத்தியவள் பக்கத்தில் ஓடிப்போய் கனகத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டு, என்னைப் பார்த்து இப்படி ஒரு சுடு வார்த்தைகள் சொல்கிறீர்களே.. இது நியாயமா அத்தை?' எனக்கேவினாள்.

'ச்சீ... கையை விடு...!'

அவள் கையை வெறுப்பாய் உதறினாள் கனகம். 'செய்யறதை எல்லாம் செஞ்சுக்கிட்டு இது வேறயா?' என எரிந்து விழுந்தாள்.

'அத்தைஅப்படி ஒண்ணும் நான் தப்பு செய்யலை. நீங்க எதைச் சொல்றீங்க?' கவிதா கேட்க கனகம் அவள் தோளை படாரென தன் பக்கம் திருப்பி, 'எல்லாம் திவாகரன் பற்றித்தான்! திவாகரன் பின்னாடி நீ ஏன் சுத்துற? அதுக்குப் பதிலைச் சொல்லு!' என்றாள்.

இப்படி சட்டென அத்தை கேட்பாள் என எதிர்பாராத கவிதா வார்த்தைகள் வராமல், 'அது... அது... அது... அத்தை...' என திணறினாள்.

கனகம் திரும்பவும் வெடித்தாள். 'நான் சொல்றேன். என் பொண்ணு மஞ்சரி பின்னால சுத்தி வந்த திவாகரனை நீ மயக்கி குலுக்கி உன் பின்னால சுத்த வைச்சிருக்க. இவ்வளவு நாள் அனாதையான உனக்கு சாப்பாடு போட்டு வளர்த்ததுக்கு நீ காட்டுற விசுவாசம் இதுதானா?'

கனகம் இப்படிக் கேட்க கவிதாவிற்கு தொண்டையே அடைத்துக் கொண்டது. இப்படிக் கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? திவாகரன் என்று மஞ்சரி பக்கம் போனான்? மேலும் அவள் ஒன்றும் மயக்கி குலுக்கி அவனை சர்க்கவில்லையே...? அவனாகத்தானே அவளிடம் வந்து பரிவு காட்டினான். அவள் மீது அன்பு செலுத்தினான்...?

பேசாமல் இருந்தால் அத்தையின் கோபம் இன்னும் கூடும் என்ற பயத்தில், 'நான் ஒண்ணும் செய்யலை அத்தை. திவாகர் அத்தான்தான் என்மீது ஈடுபாடு காட்டினார். என் மீது அக்கறை காட்டி வேலை எல்லாம் வாங்கிக் கொடுத்தார்...' என்றாள்.

'சரி...வேலை வாங்கிக் கொடுத்தார் இருக்கட்டும். ஆனா..

பதிலுக்கு நீ என்ன செஞ்ச? உன் நன்றியை எப்படி காட்டின?

கனகத்தின் கேள்விக்கு அர்த்தம் புரியாமல் அவள் விழிக்க கனகமேகொட்டத் தீர்த்தாள.

'பதிலுக்கு நீ வெட்கமில்லாமஒரு ஆணைக் கட்டிப்பிடிக்க உன் நன்றியைக் காட்டியிருக்க. திவாகர் அதுல மயங்கி உன் பின்னாலயே சுத்த ஆரம்பிச்சிட்டான்...' என்றாள் கனகம் கோபமாய்.

'ஐயோ! அப்படியெல்லாம் இல்ல.. அத்தை...'

அவள் கத்தலையோ குரலையோ கனகம் காது கொடுத்து கேட்டபாடில்லை. அவள் பாட்டுக்கு வசை பாடினாள்.

திவாகரன் மஞ்சரியை நாடி வரும் நேரத்தில் கவிதா குறுக்கே புகுந்து தன் உடம்பழகை காட் மயக்கி திவாகரனை தன் பின்னால் சுற்றும்படி துரோகம் செய்து விட்டதாய் கடுமையாய் குற்றம் சாட்டினாள்.

மேலும் யாருமில்லாத அனாதையாய் இருந்த அவள் மேல் இரக்கப்பட்டு சொந்த மகள் போல் பாவித்து உணவு, உடை அளித்து கவிதாவை பாசமாய் கவனித்துக் கொண்டதற்கு அவள் தகுந்த கைமாறு செய்திருக்கிறாள் என தன் எரிச்சல் முழுவதையும் கொட்டினாள் கனகம்.

கனகம் திரும்பத் திரும்ப, 'உனக்கு சோறு போட்டிருக்கிறேன்... நான் சோறு போட்டு வளர்த்த உடம்பை வைத்துக் கொண்டு எனக்கு துரோகம் செய்கிறாயே..?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டுத் துளைக்க... அப்படியே ஆடிப்போனாள் கவிதா.

காதுகள் இரண்டையும் கைகளால் பொத்திக்கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள் அவள்.

கனகம் விடவில்லை. தொடர்ந்து வசைபாடினாள். 'நான் மட்டும் உனக்கு ஆதரவு கொடுத்து வளர்க்காவிட்டால் இந்நேரம் நீ எங்காவது பிச்சைதான் எடுத்துக்கொண்டிருப்பாய்' என உரைத்துச் சொன்னாள்.

கவிதாவிற்கும் புரிந்தது. அத்தை சொல்வது உண்மைதான். அன்று அத்தையும் மாமாவும் பெரிய மனதுடன் அவளை வளர்க்க முன்வராவிட்டால் எதாவது அனாதை இல்லத்திலோ அல்லது ஆதரவற்ற பிச்சைக்காரியாக கூட அவள் இருந்திருக்ககூடும்தான்.

ஏனெனில் இருந்த ஒன்றிரண்டு சொந்தங்களும் ஒரு



பெண்பிள்ளையை இக்காலத்தில் வளர்ப்பது கஷ்டம். பேசாமல் எங்காவதுஅனாதை இல்லத்தில் சேர்த்து விடுங்கள் என சாக்கு போக்கு சொல்லி ஓடிவிட்டனர்தான்.

அன்று அத்தை கனகம் ஒருவள்தான் முன்வந்து, 'என்ன பேச்சு இது? சொந்த பந்தமாய் நாமெல்லாம் இருக்கும் போது அனாதை இல்லம் எதற்கு? கவிதா என் குழந்தை. இவளை நானே வளர்க்கிறேன்...' என உரிமையோடு எடுத்துக் கொண்டாள்.

அன்று அத்தை தன்னை அந்தப் பிஞ்சு வயதில் அப்படி வாரி எடுத்துக் கொண்ட காட்சி இன்னமும் கவிதாவின் மனதில் நிழலாய் படிந்திருக்கிறதுதான்.

அதனால் அவள் அத்தையை மறக்கவில்லை. அவளுக்கு காட்ட வேண்டிய நன்றியையும் மறக்கவில்லை.

அதனாலே யோசித்தவள் இதுநாள்வரை தன்னை வளர்த்து ஆளாக்கிய அத்தைக்கு நன்றிக்கடனாய் எது வேண்டுமானாலும் செய்யலாம் என முடிவெடுத்தாள்.

அத்தையும் அந்த நன்றிக்கடனுக்காக, அவளை அவளது விரல்களைக் கொண்டே அவளது கண்களை குத்திக்கொள்வது போல் ஒரு செயலை செய்யச்சொன்னாள். மனதை கல்லாக்கி கொண்டு சம்மதித்தாள் கவிதா!



## 12

கவிதாவால் அத்தை சொன்ன முழுவதையும் ஜீரணிக்க முடியவில்லைதான். இவர்களுக்கு இவ்வளவு இப்படிப்பட்ட ஒரு கல் மனதா? என அவள் வியக்கையிலேயே அவளையுமஅப்படிப்பட் ஒரு கல் நெஞ்சக்காரியாய் மாறச் சொன்னால்... அது எந்த வகை நியாயம்?

ஆனால் விதியின் போக்கோ... என்னவோ... அது அப்படித்தான் நடந்தது.

அத்தை சொன்ன வழிப்படி நடந்து, நடித்து தனது நன்றிக்கடனை தீர்த்து விடுவதாக உறுதியும் கூறிவிட்டாள் கவிதா.

அதற்கு அப்படிப்பட்ட பாறைநெஞ்சு ஒன்றை

கொடுக்கும்படி கடவுளிடம் மனமுருக வேண்டியும் கொண்டாள்.

மறுவாரம் முதல் அவள் போக்கில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டது. தன்னைத் தேடி பேச வந்த திவாகரனிடம் அலுவலகத்திலும் சரி வீட்டிலும் சரி அளவாகப் பேசினாள். தனக்கு வேலை இருப்பது போல்காட்டி பேச்சைக் குறைத்தாள்.

முதல்வாரம் இப்படி அவனுடன் பேச்சைக் குறைத்தவள் மறுவாரம் தடாலடியாய் வேறு ஒரு காரியத்தில் இறங்கினாள்.

தன்னை அழைத்துப் போக பைக்கில் வந்தவனிடம் ஷாப்பிங் போகவேண்டும். பொருட்கள் வாங்க வேண்டும்... என நச்சரித்து கூட்டிப்போனாள். ஹாண்ட் பேக்கில் இருந்து உயர்ரக சென்ட் க்ரீம்கள் என ஒரு அழகுநிலையக் கடையில் பார்த்து வாங்கினாள்.

எல்லாமேவிலை உயர்ந்த பொருட்கள்தான். பில்லாக வந்த மூவாயிரத்தைப் பார்த்து திவாகரனே மலைத்துப் போனான்.

'எனக்காக செலவழிக்க மாட்டீர்களா? கொடுங்கள்!' என அவள் சொன்னதும் வாய் பேசாமல் பர்ஸைத் திறந்து பணத்தை நீட்டிவிட்டான் திவாகரன்.

அதற்குப் பின் இரண்டுநாள் கழித்து, 'என்னிடம் நல்ல சேலைகளே இல்லை, எடுத்துக் கொடுங்கள்...' என புடவைக் கடைக்கு கூட்டிப் போய் நிறைய சேலைகளை அள்ளினாள். பத்தாயிரம் ரூபாய் பில்லைப் பார்த்து மறுபடியும் திவாகரன் திகைத்தான்.

பின் வழியில்லாது கொடுத்தான்.

அதன்பின் மூன்று நாட்கள் கழித்து நகைக்கடை, ஜிமிக்கி, கிம்மல், தொங்கட்டான் என சிறுசிறு பொருள்கள்தான் என்று கூறியே இருபதாயிரம் ரூபாய்க்கு வாங்கி திவாகரனைப் பார்த்து பணம் கொடுக்க சைகை செய்தாள்.

திவாகரன் இம்முறையும் திகைத்ததோடு, 'ஏதாவது ஒன்று போதுமே? எதற்கு அனாவசியமாய் இரண்டு மூன்று எடுக்கவேண்டும்?' என கேட்டே விட்டான்.

'என்ன அனாவசியமா? எனக்கு ஒவ்வொரு வாரமும் காதணிகளை மாற்றி மாற்றி மேட்ச்சாக போட்டுக்கொண்டு வேலைக்குச் செல்ல பிடிக்கும். எனக்காக இந்தச் செலவு கூட நீங்கள் செய்ய மாட்டீர்களா? சும்மா பிகு பண்ணாமல் பணத்தைக் கொடுங்கள்!' என உரிமையோடு அவள் கொஞ்சிப் பேச வேறு



வழியில்லாமல் பணத்தைக் கொடுத்தான் திவாகரன்.

கூடவே அந்த பத்து நாட்களில் மட்டும் கவிதா கிட்டத்தட்ட முப்பந்தைத்தாயிரம் ரூபாயை காலி செய்திருக்கிறாள். அவளுக்காக சேமிப்பில் இருந்து இரண்டு முறை பணம் எடுத்திருக்கின்றான் திவாகரன்.

மேலும் கவிதா செலவு வைத்ததில் மட்டுமல்ல... ஆளும் தான் மாறிவிட்டாள். செயற்கையழகை எப்போதுமவிரும்பாதவள் முற்றிலும் மாறி அதற்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தாள். முகத்தில் வகைவகையான க்ரீம்களை தடவினாள். உயர்ரக சென்ட்களை தெளித்துக் கொண்டாள். விதவிதமான காதணிகள், தொங்கட்டான்கள் கழுத்து மாலைகள் என தன்னை செயற்கையாய் அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டியவள் விலையுர்ந்த புடவைகளை தினம் உடுத்துவதையும் தன் வழக்கமாகிக் கொண்டாள்.

அவளது மாற்றங்களை பார்த்து அதிர்ந்த திவாகரனை மேலும் திகைப்பாக்கும் வண்ணம், 'எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஒரு பைக்கை கொண்டு வந்து என்னை அழைத்துப் போவீர்கள்? சீக்கிரமாக ஒரு கார் வாங்குங்களேன். அப்படி நீங்கள் வாங்கி அதில் நாம் இருவரும் ஜோடியாய் நகர்வலம் சுற்றினால் எப்படி இருக்கும்?' என ஒருநாள் கவிதா கேட்க திவாகர் வியந்தே போனான்.

'என்ன... காரா..? அதெல்லாம் நம் சக்திக்கு மீறிய விஷயம்.. அந்த அளவுக்கு நாம் பொருளாதாரத்தில் இன்னும் உயரவில்லை..'. என்றான்.

ஆனால் கவிதாவோ, 'நீங்களும் நானும் நினைத்தால் போதும். கார் வாங்கிவிடலாம்...!' என்றாள் ஒருவிதமான குரலில்.

திவாகரனுக்கு அன்று அவள் சொன்னதின் அர்த்தம் புரியவில்லை. ஆனால் இரண்டு நாள் கழித்து அவள் செய்த செயலைப் பார்த்து அரண்டுதான் போய்விட்டான் அவன்.

அன்று மாலை வந்தவனிடம்தன் ஹாண்ட் பேக்கில் இருந்து வெளியே எடுத்த சிறு துணிப்பொட்டலம் ஒன்றைக் காட்டினாள்.

பெரும் ரகசியம் போல் கிசுகிசுப்பாய், 'உள்ளே திறந்து பாருங்கள். பொக்கிஷம்!' என்றாள்.

திவாகரன் புரியாமல் அதைத் திறந்தவன் அதிர்ந்தான். உள்ளே வளையல், டாலர் செயின் என அத்தை மற்றும் மஞ்சரியின் தங்க நகைகள்!

'என்ன இது?'

அவன் திகைப்பாய்ச் சிற அமைதியாய்ச் சிரித்தாள் அவள்.

'பீரோவில் அத்தை பூட்டி பத்திரப்படுத்தி வைத்திருந்த நகைகள். அத்தைக்கு தெரியாத வண்ணம், அத்தை கவனிக்காத போது எடுத்துக் கொண்டே வந்துவிட்டேன். நான்தான் எடுத்தேன் என்று யாருக்கும் தெரியாது.. அதனால்...'

அவள் வேகவேகமாய் பேசி நிறுத்த அவன் ஸதம்பித்தபடி கேட்டான். 'அதனால்?'

'கார் வாங்க பணமில்லை என்று சொன்னீர்கள் அல்லவா அதற்கு இதை வைத்துக் கொள்ளுங்கள்....' என்றாள் அவள் சாதாரணமாக.

'ஏய்.. என்ன உளறுகிறாய்?' என்றான் திவாகரன் கோபமாய்.

அதற்கு அசால்டாக தலைவெட்டினாள் அவள்.

'நான் ஒன்று உளறவில்லை. நாம் பிழைக்க வேண்டும் வாழ்க்கையில் உயர வேண்டும் என்றால் இதுதான் வழி. எத்தனை நாளைக்குத்தான் இந்த பைக்கை வைத்து அல்லாடிக் கொண்டிருப்பீர்கள்... நாமும் பணக்காரர்களாகி காரில் போகவேண்டாம்..?'

ஓஹோ! அதற்காக இப்படி திருடுவாயா?

திவாகரன் உச்சபட்ச அதிர்ச்சியில் கேட்க கவிதா அதற்கும் அசரவில்லை.

'நீங்கள் சொல்வது தப்பு. மற்றவர்களிடத்தில் அடுத்தவர் வீட்டில் போய் திருடினால்தான்திருட்டு. சொந்த வீட்டில் எடுத்தால் அது கை மாத்து. நமக்கு உரிமையுள்ள நகை என்றே பொருள்...'

'இதுவேறா...?' என திவாகரன் எரிச்சலானவன், சரி அத்தை நகைகளை காணும் எனறு தேடினால்...? என இழுக்க, 'நன்றாகத்தேடட்டும். நானும் கூடச்சேர்ந்து தேடுவேன். நகைகள் களவு போய்விட்டதாக முடிவு எடுப்பார்கள்..அதனால் நான் ஒரு போதும் மாட்டிக் கொள்ளப் போவதில்லை. அதனால் நீங்கள் இதை வைத்து தைரியமாக கார் வாங்குங்கள். ஒரு பிரச்சினையும் வராது...'

அவள் ரொம்பவும் சீரியஸாக அப்படிப் பேச திவாகரன் வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டான்.

'ஏய்... கவிதா! நீயா இப்படிப் பேசுவது?'

நம்ப முடியாமலே கேட்டான்.



'நான்தான்! உங்கள் கவிதாதான்... நீங்கள் ஆசையாய் காதலித்த அந்த கண்ணா, வி,ன்னா, தாவன்னா கவிதாதான் சொல்கிறேன்....' என்றாள் துடுக்காய்...

'ஹேய்... நீ... ஏழையாய்.. எப்படி அத்தைவீட்டில் கள்ளங்கபடமில்லாத நல்லபெண்ணாய் இருந்தாய்... இப்போது இப்படி இப்படி மாறி.....'

திவாகரன் முடிக்க முடியாமல் திணற,

'மாறி விட்டேன் தான். எத்தனை நாளைக்கு கந்தல் துணியையும் கஞ்சியையும் குடித்துக் கொண்டு மோட்டு வளையை விரக்தியாய் பார்த்துக் கொண்டிருப்பது? நாமும் நாலு காசு சேர்த்து வசதியாய் இருக்க கூடாதா? வாழ்வது ஒரு முறை...! இவ்வளவு நாள் விதிப்படி எவ்வளவோ கஷ்டங்கள் பட்டாயிற்று இனியாவது ஒரு பணக்காரத்தனமான சொகுசான வாழ்க்கை வாழ முயற்சிப்போமே? என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?

அவள் கேட்க அப்படியே பேச முடியாதவனாய் வாயடைத்துப் போனான் திவாகரன்.

'என்ன நான் கேட்டது சொன்னது தப்பா...?' என்றாள் கவிதா புருவங்களை உயர்த்தி அவனைப் பார்த்தவாறு

திவாகரனும் நெற்றி சுருங்க அவளைப் பார்த்தவன், 'தப்பு உன் மீது இல்லை. நான் தான் அவசரப்பட்டு தப்பான பெண்ணை தேர்ந்தெடுத்து விட்டேனோ என ஐயப்படுகிறேன்...!' என்றான் குரல் கம்ம.

பின் திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து விறுவிறுவென நடந்தான் அவன்.

## 13

திவாகரன் அன்று கோபித்துக் கொண்டு போனது போல் போய் விட்டான்.

அதற்குப்பின் இரண்டு மூன்று நாட்கள் அவன் அவளை அழைத்துச் செல்ல கவிதாவின் அலுவலகம் வரவில்லை. கவிதா பஸ் பிடித்தே வீடுவந்தாள். ஐந்து நாளுக்குப் பிறகு வந்து நின்றான்.

ஒன்றும் பேசாமல் அவன் பைக் பின் ஏறிக்கொண்டாள்

அவள் நேராக வழக்கமாக சாப்பிடும் ரெஸ்ட்டாரண்டில்போய் நிறுத்தினான் அவன்.

இருவரும் இறங்கி இருக்கை ஒன்றைத் தேடி அர்ந்தார்கள்.

சின்னதாய் டிபனுக்கு திவாகரனே ஆர்டர் செய்தான்.

கவிதா தன் கோபத்தை வெளிக்காட்டும் விதமாய் எதுவும் பேசாது உதடுகளை இறுக்கமூடி உம் மென் இருந்தாள்.

அவள் பேசுவாள் என பொறுத்துப் பொறுத்து பார்த்த திவாகரன் பின் தானாகவே மௌனம் கலைத்தான்.

'என்ன கோபமா?' என்றான்.

முதலில் அதற்கும் பதில் சொல்ல விரும்பாதவள் போல் வெறுப்பாய் உதடுகளைச் சுழித்தவள் பின் முகம் வெட்டி, புரிந்தால் சரி....!' என்றாள்.

கோபத்தில் கூட நெற்றி முடி புரள ஜொலித்த அவள் முக அழகை ரஸித்தவன், 'நான் மூன்று நான்கு நாள் வரவில்லை. அதனால்தானே?' என கோபத்தில் காரணத்தை அடுக்க... மறுப்பாய் திரும்பவும் முகம் வெட்டினாள் அவள்.

'பின் வேறு என்ன?'

அவன் அதிர்வாய் கேட்க அவள் விளக்கினாள்.

'அன்று அந்த நகைகளை வாங்காமல் என்னிடமேகொடுத்து விட்டுப் போய்விட்டீர்கள். அதைமட்டும் வாங்கி நான் சொன்படி செய்திருந்தால் இந்நேரம் என்னைப் பார்க்க காரில் அல்லவா வந்திருப்பீர்கள்?

அவள் சீரியஸாய் கேட்க... இன்னும் இவள் திருந்தவில்லையா...? வேதாளமமுருங்கைமரம் ஏறிய கதையாய் அல்லவா இருக்கிறது. என யோசித்தவன் சீரியஸான முகத்துடன், 'அந்த நகைகளை என்ன செய்தாய்? என்றான்.

தோள்களை குலுக்கினாள் அவள். 'வேறு என்ன செய்ய முடியும்? நீங்கள் தான் பெரிய அரிச்சந்திர மகாராஜா போல் தப்பு செய்ய மாட்டேன் என்று ஓடிவிட்டீர்களே...அதான். அதனால்தான் அந்த நகைகளை எடுத்த இடத்திலேயே போய் யாருக்கும் தெரியாமல் பத்திரமாக வைத்துவிட்டேன்...' எனவும் அவன் பெரும் நிம்மதியாகி அப்பாடா...! என மூச்சிழுத்து விட்டான்.

அவ்ன அப்படி நிம்மதி அடைவதை பார்த்தவள், 'உங்களுக்கு



நிம்மதி ஆனால் எனக்கு எரிச்சல் எரிச்சலாக அல்லவா வருகிறது? எவ்வளவு அரிய சந்தர்ப்பம்? என்னுடன் சேரந்து ஒத்துழைக்காமல் கோட்டைவிட்டு விட்டீர்களே?' என்றாள் தனது ஆதங்கத்தை முழுவதும் குரலில் காட்டியவளாய்.

திவாகரனுக்கு அவள் பேசியதைக் கேட்டு கடும் எரிச்சல்தான். இருந்தும் எதையும் வெளிக்காட்டாதவனாய், 'வேறு எதாவது பேசுவோம்...' என்றான்.

அதற்கும் அவள், சட்டென முகம்மாறி, 'ஓ... பேசுவோமே!' என்றவள்,திவா அத்தான் இந்த வாரம் எனக்கு என்ன என்ன பரிசுப் பொருட்கள் எல்லாம் வாங்கித் தரப் போகிறீர்கள்? அது... என்ன..... ஆங்... ஞாபகம் வந்துவிட்டது.... இன்ப அதிர்ச்சி...! என்ன... இன்ப அதிர்ச்சி கொடுத்து என்னை அசத்தப் போகிறீர்கள்? என்றாள்.

'பரிசுப் பொருட்களா? எதற்கு?' கேட்டபடி புரியாமல் விழித்தான் திவாகரன்.

'என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? நான் யார்? உங்கள் ஆசைக் காதலி.... அருமைக் காதலிதானே? பிறகு ஒரு நல்ல காதலனாய் அடிக்கடி பரிசுப் பொருட்கள் வாங்கிக்கொடுத்து என்னைத் திணற அடிப்பதுதானே உங்கள் கடமை? எனக்கு அப்படி நீங்கள் வாங்கித்தராமல் வேறு யார் வாங்கித்தருவார்?'

அவள் மீண்டும் சீரியஸான குரலில் கேட்க நிஜமாகவே திணறிப் போனான் தினகரன்.

'சரிதான்! இவளுக்கு என்னவாயிற்று? இவள் இப்படி ஆளே மாறிவிட்டாளே! இவள் நாம் பார்த்த நேசித்த கவிதாவே இல்லையே...?' என திகைத்தவன் அதை வாய் விட்டு அவளிடமேகேட்டுவிட்டான்.

'கவிதா, நீ ரொம்பவும் மாறிவிட்டாய். நான் முன்பு பார்த்த ஏழைக் கவிதாவாய் நல்ல உள்ளத்துடன் இல்லாமல் இப்படி வேலைக்குச் சேர்ந்து சம்பாதிக்க ஆரம்பித்ததும் ஆளே மாறிவிட்டாயே? பணத்துக்கும் பகட்டுக்கும் ஆசைப்பட்டு.... இப்படி மயங்குகிறாய்... என்னாயிற்று உனக்கு?

அவன் திவாகரன் அவளை உலுக்காத குறையாய் கேட்க, கடகடவென தனது கலகலப்பு சிரிப்பை உதிர்த்தாள் அவள்.

'ஒன்றும் ஆகவில்லை அத்தான்! இப்போது தான் கண் திறந்து

நான் நன்றாக விழித்திருக்கிறேன். இந்த பணக்கார உலகத்தை நன்றாகப் பார்க்கிறேன். இந்த அதிவேகமான உலகத்தில் பணம்தான் பணம் ஒன்றுதான் முக்கியம். நாலு காசு கையில் சேர்த்து வைத்திருந்தால்தான்.... நம்மைநாலு பேர் என்ன நூறு பேர் மதிப்பார்கள். அதைவிட்டு விட்டு நேர்மைநியாயமான பழைய பஞ்சாங்கம் பாடிக்கொண்டிருந்தால் நடுத்தர வர்க்கமாய் என்றுமேபணத்துக்காக அல்லாடிக் கொண்டிருக்கும் வர்க்கமாய் நாம் வாழ்நாள் முழுக்க இருக்க வேண்டியதுதான். இதை புரிந்து கொள்ள வேண்டியது நீங்கள்தான். புரிந்து மாற வேண்டியதும் நீங்கள்தான்!'

தன் சுட்டு விரலை அவனை நோக்கி காட்டியபடி அவள் சொல்ல அரண்டுதான் போனான் அவன்.

அதற்குப் பின் ரொம்ப நேரம் பேசாமல் மௌனித்தவன், 'உன் தத்துவத்திற்கு நன்றி...! எனச் சொல்லியபடி அங்கிருந்து விருட்டென வெளியேறி விட்டான்.

அவன் போவதையே, போகும்திசையையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். அப்படிப் பார்த்தவளின் மைவிழிக் கண்களில் இமையோரமாய் மெல்ல கண்ணீர்த்துளிகள் தானாக பூக்க ஆரம்பித்தது.

❖❖❖❖❖

அதற்குப்பின் ஒரு பத்து நாட்கள் திவாகரன் அவள் பக்கமேவரவில்லை. அத்தை வீட்டிற்கு வந்தாலும் அவள் இல்லாத சமயமாய்ப் பார்த்து வந்து மஞ்சரியிடம் மட்டும் பேசிவிட்டுச் சென்றான்.

அப்படி பத்து நாட்கள் கழித்து ஒருநாள் ஏதோ ஒருவித குழப்பமான மனநிலையுடன் அன்று கவிதாவைப் பார்க்க வந்தவனுக்கு மறுபடியும் அதிர்ச்சி!

வேலை முடிந்து வெளி வந்த கவிதா அவன் பக்கம் வராமல் அவனுடைய பைக்கில் ஏறாமல் பளபளப்பு கார் ஒன்று அவள் பக்கம் வந்து நிற்க அதில் இருந்த மைனர் போன்ற தோற்றமுடையவனைப் பார்த்து கவிதா கையசைக்கிறாள். அவனும் பதிலுக்கு கையசைத்தபடி சிரிப்புடன் கார் கதவை திறந்து விடுகிறான். டபக்கென காருக்குள் ஏறிக்கொள்கிறாள் கவிதா.



சிட்டாய் பறக்கிறது கார்.
உறைந்து போய் நின்றான் திவாகரன்...!

## 14

அலுவலகத்தை விட்டு வெளிவந்த கவிதா திவாகரனை பார்க்கத்தான் செய்தாள். அவள் அப்படிப் பார்த்ததை திவாகரனும் பார்த்து விட்டான்.

ஆனால் கவிதா அவனைப் பார்க்காதது போல் தன் முன் வந்த அந்த பளபளப்புக் காரில் சிரித்தபடி ஏறிச் சென்று விட்டாள்.

திவாகரன் அதிர்ந்து போனவன் சும்மா இருக்கவில்லை. உடனடியாக அந்தக் காரை விரட்டி பின் தொடர்ந்தான். கார் கொஞ்சநேரத்தில் நகரின் பிரபலமான ஒரு ஸ்டார் ஹோட்டல் முன் போய் நின்றது.

உள்ளிருந்து கவிதாவும் அந்த மைனர் இளைஞனும் இறங்கினார்கள். கவிதாவின் கைகளோடு அந்த இளைஞர்ன கைகோர்த்து செல்லும் கண்கொள்ளாக் காட்சியையும் திவாகரன் பார்க்க நேர்ந்தது.

அப்படிசெல்லும் கவிதா முகத்தில்ஒடிய பரவசத்தையும் மகிழ்ச்சியையும் பார்த்து அவனுக்கு அதிர்ச்சியே ஏற்பட்டது. எப்படியிருந்தவள்... என்னமாய் மாறி விட்டாள்? என நம்ப முடியாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

அவள் கவிதா அவன் அப்படி பைக்கில் வந்து பின்னால் நின்று தன்னை உறுத்துப் பார்ப்பதை உணர்ந்தாளோ... அல்லது உணர்ந்தாலும் சிறிதும் அவனை சட்டை செய்துகொள்ளாதது போல் விறுவிறுவென சென்று விட்டாளோ தெரியாது. அவன் திவாகரன்தான் கற்சிலைபோல் அப்படியே அங்கு நின்று விட்டான்.

ஒரு அரைமணி நேரத்தில் திரும்பவும் கவிதா அந்த இளைஞனுடன் ஹோட்டலில் இருந்து அதே போலில் அந்த இளைஞனுடன் கைகோர்த்தபடி வெளிவர.... சிலைபோல் பார்த்துக் கொண்ருந்த திவாகரனால் அதற்கு மேல் தாங்கமுடியவில்லை.

டக்கென பைக்கை விட்டு கீழே ஒரு வேகத்துடன் இறங்கியவன் விறுவிறுவென அவர்கள் முன்போய் வழிமறிப்பது போல நின்றான்.

கவிதா அவனை அங்கு கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை போலும்!

சிரிப்பும் பேச்சுமாய் அந்த இளைஞனுடன் வந்தவள் திவாகரனை பார்த்ததும் அப்படியே ஷாக்கடித்தது போல் நின்றுவிட்டாள்.

அந்த பணக்கார இளைஞனும் திரும்பி இருவரையும் மாறி மாறி பார்த்தான்.

திவாகரன் பார்வையால் எரிப்பது போல் கவிதாவை இறுக்கமான முகத்துடன் துளைத்தான்.

மறுநிமிடமே கொண்டிருந்த அதிர்ச்சியை விலக்கி முகம் மாறினாள் கவிதா.

மறுபடியும் புன்னகையை அவசரமாய் முகத்தில் ஓடவிட்டவாறு பார்த்தவள், 'ஹலோ திவா, மீட் மிஸ்டர் கிஷோர். மை... பாய் பிரண்ட்!' எனச் சொல்லியவள் அத்தோடு நில்லாமல் அந்த பணக்கார இளைஞன் பக்கமும் திரும்பி, 'ஹி இஸ் திவாகர்! மை ரிலேட்டிவ்!' என்றாள் நுனி நாக்கு ஆங்கிலத்தில் சர்வ சாதாரணமாய்.

உடன் வந்த இளைஞர் கிஷோர் உற்சாகமாகி, 'ஹாய்.... பாஸ்!...'என கைகளை நீட்டினான்.

திவாகரனோ அதைச் சட்டை செய்யாமல் கவிதாவையே முறைத்தான்.

ஆனால் கவிதா அந்த முறைப்பை எல்லாம் சட்டை பண்ணுகிற நிலைமையில் இல்லை.

ஓ.கே! எனக்கு நேரமாயிற்று. வருகிறேன். வாருங்கள் கிஷோர்...! என அவனை இழுத்துக் கொண்டு போய் விட்டாள்.

திவாகரனின் அந்த சுட்டெரிக்கும் பார்வையை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் அவள் பாட்டுக்கு அந்த பிரபுவுடன் காரிலேறி பறந்து விட்டாள்.

திவாகரன்தான் நடப்பதை நம்ப முடியாமல், ஜீரணிக்க முடியாமல் ரொம்ப நேரம் அப்படியே திகைத்து நின்று விட்டான்.



ஒரு மாதத்தில் கவிதா இந்தளவுக்கு மாறிவிட்டாளே! எப்படி இருந்தவள் எப்படி ஆகிவிட்டாள? எல்லாம் வேலைக்குச் சென்று தானும் சம்பாதிக்க ஆரம்பித்தவுடன் இனி யார் தயவும் தனக்கு தேவையில்லை என நினைத்துவிட்டாளா?

அப்படிப் பார்த்தாலும் அவளுக்காக இரக்கப்பட்டு தெரிந்த நண்பர்கள் மூலமாய் இந்த வேலையை வாங்கிக் கொடுத்ததும் அவன்தானே? அவன் மூஞ்சிலேயே இப்படி கரியைப் பூசுகிறாளே!

அப்படியானால் இதுதான், இப்படி பணத்துக்கும் ஆடம்பரத்திற்கும் ஆசைப்படுவதுதான் கவிதாவின் உண்மையான குணம் சுபாவமா? அதான் அத்தை வீட்டில் அனாதையாய் வளரும் சூழ்நிலையில் அடங்கிக் கிடந்தவள் இப்போது இப்படி சம்பாதிக்க ஆரம்பித்ததும் தலைவிரித்து ஆட ஆரம்பித்துவிட்டாளா?

திவாகரன் நம்பமுடியாத அதிர்ச்சியுடனே அன்று அகன்றுவிட்டான். அதன் பின் அவன் ஒரு வாரம் கவிதாவின் அலுவலகம் பக்கமேஎட்டிப் பார்க்கவில்லை. கனகம் அத்தையின் வீட்டுப் பக்கமும் போகவில்லை.

ஒரு பத்து நாள் கழித்து அத்தை வீட்டிற்குப் போனவனுக்கு அன்று அத்தை சொன்ன விஷயம் அதிர்ச்சிதான்!

கவிதா அத்தை வீட்டிலிருந்து மூன்று நாட்களுக்கு முன் வெளியேறி தன் உடைமைகளோடு எங்கோ ஒரு மகளிர் விடுதியில் போய் தங்கிக்கொள்வதாகச் சொல்லி சென்று விட்டாளாம். அத்தையும், மாமாவும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவள் கேட்கவில்லையாம்.

முக்கியமாக அவள் யார் யாருடனோ காரில் வந்து இறங்குவதையும், வீட்டுக்கு அடிக்கடி லேட்டாக வருவதையும் கண்டித்து கேள்விக் கேட்டதாலே இப்படி எடுத்தெறிந்து ஒரு முடிவை எடுத்து விட்டதாகவும் அத்தை தெரிவித்தபோது திவாகரன் அப்படியே மௌனமாகிவிட்டான்.

அவன் யூகித்ததுதான் இது! ஆனால் இப்படி சொந்தக்காலில் நிற்க வேண்டும்.... சம்பாதிக்க ஆரம்பித்ததும் யாருக்கும் பாரமில்லாமல் மகளிர் விடுதி ஒன்றில் தங்கிக்கொள்ள வேண்டும். என்றெல்லாம் அவளுக்கு அறிவுரை சொல்லி கற்றுக் கொடுத்ததே அவன்தான்!

அதை இவ்வளவு சீக்கிரமாக ஒரு படிமேலே போய் இப்படி விதண்டாவாதமாய் கவிதா செய்து காட்டுவாள் என அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை.

அத்தையோ தொடர்ந்து அவளை வசைபாடிக் கொண்டிருந்தாள். அனாதைக் கழுதை.... நன்றியில்லாத நாய்... என அவள் சொன்ன ஒவ்வொரு வசவு வார்த்தைகளும் கவிதாவிற்கு பொருந்தும் போலவே இருந்தது.

அத்தை அவள் குணம் அறிந்துதான்அவளை அடக்கி ஒடுக்கி கண்டிப்பாய் வளர்த்தாளோ.. நாம்தான்அது புரியாமல் அவளுக்கு சுதந்திரம் கொடுப்பதாய் நினைத்து வேலை வாங்கி கொடுத்து சொந்தக்காலில் நில் என்றெல்லம் சொல்லி கவிதாவின் வாழ்க்கையை சீர்குலைத்து விட்டோமோ என்ற நினைப்பும் திவாகரனுள் ஓடியது.

இருந்துமகவிதாவை அவள் வேலை பார்க்கும் இடத்தில் போய் பார்க்க வேண்டும். பார்த்து நாலு வார்த்தை நறுக்கென சொல்லி ஒரு அறை விட்டாவாது அவள் புத்தியை தெளியவைக்க வேண்டும் என்று நினைத்தான்.

கடைசி முயற்சியாய் அப்படி அவன் கவிதாவைத் தேடிச் சென்றபோது அவன் எதிர்பாராத பெரிய அவமானம் ஒன்றும் அவனுக்கு ஏற்பட்டது.

அலுவலக ரிசப்ஷன் பகுதியில் தனியறை ஒன்றில் உட்கார வைத்து அவன் சிடுசிடுவென கோபமாய் கண்டித்துஅவளுக்கு அறிவுரை கூற... கையை உயர்த்தி அசால்டாய் அவன் பேச்சை நிறுத்தினாள் கவிதா.

இதோ... பாருங்கள், உங்கள் அறிவுரை எல்லாம் எனக்குத் தேவையில்லை. எனக்கு அறிவுரை சொல்ல நீங்கள் யார் மிஸ்டர்? என எடுத்தெறிந்து அவள் கேட்க திணறிப் போய் விட்டான் திவாகரன்.

அதிலும் அவள் உச்சரித்த மிஸ்டர் வார்த்தை அவனுக்கு பெரும் ஆத்திரத்தைக் கிளப்ப, என்ன அதற்குள் நான் உனக்கு மிஸ்டர் ஆகிவிட்டேனா...? என பெயர் கூட மறந்து போயிற்றா...? என்றபடி அவளை அறைய கோபமாய் கைகளை ஓங்கினான் அவன்.

அதையும் அனாசியமாய் தட்டி விட்டாள் அவள்.

இது அலுவலகம் மிஸ்டர். இங்கு வரம்புமீறினால் மரியாதை கெட்டுவிடும். உங்கள் வேலையை பார்த்துக்கொண்டு போங்கள் பூ...



கேன் கோ...!

எரியுமவார்த்தைகளை வீச... திவாகரன் அப்படியே ஸ்தம்பித்து விட்டான்.

அதற்குமேல் அவனால் ஒரு வார்த்தை பேச முடியவில்லை.

மூக்கறுபட்டவன்போல் கோபமாய் திரும்பியவன் சவிறுவிறுவென அங்கிருந்து அகன்றான்.

அவன் அப்படிப் போவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள் கவிதா.

அவள் மைவிழிக் கண்களில் இருந்து மறுபடியும் பொலபொலவென கண்ணீர்த்துளிகள் சிதறி ஓடியது.



# 15

நேரமும் காலமும் யாருக்கும் காத்திராது என்பது போல் விரைந்து ஓடியது.

நாட்கள், மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாக உருண்டோடியது.

இரண்டு வருடங்கள் போனது கூட தெரியவில்லை. எப்படி இவ்வளவு வேகமாய் விரைவாய் போனது என கவிதாவிற்கு கூட ஆச்சரியம்தான்!

எங்கோ ஒரு பெண்கள் விடுதி ஒன்றில் காலையில் எழுந்து சுறுசுறுப்பாய் காலண்டர் தேதியை கிழித்தபடி வேலைகளை கவனிக்கப் போனவள்....அன்றைய தேதியைப் பார்த்து ஒரு கணம் அப்படியே நின்றாள்.

ஆனி மாதம. முதல் தேதி. திங்கள்கிழமை. அவளால் மறக்கமுடியாத நாள்!

இதே நாளில் இதே திங்கட்கிழமையில்தான் அவள் திவாகரனை முதன் முதலாய் சந்தித்தாள், அதுவும் சரியான இரண்டு வருடங்களுக்கு முன்பு!

அந்த நாள் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அன்று அத்தை, மாமா, மஞ்சரி எல்லோரும் அவளை விட்டுவிட்டு எங்கோ சினிமா

சென்றுவிட அவள் மட்டும் தனியே வீட்டிலிருந்தாள்.

அப்போதுதான் கதவைத் தட்டினான் திவாகரன். திவாகரன் வீட்டுக் கதவை மட்டுமல்ல அவள் இதயக்கதவையும் அன்றே தட்டிவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்று உள்ளே வந்து அவன் அவளிடம் பேசிய விதம், அவன் காட்டிய பரிவு, அன்பு இதுவெல்லாம் தன்னையும் இந்த வீட்டில் ஒரு ஜீவனாய் மதித்து இப்படி பேசுகிறானே என அவள் உள்ளத்தில் ஆனந்த கூத்தாட வைத்து மிகப் பெரிய உண்மையையும் அவளுக்கு உணர்த்தியது.

உலகில் அத்தையைப் போல் இல்லாமல் அன்பாய் ஆதரவாய் நேசக்கரம் நீட்டுவோரும் உண்டு என மகிழ்ந்துதான் போனாள்.

மேலும் அப்படி ஒரு அன்பையும் பரிவையும் தன் மீது காட்டியது ஒரு பிரமிக்கத்தக்க கம்பீரமும் வசீகரப் புன்னகையையும் உடைய படித்த இளைஞர் என்றபோது இதுவரை அவள் மனதில் ஏற்படாத உணர்ச்சிகள் அவளுள் எழுந்து அவளை ஒர ஆட்டு ஆட்டி வைத்தது அன்றுதான். திரைப்படங்களிலும், காதல் கதைகளிலும் வரும் இதயம் என்பது என்ன என்றும் அது தனக்கும் நெஞ்சுப்பகுதியில் இருக்கிறது என்பதையும் உணர்ந்தாள்.

தொடர்ந்து திவாகரன் அவளிடம் பேசியது, அவனும் அவளைப் போலவே அவளிடம்பேச ஆர்வம் காட்டியது, அவள் வாழ்க்கையை மாற்றி முன்னேற யோசனைகள் சொன்னது.... எல்லாம் கவிதாவை மேலும் கவர்ந்து அவளது மனமகுடத்தில் நாளுக்கு நாள் உயர்ந்து ஒரு நாள் தனது மன்னவனாகவே அவனை முடி சூட்டியும் கொண்டாள் அவள்.

அனால் அந்த இனிமை.அந்த கரைபுரளும் மகிழ்ச்சி ஆனந்தம் நிலைக்கவில்லையே? அந்த அவளுக்கு கிடைத்த அற்புதமான ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் அவளே குலைத்துவிட துணிந்தாளே? அவளது விரல்களைக் கொண்டே அவளது கண்களைக் குத்த அவளும் கடைசியில் சம்மதித்தாள் தானே?

எல்லாம் விதி! விதிப்படிதான் எல்லாம் நடக்கும்! என தனக்குத்தானே தாரக மந்திரம் போல் அந்த வார்த்தைகளை சொல்லிக்கொண்டு மனதை அடக்கினாள். தன் கவனம் முழுவதும் வேலை என்று ஆக்கிக் கொண்டு நடமாடினாள்.



என்னதான் மறக்க நினைத்தாலும் அடிக்கடி அந்தக் காட்சிகள் மனதுள் எழுந்து அவளை துன்புறுத்தாமல் இல்லை. திவாகரன் அதன்பின் சொந்தம் விட்டுப் போய்விடக்கூடாது என மஞ்சரியை மணந்திருப்பான்.

நகரின் பெரிய திருமண மண்டபம் ஒன்றில் அவர்களது திருமணம் தடபுடலாய் நடந்திருக்கக்கூடும்! இப்படியெல்லாம் கற்பனைகள் எழுந்து அவளை தினம் அவஸ்தைப்படுத்தி கொல்ல ஆரம்பிக்க ஒருநாள் சட்டென அந்த ஊரைவிட்டு முதலில் வெளியேற தீர்மானித்தாள் இரண்டு வருடங்களுக்கு முன்பு.

அந்த அவளது ஊரை காலி செய்யுதமயோசனைக்கு வலுசேர்ப்பது போல் அவள் வேலை பார்த்த அலுவலகத்தில் கம்பெனி மேனேஜர் பேசிய ஒன்றை தற்செயலாக அவள் கேட்க நேர்ந்தது. கம்பெனியின் புது வெளி மாநில கிளையாய் ஆந்திர மாநிலத்தில் உள்ள ராஜமுந்திரியில் பிராஞ்ச் ஒன்றை திறக்க இருப்பதாகவும் அதற்கு ஆட்களை தேடிக்கொண்டிருப்பதாக யாரிடமோ சொல்வதைக் கேட்டவள் உடனே குஷியாகிவிட்டாள்.

ஊரை விட்டு போக நினைத்தவளுக்கு.... இந்த மாநிலத்தை விட்டே வேறு மொழி பேசும் இடத்திற்கு செல்வதை நினைத்து ஒரே குஷி! இனி அவளை திவாகரன் என்ன... யாராலும் எங்கு எப்படி இருக்கிறாள் என அடையாளம் காண முடியாதே? அப்படி யாருக்கும் தெரியாமல் தான் ஒரேடியாய் தொலைந்து போக வேண்டும் என மனதார விரும்பி அன்றே மேனஜரைத்தேடிப்போய் சம்மதத்தை சொன்னாள்.

மறுவாரமே.அவளுக்கு ஆந்திர மாநிலத்தின் ராஜமுந்திரி ஊர் கிளையில் சேர ட்ரான்ஸ்பர் ஆர்டர் கிடைக்க அன்று இரவு உடமைகளை பாக் செய்து கொண்டு ரயிலேறினாள் அவள்.

கவிதா ராஜமுந்திரி சென்ற புதன் இரண்டு மாதங்களுக்கு புரியாத பாஷை, தெரியாத மனிதர்கள் என கண்களைக் கட்டி காட்டில் விட்டது போல்தான்இருந்தது. இருந்தாலும் பல்லைக் கடித்துக்கொண்டு எல்லோரிடமும் பழகினாள். ஒவ்வொன்றாய் கற்றுக்கொண்டா;ள.

அங்கும் மகளிர் விடுதி ஒன்றிலே தங்கியிருந்ததால் உடன் இருந்த ரூம் மேட்களுடன் சினேகமாகி அவர்களுடனே ஷாப்பிங் வேலை என சென்று வந்து ஓரளவு பாஷையையும்ஊரையும் நன்கு

தெரிந்து கொண்டாள்.

அங்கேயும் திடீரென ஒரு யோசனை அவளைக்குடைந்தது. அதாவது திவாகரன் எதற்காகவாது அவளைத் தேடி அவள் என்ன செய்கிறாள் எங்கு இருக்கிறாள் என விசாரிக்க ஆரம்பித்துவிட்டால்?

அதுவும் அவள் முன்பு வேலைபார்த்த இடத்தில் போய் கேட்டால் உடனே தான் இப்படி ராஜமுந்திரிக் கிளையில் மாற்றலாகி வேலை பார்ப்பதை எளிதில் சொல்லி விடுவார்களே?

பின் யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழ்வதாய் நினைத்துக் கொண்டிருக்கும் அவளை உள்ளங்கை நெல்லிக்கனி போல் சட்டென திவாகரன் கண்டுபிடித்து விடலாம்தானே?

பின் யாரை இனி தன் வாழ்நாளில் பார்க்கக் கூடாது.... யார் முகத்தில் இனி தன் வாழ்நாளில் முழிக்கக்கூடாது என நினைத்திருக்கிறாளோ.... அது நிறைவேறாமல் போய்விடுமே!

திவாகரனை சொல்ல முடியாது. முன்பு அவனை அவமானப்படுத்தியதற்கு அவன் ஆத்திரமாய் அவளைத் தேடி வந்து கூட மோதலாம். சண்டை இடலாம். என் வேண்டுமானாலும் செய்யலாம்!

ஆனால் அதற்கெல்லாம் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது. இனி அந்த நல்லவனின் பார்வையில் படக்கூடாது... அந்த நல்ல ஆத்மாவின் முகத்திலும் விழிக்கக்கூடாது அதற்கு தனக்கு அருகதை இல்லை.... என தீர்மானமாய் முடிவெடுத்தவள் தனது விடுதி தோழிகளின் உதவியுடன் பார்த்த வேலையை ராஜினாமா செய்து விட்டு வேறொருத கம்பெனியில் அசிஸ்டெண்டாக சேர்ந்தாள்.

பின் அதுவும் பிடிக்காமல் இன்னொரு மெடிக்கல் கம்பெனி அங்கிருந்து இன்னொரு கார்மெண்ட் கம்பெனி என்றெல்லாம் சுற்றி கடைசியில், மினர்வா லேண்ட் புரோமட்டர்ஸ் என்ற கட்டுமானக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தாள்.

மேனஜ்மெண்ட் ட்ரெய்னி என்ற பிரிவில் அவளுக்கு வேலை. கோடிகளில் புரளும் பெரிய கம்பெனி அது. அதனால் கை நிறைய சம்பளமும் கொடுத்தது.

அந்த சம்பளத்திற்கு தனியாய் ஒரு வீடு எடுத்துக் கூட அவள் தங்கிக் கொள்ளலாம். ஆனால்... அப்படிச் சென்றால் வேலை நேரம்

தவிர மற்ற நேரத்தில்தனிமைபயங்கரமாய் உருவெடுத்து தன்னை கொல்லுமே... என பயந்தாள்.

அதைவிட அலுவலகத்தில் தோழிகளும் சில நலன் விரும்பிகளும் அக்கரையாய் அவளிடம் கல்யாணம் எப்போது? சீக்கிரமாய் எங்களுக்கு கல்யாணச் சாப்பாடு போடு! என்றெல்லாம் உரிமையுடன் கேட்கும் போது திகைக்கவே செய்தாள்.

கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இனி கல்யாணம் என்ற ஒன்று தன் வாழ்க்கையில் ஒருபோதும் வரப்போவதில்லை என எப்போதோ அவள் உறுதியாய் தீர்மானமாய் முடிவெடுத்து விட்டாளே?

ஆனால் அவள் உடம்பின் அழகை அடிக்கடி வருடும் ஜொள்ளர்களின் கண்களுக்கும், சில அக்கறையான நலன் விரும்பிகளுக்கும் பதிலளிக்கும் வகையில் விபரிதமாயும் அவளுள் யோசனை ஓடிற்று.

பேசாமல் ஒரு மஞ்சள் கயிற்றை எடுத்து கழுத்தில் கட்டிக்கொண்டு, மாப்பிள்ளை துபாயில் இருக்கிறார்.... வருடத்திற்கு ஒருமுறைதான் வருவார்.... என்றெல்லாம் கதைவிட்டு கூட காலத்தை ஓட்டிவிடலாமா என்று கூட சிந்தித்தாள்.

மேலும் இந்த பொல்லாத சமூகத்தில் ஒரு ஆண் கல்யாணத்தை விரும்பாவிட்டால் அது அவனை பிரம்மச்சாரி என அந்தஸ்து கொடுத்து நன்றாக தட்டிக் கொடுக்கும். அதே விஷயத்தை ஒரு பெண் செய்தால் அது பெரிய தவறாக எடுக்கப்பட்டு ஆயிரம்பேர் ஆலோசனைசொல்ல வரிந்து கட்டிக்கொண்டு வந்து விடுவர். என்ன நியாயம் இது?என நினைத்தாள் அவள்.

எது எப்படியோ... எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு, இந்த ஆந்திர மாநிலத்தில் யாருக்கும் தெரியாத இந்த ஊரில் ஒளிந்துகொண்டு இப்படியே இந்தக் கம்பெனியில் வேலை பார்த்து வாழ்க்கையை ஓட்டிவிட வேண்டியதுதான்.... என உறுதியாய் தீர்மானித்து அதன்படி வாழவும் ஆரம்பித்துவிட்டாள் கவிதா.

ஆனால் விதி வலியது என்பதுபோல் அவள் நிம்மதியை குலைக்கும் வண்ணம் அவள் கம்பெனியில் மறுவாரம் ஒரு சம்பவம் அரங்கேறியது. அவளது கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனிக்கு புதியதாய் மேனஜராய் எங்கிருந்தோ ட்ரான்ஸ்பரில் வந்திருந்தான் அவன்!



யாராயிருந்தால் நமக்கென்ன?

ஒரு வாழ்த்தையும் சலாமையும் போட்டுவிட்டு நாம் பாட்டுக்கு வேலையைப் பார்ப்போம் என எல்லோரையும் போல் அன்று அந்த புதிய மேனஜரிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள அவனது ரூம் நோக்கிச் சென்றாள் அவள்.

அந்தக் கம்பெனியின் மற்ற ஐம்பது பணியாளர்களும் அன்று காலை மேனஜர் ரூமிற்கு வந்ததுமே சென்று தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு வந்துவிட்டார்கள். அவள் ஒருத்திதான் சாவகாசமாய் பதினொரு மணியைத் தாண்டிய காபி பிரேக்கில் எழுந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளச் சென்றாள்.

மேனஜர் அறையின் பெரிய கண்ணாடிக் கதவுகளைத் திறந்து ஒருவித அசட்டையுடன் குனிந்த தலையாகவே நுழைந்தாள்.

'மகாராணியாருக்கு வந்தனங்கள். புது மேனஜரைப் பார்க்க இப்போதுதான் மகாராணியாருக்கு மனம் வந்ததோ? வாருங்கள்... வாருங்கள்... மேடம்...!'

'மகாராணி... மேடம்' என்ற கிண்டலுடன் குத்தலும் குதறுமாய் வார்த்தைகள் வந்துவிழ திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். பார்த்தவளுக்கு காலடியில் பூமியே நழுவியது.

அங்கு மேனஜர் இருக்கையில் கம்பீரமாக அமர்ந்திருந்தது திவாகரன்!



## 16

கவிதா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

மேனஜர் இருக்கையில்... திவாகரன்!

யாரை இனி தன் வாழ்நாளில் சந்திக்கக் கூடாது, யாரை முகத்தில் இனி தான் முழிக்கவே கூடாது என நினைத்த அதே திவாகரன்!

அவளுக்குத்தான் அந்த பலத்த அதிர்ச்சி! ஆனால் திவாகரன் முகத்தில் எவ்வித சலனமுமில்லை. அவன் காலை மேனஜர்

பொறுப்பை சார்ஜ் எடுத்ததுமகம்ப்யூட்டரை தட்டி ஊழியர்களின் விவரங்களை தெரிந்திருப்பான். அந்த விவரங்களில் இருக்கும் தனது புகைப்படத்தைக் கண்டு அப்போதே அந்த அதிர்ச்சியை உணர்ந்திருக்கக் கூடும்.

அதனால்தான்இப்போது எவ்வித சலனமுமில்லாமல் கல்லூரிமங்கன் போல் தன்னை பார்க்க முடிகிறதோ?

ஆனால் அந்த சலனமில்லாத பார்வையைக் கூட அவளால் தாங்கமுடியவில்லை. படபடப்பும் அதிர்ச்சியும் கூடியவளாய் துடித்தாள்.

முகத்தை எப்படி வைப்பது... என்ன செய்வது... நிமிர்வதா... குனிவதா... அவனிடம் என்ன சொல்ல... என்ன.... பேச....? என்றெல்லாம் புரியாதவளாய் தடுமாறினாள்.

அவள் தடுமாற்றத்தை விசித்திரமாய் பார்த்தவாறு அவன் எழுந்து வந்தவன் மேஜைமுன் வந்து சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கைகளைக் கட்டிக் கொண்டான்.

அவனை நோக்கி அந்த அலட்சியமான துளைக்கும் பார்வையை தொடர்ந்து அவன் வீச மேலும் தடுமாறியவள் சமாளித்து, 'குட்... குட்... குட்மார்னிங் சார்...!' என்றாள், பின் தொடர்ந்து அதே தடுமாற்றத்துடன், வாழ்த்துக்கள்... 'வாழ்த்துக்கள் சார்...!' என்று முடித்தாள்.

அவன் புருவம் எகிறியது.

'வாழ்த்துக்களா...? எதற்கு...?நான் மேனஜராய் வந்ததற்கா...? இல்லை... உனது ஆடம்பர அலங்கார கோர்ஃப்ரீ வாழ்க்கையை கண்குளிர நான் பார்த்து ரசிக்க வந்ததற்காகவா?' என்றான்.

அவள் மறுபடியும் குனிந்தாள்.

'பதில் சொல்..' என்றான் அவன் உறுமலாய்

'அது... அது... ஒன்றுமில்லை சார்...' என்றாள்

மறுபடியும் தடுமாறி.

அவன் விடவில்லை.

சட்டென அவள் முன் வந்தான்.

'ஒன்றுமில்லையா...? எது ஒன்றுமில்லை...?' என்றபடி கைகளால் சிவந்து குனிந்திருந்த அவளது முகத்தை மேல் நோக்கி நிமிர்த்தினான்.



'அதே... மைவிழிக் கண்கள்! முத்துப் புன்னகை! ஏற்றம் இறக்கத்தோடு அபார வளைவுகள்...! என அவள் உடம்பு பூராவும் தனது கழுகுப் பார்வையை ஓடவிட்டு ரசித்து வர்ணித்தவன், ஆஹா...! உன் அழகு கொஞ்சமும் குறையவில்லை. மென்மேலும் மெருகேறிதான் இருக்கிறது... அழகிய நல்ல பாம்பின் ஆபத்தான கவர்ச்சி போல...! என்றவன் முகத்தை சட்டென மாற்றி இறுக்கமாக்கிக் கொண்டு, இந்த அழகை வைத்து என்னைப்போல் எத்தனை முட்டாள் ஆண்களை வீழ்த்தியிருப்பாய்...? சொல்...!' என்றான்.

அவள் அப்படியே நொறுங்கித்தான் போனாள்.

கடவுளே.... என்ன இது...!

இதற்காகத்தானே இவனைப் பார்க்கக் கூடாது இவன் கண்ணில் படக்கூடாது என ஓடி ஒளிந்தாள்...?

கடைசியில் மீனுக்கு சிக்கிய இரைபோல் வெளிச்சத்தில் மதியிழந்து விட்டில் பூச்சி போல் வசையாய் இனிடம் மாட்டிக் கொண்டாளே!

என்ன செய்வது?

பதில் சொல்லாமல் இங்கிருந்து ஓடி விடலாமா?

இவன் இந்தக் கம்பெனியின் மேனஜர் அவ்வளவுதானே...? இதைவிட்ட இந்த வேலையை விட்டு ஓடிவிட்டால் போதுமே? இவனால் என்ன செய்ய முடியும்?

சட்டென அவள் மூளையினுள் ஓடிய அந்த குறுக்குப் புத்தியின் யோசனையைக் கூட அவன் அவளது முகக்குறிப்பை வைத்து யூகித்து விட்டான் போலும்.

'என்ன... ஓடிவிடலாம் என்று பார்க்கிறாயா?' .... என கண்களைச் சுருக்கி கேட்டவன், 'அது உன்னால் முடியாது. அப்படி வேலையை விட்டு ஓட நினைத்தால்... அதுவுமமுடியாது போனமாதம்தான் நீ வேலைக்குச் சேர்ந்து இரண்டு வருட காண்டிராக்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கிறாய். அதனால் நீ போக நினைத்தாலும் கம்பெனி விதிகளின்படி உன்னிடம் இருந்து கம்பெனிவாங்கி வைத்திருக்கும் உன்னுடைய படிப்பு சர்டிபிக்கேட்டுகளை உனக்கு ஒருபோதும் கிடைக்காது. அதனால் நீ வேறு வேலை தேட முடியாது. இங்குதான் எனக்கு கீழ்தான் இரண்டு

வருடம் வேலை பார்த்து குப்பை கொட்டியாக வேண்டும்.... புரிகிறதா?' மறுபடியும் ஒரு புலியின் உறுமலோடு உறுமினான் அவன்.

அவன் சொன்ன நிஜத்தின் தன்மையை புரிந்து அவள் திகைக்க... அந்த திகைத்த விழிகளின் முன் கையால் சொடுக்கினான் அவன்.

'மாநிலத்தை மாற்றி... ஊரை மாற்றி... யாருக்கும் தெரியாமல் ஓடி வந்து விட்டால் உன்னை கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்தாயா ? இரண்டு வருடங்கள் உன்னைத் தேடித் துருவி... நீ இங்கு இருப்பதை கடுபிடித்து அதற்காகவே இந்தக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து... உனக்காகவே, உன்னை பழிவாங்கவே... இங்கு மேனஜராய் வந்திருக்கிறேன். அவ்வளவு எளிதில் உன்னைவிட்டு விட முடியுமா? என் தண்டனையில் இருந்து தப்பி விடுவாயா?'

அவளை ஒரு வித்குரூரப் பார்வை பார்த்தபடிட அவன் கேட்க கேட்க... இரண்டு கைகளாலும் காதுகளை பொத்திக் கொண்டாள் அவள்.

பழிவாங்கல்... தண்டனை... அவளுக்காக தேடித்... துருவி... திட்டம் போட்டு வந்திருக்கிறானாமே...? அப்படியானால் என்ன நடந்தது? மஞ்சரியை இவன் மணக்கவில்லையா?

அந்தச் சூழ்நிலையிலும் அவளது புத்தியில் அதுவே பெரிதாய் உரைக்கஅதையே கேள்வியாய் சட்டென கேட்டும் விட்டாள்.

'மஞ்சரியை நீங்கள் மணக்கவில்லையா?' என முகம் நிமிர்த்தி அவள் ஆவலாய் கேட்ட விதமும் அவளது அதித எதிர்பார்ப்பையும் 'கண்டவன் கொண்டிருந்த குதர்க்கத்தைக்குறைக்காமல், மணந்தாயிற்று. மணந்து பிள்ளையும்பெற்றாயிற்று... போதுமா?' வேறென்ன உனக்குத் தெரிய வேண்டும்? என்றான் சீற்றத்தை சிறிதும் குறைக்காமல்.

மறுபடியும்அவளுக்கு பாதங்கள் நழுவி பாதாளத்தில் விழுவது போன்ற உணர்வு.

மஞ்சரியை மணந்தாயிற்று. பிள்ளையையும் பெற்றாயிற்று!

ஆக... அவள் நினைத்தது போல்தான் நடந்திருக்கிறது. அவள்தான்அப்படியே இருக்கிறாள். திவாகரன் மாறிவிட்டான்.



மஞ்சரியை கட்டிக்கொண்டு பிள்ளை பெற்று குடும்பஸ்தனாகவும் மாறிவிட்டான்...!

கடைசியில் அத்தை கனகம் நினைத்தது போலவே எல்லாம் நடந்திருக்கிறதே!

சரி... பின்... என்ன.... அவள் மேல் அவனுக்கு கோபம்? இந்த சீற்றம்...., இந்த பழிவாங்கல்... தண்டனை என்றெல்லாம் எதற்காக பிதற்றல்...? எல்லாம் முடிந்த பின் அவளுக்குத் தண்டனையா? இதுவரை அவள் அனுபவித்தவைகள் போதாதா?

அந்த எண்ணம் அவளுள் கோபத்தை அதிகரிக்க துணிச்சலாய் நிமிர்ந்தாள். தயக்கத்தை நீக்கி அவனை அவனைப் போலவே நேருக்கு நேர் உறுத்துப் பார்த்தாள்.

'ஹலோ.... மேனஜர் சார்... உங்களுக்கு கல்யாணமும் ஆகிவிட்டது... குடும்பமும் இருக்கிறது. பின் எதற்கு என்னைப் பற்றிய கவலை..? என குரலை உயர்த்தியவள் தொடர்ந்து, இதில்... பழிவாங்கல்... தண்டனை என்றெல்லாம் பிதற்றல் வேறு...' என்ற முணுமுணுப்புடன் முடித்தாள்.

அதைக் கேட்ட திவாகரனின் முகம் மேலும் சிவந்து இறுகியது. டக்கென ஒரு எட்டு முன்னால் வைத்து அவள் இரண்டு தோள்களையும் தன்பக்கம்திருப்பி அழுத்துவது போல் அழுந்தப் பற்றினான்.

'கவலையா...? அதுவும் எனக்கு உன் மீதா ? என பரிகாச சிரிப்பை உதிர்த்தவன், இதோ பார் பேபி, நீ என்னை நம்பவைத்து கழுத்தறுத்ததை, ஏமாற்றி அவமானப் படுத்தியதை எல்லாம் மறந்துவிட்டாயா?அதற்குத்தான் பழிவாங்கல்... குரூரமாய் உனக்கு தண்டனை கொடுக்கப் போகிறேன்...' என்றவன் சினம் குறையாது, 'என்ன சொன்னாய் மேனஜர் சாரா? அதுவும் சரிதான்...! இந்த மேனஜர் சார்தான் உனக்கு நாளை முதல் அந்த ஸ்பெஷல் தண்டனைகளை ஆரம்பித்து வைக்கப் போகிறார்.. இப்போது நீ போகலாம்...!'

மிடுக்காய் சொல்லி அவளை அனுப்பியும் வைத்தான்.

குழம்பித்திகைத்தவளாய் வெளிவந்தாள் கவிதா.



# 17

விடுதி ரூமிற்கு வந்து படுக்கையில் தொப்பென விழுந்தாள் அவள். நடப்பதை கொஞ்சமும் நம்ப முடியவில்லை!

திவாகரன் வருவான் அதுவும் அவள் பார்க்கும் அலுவலகத்திற்கே மேனஜராய் வருவான் என அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை!

ஆனால் எல்லாம் நடக்கிறதே...!

வந்து விட்டான். வந்து அவளைப் பார்த்ததும் குதிகுதியென்று குதிக்கிறான். ஏமாற்றல், பழிவாங்கல், தண்டனை என ஏதேதோ பிதற்றுகிறான்.

அவளை ஏதோ அழகை காட்டி மயக்கும் மாயக்காரி பித்தலாட்டக்காரி என்று கூட நம்புகிறான். இதில் நல்ல பாம்பின் கவர்ச்சி போல என்ற புகழுரை வேறு.

பேசாமல் உண்மையைச் சொல்லி விடலாமா? என்று நினைத்தாள்.

ஆனால் இன்னொரு மனம் கேள்விகளை எழுப்பியது.

அத்தை கனகம் நினைத்தது போலவே மஞ்சரியை மணந்து விட்டானே? இனி உண்மைகளைச் சொல்லி என்ன பயன்? அப்படி அந்த உண்மைகளைச் சொன்னாலும் மஞ்சரியின் வாழ்க்கைதான் பாழாகும். பெரிய கேள்விக்குறியாகிவிடும்!

அவளைக் கட்டிக்கொண்டு பிள்ளை வேறு பெற்றாயிற்று என்று கூசாமல் அவளிடமேசொல்லிவிட்டான். பின் அவள் உண்மையைச் சொன்னால் மஞ்சரி மட்டுமல்ல, அவளது குழந்தையின் நலனும் பாதிக்கப்படுமே?

அப்படி மஞ்சரியின் வாழ்க்கையை சீர்குலைத்து நியாயம் பேசி உண்மைகளை விளம்பி அவள் என்ன பயனைக் கண்டுவிடமுடியும்?

அதுவும் ஒன்றும் இல்லைதானே?

பிறகு எதற்கு உண்மைகளைச் சொல்லவேண்டும்? அந்த



ரகசியங்கள், உண்மைகள் தன்னோடு போகட்டும். . அவனுக்கு ஒருபோதும் தெரிய வேண்டாம். தானும் சொல்லப் போவதில்லை..! என மறுபடியும் தீர்க்கமாய் ஒரு முடிவெடுத்தாள் அவள்.

கூடவே அவனது மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சப் போவதில்லை. அவன் என்ன குத்து குத்தினாலும் வாங்கிக் கொள்ள வேண்டியதுதான். இதயம் என்ற ஒன்று இருந்தால்தானே நெஞ்சுப்பகுதி வலிக்கும்? அதுதான் அவளிடம் இல்லையே! அவளிடம் இருந்ததை விதி சதியாய் உருவெடுத்து வந்து சுட்டுப் பொசுக்கி விட்டதே!

ரொம்ப நேரம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தவள் அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள் அலுவலகம் நுழைந்ததுமேஉடன் வேலை பார்க்கும் ஹேமா அவளிடம், கவி, உன்னைத்தான் மேனஜர் தனது பர்ஸனல் செகரட்டரியாக மாற்றியிருக்கிறார். வாழ்த்துக்கள்! என்றாள்.

கவிதாவிற்கு புரிந்து விட்டது. அவள் பார்த்து வந்தது கட்டுமானப் பணிகளுக்காக பொருட்கள் வாங்கும் பர்ச்சேஸ் செக்ஷன்தான். ஹேமாதான் இதுநாள் வரை வரும் மேனஜர்களுக்கு பர்ஸனல் செகரட்டரியாக இருந்திருக்கிறாள். அவளை தனது பர்ச்சேஸ் செக்ஷனில் போட்டு விட்டு தன்னை வேண்டுமென்றே செகரட்டரியாக்கி இருக்கிறான்.

பர்ஸனல் செகரட்டரி என்றால் அவன் முன்னிலையில்வேலை பார்த்துக் கொண்டு சதா அவன் பால்

நவம்பர் 1 அன்று கடைகளில்
அடுத்த... வெண்ணிலா நாவல்
அகிலா கோவிந்த் எழுதும்
"ஹாய் செல்லம்!..."
பரவசமான நாவல்!
படிக்க தவறாதீர்கள்!!

பிடித்துக் கொண்டு அலைய வேண்டும். அதாவது அவளை அவனது நேரடி கண்காணிப்பில் எப்போதும் அவன் பார்த்துக் கொண்டிருக்கும்படி இருப்பதற்கு இந்த ஏற்பாடு.

வேறு வழியில்லை. சகித்துதான் ஆக வேண்டும்... என்ற நினைப்போடு பைல்களை தூக்கிக் கொண்டு அவன் அறைக்குப் போனாள். இருக்கையில் அதே கம்பீரத்துடன் நெற்றியைச் சுருக்கியபடி ஏதோ குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தான்.

அவன் போட்டிருந்த சந்தநிற புல் சபாரி சூட் அவனது கம்பீரத்தை இன்றும் கூட்டியிருந்தது.அந்த நெடுநெடு உயரமும், உடற்பயிற்சிகளில் இறுகி வலிமையாயிருந்த உடல் வாகும், ஆண்மையை பறைசாற்றும் முறுக்கு மீசையும், சடார் சடார் என பலவித பாவனைகளைக் காட்டி சூழலும் கண்களும்... வசீகரப் புன்னகையை சிந்தும் அந்த இறுக்கமான உதடுகளும்... இவன் இரண்டு வருடத்தில் மாறவே இல்லை. அப்படியேதான் இருக்கிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியது.

கூடவே தனக்கு கிடைக்காத எட்டாக்கனியாக அவன் ஆகிவிட்டான் என்பது உரைத்து பெரும் ஏமாற்றத்தையும்அவளுள் எழுப்பியது.

அப்படி மட்டும் நடந்திருந்து இவனோடு ஒரு வாழ்க்கை இணைந்து அமைந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? என நடக்காத ஒன்றை நினைத்து இனிமையாய் அசைபோட முயன்ற மனதை அவசரமாய் கட்டுப்படுத்தி அடக்கினாள்.

எவ்வித சலனமில்லாமல் நிமிர்ந்து தான் வந்ததை அவனுக்கு உணர்த்த லேசான கனைப்பு ஒன்று செய்தாள்.

கொண்டிருந்த குறிப்புகளில் இருந்து நிமிராமலே,அவள் வந்ததை முன்பே உணர்ந்தவன் போல், 'இன்றுமுதல் நீதான் என் பர்ஸனல் செகரட்டரி....' என்றான்.

'தெரியும். ஹேமா சொன்னாள்....' என்றாள் அவளும் ஒருவித இறுக்கத்தோடு.

அவன் அதற்குள் எழுதி முடித்தது போல் பேனாவை மூடிவிட்டு அவள் பக்கம் வந்தான்.

'ஹேமா அது மட்டும் சொன்னாளா...? என்னிடம் நீ படாத பாடு பட இருக்கிறாயே... 'அதையும்சேர்துச் சொன்னாளா?'



என்றான் குத்தலாய்.

அவளுள் எரிச்சல் கிளம்பியது.

'எதுவானாலும் எதிர்கொள்வேன்...' என்றாள் உறுதியுடன்.

'ஆமாம்... ஆமாம்... எதிர்கொள்வாய்! இதுவரை எத்தனை ஆண்களை எதிர்கொண்டிருப்பாய்... உன் மயக்கி வீழ்த்தும் லிஸ்ட்டில் எனக்கு எந்த இடமோ?' என்றான் இடக்காய்.

'ச்சீ...அப்படிப் பேசாதீர்கள். நான் ஒன்று அப்படிப்பட்ட பெண் இல்லை...!' என்றாள் ஆத்திரமாய்.

'பின் எப்படிப் பட்ட பெண்ணாம்? என்றபடி அவள் பக்கம் வந்து மேலிருந்து கீழ்வரை கண்களை ஓட விட்டவன், இந்த அபரித அழகை அபார கவர்ச்சியை யார் யாரோ அனுபவித்திருக்கிறார்கள். நான் அனுபவிக்கக் கூடாதா...?' என்றவன் அவள் முக மாறுதலை உற்றுக் கவனித்தவாறு, 'என்ன இருந்தாலும் நான் உன் பழைய காதலனாயிற்றே...?எனக்கு சலுகை உண்டுதானே...?' எனப் பேசியவன் சட்டென அவளை தன் பக்கம் இழுத்துப் பிடித்து அவள் எதிர்பாரா நேரத்தில் மென்னி உலுங்கும் அளவுக்கு இறுக அணைத்தான்.

அவள் திடுக்கிட்டவள், 'விடுங்கள்... விடுங்கள்... திவாகரன்...' என்றாள் அலற நினைத்து முடியாமல் போய் மெல்லிய குரலில்.

அவனோ, எதற்கு விட.... வேண்டும்?' என்ற கேட்டபடி ஒரு கரத்தால் அவளது தோளைப் பிடித்து வருடினான்.

இவன் மணமானவன், மஞ்சரிக்கு கணவன்... ஒரு குழந்தைக்கு தகப்பன் என்பதெல்லாம் அவள் நினைவில் சுரீரென உரைக்க கொதிப்பானவள், 'நீங்கள் ஒரு குடும்பத் தலைவர்.... நான் வேலை பார்க்கும் ஒரு செகரட்டரி. இது தவறு என்னை விடுங்கள்!' என்றாள் ஆத்திரமாக.

அவனோ அதில் மேலும் கோபமுற்றவன் போல், 'உன்னை அவ்வளவு லேசில் இன்று விடப்போவதில்லை...' எனக் கூறி திகைக்க வைத்து விட்டு குனிந்து அவளுடைய தோள் வளைவில் உரிமையாய் முகம் புதைத்தான்.

அவளுக்கு என்னவோ போல் ஆயிற்று.அவளும் ஒரு பெண்தானே? எவ்வளவு நேரம் உணர்ச்சிகளற்று பேசாமல் இருக்க

முடியும்? அதைவிட அவன் கைப்பட்டதும் தன்னை மீறி தன் உடம்பு நெகிழத் தொடங்கியது அவளுக்கு திகைப்பூட்டியது.

ஆனாலும் எல்லாவற்றுக்கும் மேல் இவன் மஞ்சரியின் கணவனாகிவிட்டவன் என்பது புத்தியல் உரைத்து ஆத்திரத்தை கிளப்பியத.

தன் முழுபலத்தையும் திரட்டி அவனிடமிருந்து விடுபட திமிறினாள். திமிறியவளை மேலும் வாக்காய்.. பிடித்துக்கொண்டு அவள் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டுபோனான் அவன்.

'மறந்துவிட்டாயா...? இது போன்ற அணைப்பை ஒரு நாள் பூங்கா ஒன்றில் ஆரம்பித்து தொடங்கி வைத்தவன் நான்தானே? அதற்குப் பின் எத்தனை எத்தனை ஆண்களை இப்படி அணைத்திருப்பாய்? எப்படிப்பட்ட சுகங்களை அனுபவித்திருப்பாய்? கொஞ்சம் சொல்லேன்...!' என்றான்.

'ச்சீ...!' என்றாள் அவள் அருவெறுப்புடன்.

அவன் தொடர்ந்தான். 'நான் ஒரு மடையன். உன்னைத் தொட்டு அணைத்த அன்றே வலுக்கட்டாயமாய் படுக்கைக்கும் இழுத்துச் சென்றிக்கவேண்டும. அப்படிச் செய்திருந்தால் வேறு ஆண்களைக் கூட நீ நாடாமல் என்காலையே சுற்றி வந்திருப்பாய்... என்ன... அன்று நியாயதர்மம் பார்த்து விட்டேன். ஆனால்... பார்.... ஆனால்.... இம்முறை அந்த நியாயம் எல்லாம் எதுவும் பார்க்க மாட்டேன்... நீயே... பார்.... இந்த இரண்டு வருடத்தில் உன்னை எத்தனை முறைகடித்துக் குதறுகிறேன். என்று...! உறுமாத குறையாய் சொல்லியவன் மறுபடியும் ஒரு வேகமான அணைப்பு செய்துவிட்டு உடனே விலகினான். நீ போகலாம்!' என்றான் ரூமின் கதவை காட்டியபடி.




அன்று அப்படி தன் அறைக்கு கூட்டி... மிரட்டியதோடு திவாகரன் விட்டுவிட்டான்.

அதன்பின் ஓரிருமுறை அவன் பேக்ஸ் பிரதிகளை கொடுக்கச் சென்ற போதும் அவளை நிமிர்ந்து பார்க்காமல் வாங்கிக்



கொண்டான். இண்டர்காமில் முக்கியமான ஒரு கடிதத்தை உடனே டெஸ்பாட்ச் செக்ஷனுக்கு அனுப்ப சுரத்தில்லாத குரலில் கட்டளையிட்டான்.

சக பணியாளர்கள் முன் அவளைப் பார்த்து சிரிக்கவும் செய்தான். கொஞ்ச நேரத்துக்கு முன் தன்னிடம் அந்த வரத்து வந்து அத்து மீறியவன் இவன்தான் என்று சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள்.

அப்படி ஒரு நடிப்பு!

அன்றிரவும் விடுதி வந்தவள் இரவு உணவை கூட உண்ண மனமில்லாமல் படுக்கையில் தலையில் கை வைத்தபடி உட்கார்ந்தேகிடந்தாள். பின் நேரமாகுவதை உணர்ந்து தூங்க முயற்சித்தாள்.

என்னதான் மறக்க நினைத்தாலும் காலையில் நடந்த சம்பவமேதிரும்பத்திரும்ப நினைவில் ஓடியது.

அதுவும் திவாகரன் சட்டென அவளை இறுக அணைத்து தொட்ட இடமெல்லாம் தீயாய் தகித்தது.

எனன் தைரியம் அவனுக்கு! அவளது கோபத்தை திமிறலை கொஞ்சமு; பொருட்படுத்தாமல் உரிமையுள்ளவன் போல் வேக வேகமாய் அணைத்தானே?

அதுமட்டுமா? இது போல் எத்தனை ஆண்களை அணைத்து தொட்டிருப்பாய் எனக் கூசாமல் கேட்கிறானே?

அவள் என்ன அப்படிப்பட்டவளா?

நம்பி விட்டானே?

கண்ணால் பார்ப்பது எல்லாம் பொய். தீர விசாரிப்பதே மெய்... என்ற பழமொழி வார்த்தைகளை உணராமலே போய் விட்டானே!

அவளை அவ்வளவு கேவலமாய் நடத்தை கெட்டவள் போல கடைசியில் நினைத்து விட்டானே? அவன்மட்டும் அப்படி நினைக்காமல் அன்று அவளை நம்பியிருந்தால் இப்படியெல்லாமநடந்திருக்குமா?

ஒ;வொன்றாக மனதில் நினைத்து நினைத்து கண்ணீர் வடித்தாள் அவள்.

கூடவே அவன் சொன்ன இன்னொரு விஷயமும் அவளை உறுத்தியது.

இனி நியாய தர்மம் எல்லாம் அவன் பார்க்கப் போவதில்லையாம். கடும்புலியாய் மாறி அவளை கடித்துக் குதறிவிடுவானாம்....!

என்னவெல்லாம் சொல்கிறான்?

அப்படியெல்லாம் பேசக்கூடியவன் திவாகரன் அல்லவே! அவளுக்குப் படிப்படியாக வாழக் கற்றுக்கொடுத்து சொந்தக்காலில் நிற்க உதவி செய்தவனே அவன்தானே?

பின் எதற்கு அப்படிச் சொன்னான்?

ஒருவேளை நிஜமாகவே பழிக்குப் பழி... தண்டனை என்றெல்லாம் அவளுக்கு கொடுத்து தனது ஆத்திரத்தை எல்லாம் போக்கப் பார்க்கிறானா?

அப்படிச் செய்தால் அது கட்டிய மனைவிக்குச் செய்யும் துரோகம் என்று கூடவா இந்த திவாகரனுக்குத் தெரியாது?

மீண்டும் அவன் தன்னிடம் கடுமையாய் நடப்பதை நினைத்து கண்ணீர் பொங்கியது. மறுபடியும் தலையணையில் புதைந்து அழுது தீர்த்தாள்.

அழுவது அவளுக்கும் அந்த தலையணைக்கும் ஒன்றும் புதிது இல்லைதான். இந்த இரண்டு வருடங்களில் எத்தனை இரவுகளில் தூக்கம் வராமல் பழைய நினைப்புகளுடன் எழுந்து உட்கார்ந்து பிழியப் பிழிய அழுதிருக்கிறாள் என்பதை ஈரமாய் கிடக்கும் அந்த தலையணையே சொல்லும்.

என்ன.... முன்பு அவன் எங்கோ இருக்கிறான்...அவனைப் பார்க்க முடியவில்லையே... என்ற நினைப்பு வாட்டி வதைத்தது.

இப்போதோ... மஞ்சரியின் கணவனாய் ஆகிவிட்ட அவனை தினம் தினம் பார்த்துதொலைக்க வேண்டி இருக்கிறதே. என்ற அவஸ்தை அவளை வாட்டியத.

அன்றும் சரியான தூக்கமில்லாமல் மறுநாள் சிவந்த கண்களுடனே வேலைக்குச் சென்றாள்.

இரவு ஷிப்ட்டா? நேற்று கம்பெனி கொடுத்தது யார்? என்றான் அவளைப் பார்த்ததும் திவாகரன் இன்னொரு தொனியில் இரட்டை அர்த்தத்தில்.

கவிதா பதில் சொல்லாமல் முறைக்கவும், 'ஒன்றுமில்லை, நேற்று நானும் ப்ரீயாகத்தான் இருந்தேன். ஒரு ஃபோன் போட்டால் ஓடி வந்திருப்பேன்... என கண்ணசைப்பு செய்து அவளை மேலும்



எரிச்சல் படுத்தினான்.

அவன் சொன்னதை தன் வீட்டுக்கு வந்து அசை போட்டவளுக்கு கூடவே ஒரு சந்தேகம் உதித்தது. நேற்றிரவு ப்ரீயாக இருந்தேன் என்கிறான். அப்படியானால் மஞ்சரி, குழந்தை எல்லாம் எங்கே சென்று விட்டார்கள்? என்ற யோசனை குடைந்தது.

அதையும் அலுவலக பியூனிடம் அவள் சாதூர்யமாக விசாரித்தபோது தகவல் கிடைத்தது.

திவாகரன் தனது குடும்பத்தை இன்னும் கூட்டி வரவில்லையாம். தனியாக வந்துதான் வீடு எடுத்து தங்கியிருக்கிறானாம். இன்னும் மூன்று மாதங்கள் கழித்துதான் குடும்பத்தை இங்கு அழைத்து வர திட்டமிட்டிருக்கிறானாம்.

செய்தியைக்கேட்டவளுக்கு, இதுதான் விஷயமா? இதனால்தான் தைரியமாய் அவளை விரட்டி மிரட்டி இப்படி கொட்டமடிக்கிறானா?என்று நினைத்தாள்.

அவள் நினைத்ததுபோலவே அன்றும், நமது கன்ஸட்ரக்ஷன் சைட்டுக்கு சென்று பார்க்க வேண்டும். கிளம்பு! என கம்பெனி காரில் ஏற்றி கூட்டிப் போனான்.

டிரைவரை வேண்டாம் என சொல்லிவிட்டு அவனே டிரைவ் செய்தான். பொதுவாக அவர்களது கட்டுமானக் கம்பெனியில் மேனஜரின் பர்ஸனல் செகரட்டரியாக இருப்பவர் மேனஜருடனே அடிக்கடி வேலை நடக்கும் கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டுக்கு செல்ல வேண்டியிருக்கும்.அவர் சொல்லும் மாற்றங்களை குறிப்புகளை எல்லாம் உடனுக்குடன் பதிவு செய்து கட்டுமான என்ஜினியருக்கு அனுப்ப வேண்டும்.

முன்பு ஹேமா இதைத்தான் செய்து வந்தாள் என்பது கவிதாவிற்குத் தெரியும். அதனாலே திவாகரனுடன் சைட்டுக்கு செல்ல எந்தவித மறுப்பும் காட்டாது ஏறிக்கொண்டாள்.

அரை மணிநேர பயணத்தில் கார் ஓட்டுவதிலேயே கவனமாயிருந்தான் அவன். அவள்தான் ஓரிருமுறை திரும்பி அவனை உறுத்துப் பார்த்தாள்.

அந்த சலனமில்லா முகமும் உதடுகளின் அழுத்தமான இறுக்கமும் அவளை என்னவோ செய்ய திரும்பிக் கொண்டாள்.

இடையிடையே திவாகரன் அலுவலக விஷயமாகவே

அவளிடம் பேசினான். பைல்களில் உள்ள குறிப்புகளைப் பார்த்து வாசிக்கச் சொன்னான். வேலை நடக்கும் சைட்டிலும் அதேபோல் சீரியஸான முகத்துடனே வேலையில் கவனம் செலுத்திப் பேசினான்.

கட்டுமனான பணிகளுக்கு செய்ய வேண்டிய மாற்றங்களைக் கூறி அவளுக்கு குறிப்புகள் எல்லாம் கொடுத்தான்.

எல்லா வேலைகளையும் பார்த்து தேவையான விளக்கங்களை கூறி அந்த கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டில் இருந்து இரண்ட மணி நேரத்தில் கிளம்பினார்கள்.

நேரம் மதியத்தை நெருங்கிவிட்டதால் காரை நேராய் ஒட்டல் ஒன்றின் முன் நிறுத்தினான் திவாகரன்.

இருவரும் இறங்கினார்கள்.

அப்போதுதான் திவாகரன் அந்த காரியத்தைச் செய்தான்.

டிரைவிங் ஸீட்டிலிருந்துஇறங்கி அவள்பக்கம் வந்தவன் டக்கென தனது கரங்களால் அவளது இடையோடு கை கோர்த்து ஒருசேர அவளை அணைத்தபடி நடக்க ஆரம்பித்தான்.

தூக்கி வாரிப் போட்டது கவிதாவிற்கு!

திகைத்தவளிடம், 'என்ன பார்க்கிறாய்? அன்று என் கண்முன்னால்... அவன்... அந்த பணக்காரன்.... அவன் பெயர் என்ன? கிஷோரோ...குமாரா?- அவனுடன் இப்படித்தானே தோள் உரச நடந்து சென்றாய்? அந்த சுகம் எனக்குக் கிடைக்கக் கூடாதா?' என சர்வசாதாரணமாய் கூறியபடி அவளை இழுக்காத குறையாய் உள்ளே அழைத்துச் சென்றான்.

வாயடைத்துப் போனாள் அவள்!

உள்ளே சென்றதும்தான் அவன் விடுவிக்க எதிர் இருக்கையொன்றில் அவசரமாய் உட்கார்ந்து நிம்மதியானாள்.

ஒன்றுமேநடவாததுபோல் வந்த பேரரிடம் உணவுக்கு ஆர்டர் செய்துவிட்டு மறுபடியும் அவளை உற்றுப் பார்த்தான். 'பழயது எல்லாம் ஞாபகமிருக்கிறதா? இல்லை மறந்து விட்டாயா?' என்றான்.

அவன் எதைக் கேட்க வருகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அதனாலே, 'எப்போதோ அவைகளை மறந்துவிட்டேன்!' என்றாள்.



'ம்ம்... ஞாபகம் வைத்துக் கொள்ள... ஒன்றா.... இரண்டா... எத்தனைபேர்...?' என ஆரம்பித்தவன்அவள் முறைப்பைக் கண்டு அப்படியே நிறுத்தினான்.

ஆனாலும் அவளைச் சீண்டும் விதமாய், 'இப்போது அவைகளைப் பற்றி பேசுவோமா?' என்றான்.

அவன் வேண்டுமென்றே தன்னை எரிச்சல் படுத்த நினைக்கிறான் என்பதை உணர்த்வள் பதிலுக்கு அவனை எரிச்சலாக்க தீர்மானித்தாள்.

அதனாலே, 'பேசுவோமே...! உங்கள் மனைவி மஞ்சரி பற்றி பேசுவோமே? அவர்களை நான் பார்த்து நாளாயிற்றே?' என்றாள்.

ஆனால் மஞ்சரியின் பெயரை உச்சரித்ததுமேதிவாகரன் முகம் இறுகி கறுத்தது.

அதைக் கண்டு உற்சாகமானவளாய், 'சொல்லுங்கள் மஞ்சரியும் நீங்களும் பொருத்தமான ஜோடியாய்...'

அவள் மேலும் சொல்வதற்குள் எள்ளும் கொள்ளும் வெடித்தவனாய் ஸீட்டை விட்டு வேகமாய் எழுந்து விட்டான் திவாகரன்.

'உன் வாயை மூடுகிறாயா...? இல்லை இப்படியே அறைந்து விடுவேன்...!' என்றபடி ஆக்ரோஷமாய் கைகளை ஓங்கிக் காட்டவும் செய்தான்.

அரண்டு போனாள் அவள்!



## 19

பொதுஇடம் என்று கூட பார்க்காமல் அவளை அடிக்க கையை ஓங்கிய திவாகரன் ஒரிரு வினாடிகளில் சுதாரித்துக் கொண்டான். தன் சூழ்நிலையை உணர்ந்து சட்டென முகம் மாறி அமர்ந்தான். ஒன்றும் பேசாமல் பீங்கன் தட்டுகளில் பேரர் வைத்து விட்டுப் போன உணவை சாப்பிட ஆரம்பித்தான்.

நிஜமாகவே அரண்டு போனவள் கவிதாதான்!

அவள் அப்படி என்ன தப்பிதமாய் சொல்லிவிட்டாள்?

இல்லையே... மஞ்சரியும் அவனும் பொருத்தமான ஜோடியாய் என்றுதானே சொல்ல வந்தாள்?

இதில் தவறு என்ன இருக்கிறது? எதற்காக இவன் இப்படி ஆவேசப்பட வேண்டும்? அதுவும் கையை ஓங்கி ஆத்திரப்படும் அளவுக்கு?

நினைத்தவள் புரியாமல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். இந்தப் பூனையும் பால் குடிக்குமா...? என்பது போல் சாதுவாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் அவன்.

அன்று அதன்பின் இருவரும் வேறு எதுவும் பேசவில்லை. இயந்திரம் போல் உணவருந்தி வெளிவந்து அலுவலகம் வந்தனர்.

மாலை வேலை முடிந்து மகளிர் விடுதி வந்து சேர்ந்தவள் தனது ரூமினுள் நுழைந்ததும் ஹாண்ட் பேக்கை போட்டுவிட்டு தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்து விட்டாள். திவாகரன் அப்படி ஆத்திரமும்ஆவேசமும் லேசில் கொள்கிற ஆள் இல்லை.

அதுவும் அவள் சொன்ன சாதாரண ஒரு வார்த்தைகளுக்கு இந்த அளவு கோபப்படுகிறான் என்றால்...?

அதன் பின்னணியில் ஏதோ அர்த்தம் இருக்கிறது. ஒரு காரணமுமில்லாமல் அவள் சொன்னதற்கு ஆவேசப்பட திவாகரன் ஒன்றும் முட்டாள் இல்லை..!

அதனால்.... அவள் சொன்ன வார்த்தைகளில்.... மறைமுகமாய் ஏதோ ஒன்று அவனை நெருடி இருக்கிறது. மஞ்சரியும் அவனும் சரியான ஜோடியாய் கணவன் மனைவியாய் குடும்பம் நடத்தும் வாழ்க்கையில்.... அப்படி புரியாத என்ன ஒரு மர்மம் இருக்ககூடும்?

அதைத் தான் கண்டுபிடித்துவிடக்கூடாது என்று திவாகரன் ஆவேசப்பட்டிருக்க வேண்டும்!

அப்படியானால் அந்தமர்மம்தான் என்ன? அந்த ரகசியம் தான் என்னவாக இருக்கக் கூடும்?

விடை தெரியாமல் நிலை கொள்ளாமல் சிந்தித்தாள் கவிதா.

இறுதியில் ஒரு முடிவு கொண்டவளாய் அலுவலகத்திற்கு இரண்டு நாள் விடுப்பும் சொன்னாள் அவள்.

✣✣✣✣✣



மூன்று நாள் கழித்து அலுவலகம் சென்றபோது திவாகரன் அவளை புதிராய் பார்த்தான்.

'மூன்று நாள் லீவு, காரணம் என்னவோ?' என்றான் தெரிந்து கொள்ளும் ஆவலில்.

'பர்ஸனல்...' என ஒரே வார்த்தையில் முடித்தாள் அவள்.

அவன் விடவில்லை.

'எனக்குத் தெரியாத பர்ஸனல் உன் வாழ்க்கையில் வேறு இருக்கிறதா?' என்றான்.

'ஏன் இருக்கக்கூடாதா?' என்றாள் அவள் பதிலுக்கு

'ம்ம்... இருக்கட்டும்....' என அவளை சலிப்புப் பார்வை பார்த்தவன், 'எங்கோ ஊருக்குச் சென்று இருக்கிறாய், தனியாக நீ மட்டும் சென்றாயா அல்லது யாருக்காவது கம்பெனி கொடுக்கவா?' என அவள் முறைப்பு பார்வையை சிறிதும் பொருட்படுத்தாமல் கேட்க நினைத்ததை முழுவதுமாகவே கேட்டான்.

அப்போதும் அவள் கோபத்தை அடக்கிக்கொண்டு, 'எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். கவலையில்லை...' என்றாள் தான் கொண்டு வந்த ஃபைல்களை அவளிடம் காட்டி கையெழுத்து வாங்கவதிலேயே தனது கவனத்தை பதித்தவாறு முழுவதையும் பதித்தவாறு.

நீ எதற்குத்தான் கவலைப்பட்டாய்? 'என இடக்காய் கேட்டு விட்டு அவனும் விட்டுவிட்டான்.

அன்றுமதியமும் கன்ஸ்ட்ரக்ஷன் சைட்டுக்குஅவனுடன் செல்ல வேண்டியிருந்தது. பெரிய மல்டிப்ளஸ் காம்ப்ளக்ஸ் ஒன்றிற்கான கட்டுமான வேலைகள் துரிதமாய் நடந்து கொண்டிருந்தன. எல்லாவற்றையும் பார்வையிட்டு வேண்டிய ஆலோசனைகளை பணியாளர்களுக்கு கொடுத்து விட்டு கிளம்பினார்கள்.

நேரம் மாலை ஆறு மணியைத் தொட்டிருக்க காரில் அவளை ஏற்றிக்கொண்டு கிளம்பியவன், நேரமாகி விட்டது. நீ தங்கியிருக்கும் மகளிர் விடுதி எங்கென்று சொல் அங்கே உன்னை விட்டு விட்டுச் செல்கிறேன் என்றான்.

வேண்டாம் என மறுக்க நினைத்தவள் அவன் குரலில் தொனித்த உறுதியைக் கண்டு தலையாட்டியபடி வழி சொன்னாள்.

மேலும் அரைநேர பயணம் முடிந்ததும் அவள் தங்கியிருக்கும் விடுதி முன் காரை நிறுத்தினான்.

கதவைத் திறந்து படக்கென இறங்கிக்கொண்டாள்.

'களைப்பாக வந்திருக்கும் இந்த மேனஜருக்கு ரூமிற்கு கூட்டிப் போய் ஒரு கப் காபி போட்டு கொடுத்தால் நீ குறைந்தா போய் விடுவாய்?'

சீண்டலும் கேலியுமான அவனது குரல் திரும்பப் போனவளை நிறுத்தியது. குனிந்து அவனை உற்றுப் பார்த்தாள். அவன் முகத்தில் களைப்போ அலுப்போ இல்லை. அவளது ரூமைபார்க்க விரும்புகிறான். அதற்கு இப்படி ஒரு சாக்கு.

அவ்ன மேலும், 'ப்ளீஸ்...' என கெஞ்சலாய் கேட்கவும் வரும்படி சொல்லிவிட்டு மன்னால் நடந்தாள்.

விடுதி காப்பாளரிடம் தனது அலுவலக அதிகாரி என்ற விளக்கத்தை கொடுத்து ரூமிற்கு அழைத்துச் சென்றாள்.

அவளது சிறிய ரூமேஎன்றாலும் அதிலும் சிறிது சிறிதாய் அறைகளைக் கொண்டது. முன்னறையில் உட்காரவைத்து விட்டு பின்னறைக்குச் சென்றாள். அங்குதான் அவசரத்திற்கு உபயோகப்படுத்த காஸ: அடுப்பும் ஒருசில பாத்திரங்களும் உண்டு.

அவசரமாய் மில்க் மெயிடை எடுத்து பால் பவுடரைத் தட்டி காபி போடுவதில் மும்மரமானாள். அப்போது சட்டென ஒரு கரம் தனது தோளை அழுந்தப் பற்றுவது கண்டு அதிர்ச்சியாய்த் திரும்பினாள்.

பின்னால் திவாகரன் நின்று கொண்டிருந்தான்.

எப்போது இங்கு வந்தான். அவன் வரும் ஓசை கூட கேட்கவில்லையே?

அதிர்ந்தவள் அதைவிட அவன் கண்களில் திடீரென தெரிந்த அந்த வினோத குரூரத்தையும் புதுவகையான வெறியையும் கண்டு மிரட்சியே அடைந்தாள்.

'சரியான முட்டாள் நீ! வெறும் காபியை குடிக்க வந்திருக்கிறேன் என்று நினைத்து விட்டாயா?'

உறுமலாய் கர்ஜித்தவனின் குரலில் இருந்த உறுதி அவளுக்கு



பயம் கொடுத்தது.

'பின் எதற்காம்?'

கையில் எடுத்த பாத்திரத்தை கீழேவைத்துவிட்டுத் திரும்பினாள்.

'பத்தினி வேடமெல்லாம் பிரமாதம்தான். வேஷம் போதும். கலைத்துவிடு. இப்போது வா என்னோடு..! என்றபடி ஒரே தாவலில் அவளை இழுத்துப் பிடித்து அணைத்தவன் எதிர்அறையில் தெரிந்த சின்ன கட்டிலைகாட்டினான்.

'உன்னிடம் எத்தனையோ ஆண்கள் அனுபவித்த சுகத்தை எனக்கும் இந்த பழைய காதலனுக்கும் கொஞ்சம்கொடு...!'

மிரட்டலாய் சொல்லியபடி திமிறியவளை அடக்கி தரதரவென இழுத்துபோகப் போனான்.... அப்படி இழுத்துப்போகப் போனவன் மற்றொரு எதிர் அறையிலிருந்து அந்தஇன்னொரு குரல் திடீரென ஒலித்தது கேட்டு அதிர்ச்சியாகி அப்படியே நின்றான்.

'அபாண்டம்... மாப்பிள்ளை...! அப்படியெல்லாம் அவ்ளைச் சொல்லாதிங்க. அவா நல்லவ. 'பாவி.... நான்தான்...! நான்தான் பாவி...!' உரத்த குரலில் சொல்லி அரற்றியபடி எதிர் ரூமிலிருந்து வெளிப்பட்டாள் அவள்.

'அத்தை நீங்களா?'

திவாகரன் கவிதாவை பிடித்த இரும்புப்பிடியை விட்டுவிட்டு மேலும் அதிர ஆரம்பித்தான்.

## 20

ரூமிலிருந்து வெளிப்பட்டது அத்தை கனகம். 'அத்தை நீங்க எப்படி இங்க? என திகைத்த திவாகரனுக்கு அவள் விளக்கினாள்.

'இரண்டு நாளுக்கு முன் என்னைத் தேடி கவிதாவந்து விட்டாள். அவளிடம் நடந்த உண்மைகளை எல்லாம் சொன்னேன். மன்னிப்புக்கேட்டேன். தனியாக இருந்து ஏன் வாடுகிறீர்கள்? என் கூட வந்து இருங்கள்! என அழைத்து வந்துவிட்டாள். நேற்று முதல் இங்குதான் இருக்கிறேன். ஆனால் கவிதா என்னிடம் நீங்கள்

இங்குதான் அவன் அலுவலகத்தில்தான் அதிகாரியாக இருப்பதைப் பற்றிச் சொல்லவே இல்லையே...!' என்றாள் அப்பாவியாய்.

திவாகரனின் புருவம் பொறிதட்டிய சிந்தனையோடு உயர்ந்தது.

நீங்கள் கவிதாவிடம் மன்னிப்புக் கேட்டீர்களா... எதற்கு? என்றான்

கனகம் மேலும் தளாமாட்டாமல் பெருங்குரலில் அரற்றினாள்.

'ஐயோ... மாப்பிள்ளை! அவளிடம் மட்டுமல்ல. உங்களிடமும் நான் மன்னிப்பு கேட்கவேண்டும். உங்களுக்கும் நான் துரோகம் செய்துவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்...!' கைகூப்பி பரிதாபமாய் கெஞ்சினாள் கனகம்.

'முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள்....' என்றான் திவாகரன்.

கனகம் பயக்குரலோடு விவரிக்க ஆரம்பித்தாள். 'மாப்பிள்ளை, நீங்களும் கவிதாவும் ஒருவரையொருவர் மனதார விரும்பியது அதை ஒரு நாள் மஞ்சரி பார்த்து வந்து ஆத்திரமாய் அதை என்னிடம் சொன்னது... அன்றுதான்.... இந்த மிகப் பெரிய சதியை நான் திட்டினேன். கவிதாவை பலவாறாக ஏசி உன்னை இவ்வளவு நாள் சோறுபோட்டு வளர்த்ததற்கு நீ காட்டும் நன்றிக்கடன் இதுதானா? என்றெல்லாம் வசவு பாடி.... உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணாதே.... மஞ்சரி திவாகரனை விரும்புகிறாள். நீ ஒதுங்கி விடு. என்ன செய்வாயோ தெரியாது திவாகரன் உன்னை அடியோடு வெறுக்க வேடும். அதுபோல் நீ நடந்து கொள்ள வேண்டும். இது இவ்வளவு நாள் அனாதையாகிவிட்ட உன்னை நான் சோறு போட்டு வளர்த்தமைக்கான கைமாறு... நீ செய்து தான் ஆகவேண்டும்.... என கட்டளையிட்டேன்.'

'அன்று பலியாடு போல் வேறு வழியில்லாது தலையாட்டி சம்மதித்தாள் கவிதா. அதற்காகத்தான் வேலைக்குச் சேர்ந்துதான் பணத்தையும் பகட்டையும் கண்டு மயங்குவது போல் உங்களிடம் காட்டினாள். அந்த மஞ்சரி நகைகளையும் அவள் திருடி வந்தது போல் தனக்கு பண ஆசை வந்துவிட்டது போல் உங்களிடம் காட்டி



நடிக்கவே செய்தாள்.'

'அதே போல்தான் தன் அலுவலகத்தில் வேலை பார்க்கும் தோழி ஒருவள் மூலம் அவளது பணக்கார அண்ணனை காருடன் அலுவலகத்திற்கு வரச்செய்து... உங்கள் முன்னிலையில் அவனுடன் ஊர் சுற்றுவது போல் எல்லாம் நடித்து உங்களை வெறுப்பேற்றினாள். உங்களை வேண்டுமென்றே எடுத்தெறிந்து பேசி அவமானப்படுத்தினாள். எல்லாம் எனக்காக... எனக்காகத்தான் மாப்பிள்ளை...!

நான் சொன்ன அந்த வார்த்தை 'உனக்கு இவ்வளவு நாள் சோறு போட்டு வளர்த்தேனே....' என்ற கூற்றுக்காக நான் சொன்னதையெல்லாம் கேட்டாள். தன் செஞ்சோற்றுக் கடனுக்கான நன்றியைத் தீர்த்தாள்.

உங்களை அவமானப்படுத்தி, தனக்கு பண ஆசையும், ஆண் நண்பர்களும் வந்துவிட்டது போல் வெறுப்பேற்றி கொண்டிருந்த காதலை உடைத்து நான் சொன்னபடியெல்லாம் செய்தாள்.

அப்படியும் நான் விடாமல் அவள் வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் இங்கிருந்தால் மஞ்சரிக்கு இடைஞ்சலாகத்தான் இருப்பாள் என்று சொல்ல... வீட்டை விட்டு கிளம்பினாள். மகளிர் விடுதி ஒன்றில் ரூம் எடுத்து தங்கினாள்.

பின் என்ன நினைத்தாளோ அதையும் காலிசெய்து விட்டு வேலையில் மாற்றல் வாங்கி ஊரை விட்டே ஓடினாள். அவள் இங்கு வந்ததை எனக்கும் அவள் தெரிவிக்கவில்லை. நானும் விட்டது தொந்தரவு என அவளைப் பற்றி கவலைப்படாமல் இருந்துவிட்டேன். ஆனால்.... ஆனால்.... இப்போது.... .... சொன்ன கனகத்தின் குரல் தழுதழுத்தது.

'யாருக்காக கவிதாவை இப்படியெல்லாம் நடிக்கச் சொன்னேனோ.. அவள் என் அருமைமகள் மஞ்சரியே அன்று நான் செய்த பாவத்தின் பலனாய் இன்று அடியோடு மாறிவிட்டாள். நான் கவிதாவை பணத்திற்கும் பகட்டும் ஆசைப்படுவதாய் நடிக்கத்தான் சொன்னேன். ஆனால் நிஜத்தில் மஞ்சரிக்குத்தான் உள்ளுக்குள் அந்த ஆடம்பர குணம் இருந்திருக்கிறது.

அதனாலே முதலில் மாப்பிள்ளையான உங்களை விரும்பியவள் பின் எதோ ஒரு பார்ட்டியில் பார்த்த மதன் என்ற

பணக்காரனுக்கா காதலியாகிவிட்டாள். அந்த மதன்ஏற்கனவே மணமானவன். அதுகூட தெரியாமல் இவள் வீட்டிலிருந்த அவளது நகைகளை எல்லாம் தூக்கிக் கொண்டு அவனுடன் ஓடிவிட்டாள். இன்றுவரை என்ன ஆனாளோ யாருடன் இருக்கிறாளோ.., என்றே தெரியவில்லை...!

அவள் ஓடிப்போன கவலையிலேயே உன் மாமாவும் படுக்கையில் விழுந்து மூன்று மாதத்தில் இறந்து போனார். நான் தனிமரமாகிவிட்டேன். திக்கற்றுப் போய் திகைத்து நின்ற என்னை கவிதாதான் என்னோடு இருங்கள்! என பெரிய மனது பண்ணி கூட்டிவந்திருக்கிறாள்....!'

தனது நீண்ட உரையை கண்ணீருடன் முடித்து கைகூப்பினாள் கனகம். பின்னர் அவர்கள் பேசட்டும் என்பது போல் எதிர்அறைநோக்கி நடந்தாள்.

கனகம் அகன்றதும் திவாகரனும் கவிதாவும் அந்த அறையில் தனித்து விடப்பட.... திவாகரனால் கவிதாவை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

கவிதாதான் பக்கத்தில் போய் அவன் கைகளை உரிமையுடன் பிடித்தாள். 'என்னை மன்னித்துவிடுங்கள். நான் அப்படி என் மீது வெறுப்பு வரவழைக்க கொஞ்சம் அத்துமீறியே நடித்து விட்டேன். பெரிய மனதுடன் என்னை மன்னியுங்கள்....' என்றவள் தொடர்ந்து மெல்லிய குரலில், 'திவா அத்தான் ப்ளீஸ்...' என்க, சட்டென அந்த இனிமையான அழைப்பில் நெகிழ்ந்தவனாய் அவளை அப்படியே வாரியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டான் திவாகரன்.

பின் அவளது கன்னங்களை மிருதுவாக வருடியபடி, உண்மையில் மன்னிப்பு கேட்க வேண்டியது நான் தான் கண்மணி. உன்னை... நீ செய்தது நடிப்பு என்று தெரியாமல் எவ்வளவு துன்புறுத்திவிட்டேன் எப்படியெல்லாம் அசிங்கமாய் கற்பனை செய்து விட்டேன்...இதோ.... இப்போது கூட மூன்றாம் தர சினிமா வில்லன்போல் கேவலமாய் உன்னிடம் நடக்க முயன்று....' என்றவன் தன் தலையை தானே சிலுப்பியபடி, 'சே! என்னை எனது செய்கையை நினைத்தால் எனக்கே வெறுப்பாய் இருக்கிறது...' என மேலும் மருகியவன், 'என்னை... நீ தான் மன்னிக்க வேண்டும். மன்னிப்பாயா?' என்றான் கெஞ்சும் குரலில்.



அதை விடுங்கள் அத்தான்....' எனக் கொஞ்சியவள் நிமிர்ந்து மன்னித்ததற்கு அடையாளமாய் அவன் நெற்றியில் தனது இதழ்களை ஒற்றியெடுத்தாள்

'நான் இப்போது மிகவும் சந்தோஷமாய் இருப்பது எதனால் தெரியுமா?' என்றான்

தன் மைவிழிக் கண்கள் முழுவதையும் அழகாக விரித்துக் கொண்டு.

'நீயே சொல் கண்மணி....' என்றாள் அவள் புரியாத திகைப்புடன்.

'உங்களை இங்கு முதன் முதலில் பார்த்தபோது ஏற்பட்ட பரவசம்.... நீங்கள், என்னிடம் ஆமாம் மஞ்சரியை கட்டியாயிற்று... பிள்ளையையும் பெற்றாயிற்று... எனக் கோபமாய் சொன்னதும் சட்டென இறங்கிப் போயிற்று. அதெல்லாம் நீங்கள் எரிச்சலில் சொன்ன பொய் என்றதும் தான் எனக்கு மூச்சே வந்தது...' என முடித்தாள்.

அவள் சொல்வதை ஆமோதிப்பவன் போல் அவனும் தலையசைத்தவன், 'நீ சொல்வது போல் ஒரே எரிச்சல்தான் கண்மணி. உன்னை மனதார காதலித்து நீ ஏமாற்றி விட்டாய் என்ற எரிச்சல். அத்தோடு மஞ்சரி வேறு இப்படி யாருடனோ ஓடிப்போய் விட பெண்வர்க்கம் மீதே ஒரே கோபமும் ஆத்திரமும் பெருகியது. எரிச்சலை விரட்ட ஊர் ஊராய் மாறி வேலை பார்த்தேன். கடைசியில் இங்கு உன்னையும் கண்டுபிடித்தேன். மேலும் உன்னை எரிச்சல் படுத்தவே மஞ்சரியை கட்டிக்கொண்ட குழந்தைபெற்றுக்கொண்டு சந்தோஷமாய் வாழ்வதாய் பொய் புளுகினேன்...' என்றவன் அதே ஆச்சரியத்துடன், 'ஆமாம்அது பொய் என எப்படி கண்டுபிடித்தாய்?' என்றான்.

மறுபடியும் கிணுகிணுவென இனிமையான நகையொலி யொன்றை உதிரவிட்டவள், 'அன்று ரெஸ்ட்டாரண்டில்

மஞ்சரியையும் உங்களையும் இணைத்து நான் சொல்ல வர.... உங்களுக்கு வந்ததே ஒரு கோபம்... கையை ஓங்கும் ஆத்திரம்.... அதில்தான் பொறி தட்டியதுபோல் சந்தேகம் உதித்தது. உடனே தாமதியாமல் லீவு போட்டுக் கொண்டு அத்தையின் ஊருக்கு கிளம்பி விட்டேன். அத்தையை சந்தித்ததும் எல்லா உண்மைகளும் தெரிந்தது. உங்களது குட்டும் வெளிப்பட்டது...' சொல்லியபடி மறுபடியும் அடக்கமாட்டாதவளாய் சிரித்தாள் அவள்.

விழிகளில் குறும்பு மின்ன அதை உற்று கவனித்தவன் அவளை மேலும் தனது நெஞ்சோடு இறுக்கிக்கொண்டு, 'சிரிப்பு போதும். இனி இனிப்பான விஷயம்தான் நம் இருவருக்கும் தேவை....' என்றபடி அவள் செவ்விதழ்களை நோக்கி முன்னேறினான்.

தன் உதடுகளால் மென்மையாய் அவள் இதழ்களைப் பிடித்து அழுத்தமாக மூடினான். அதை முகம் சிவக்க சிணுங்களாய் ஏற்றுக்கொண்டு மகிழ்வோடு அவனுள் புதைந்தாள் அவள்!

(முற்றும்)



**விநியோக உரிமை**

**ராஜஸ்ரீ பப்ளிகேஷன்ஸ்**

**7/4, வி.என்.தாஸ் ரோடு, பார்டர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 செல்:9444111767**

Owned and Published by G. Velayutham on behalf of Govindaswamy Publications, 7.Raj Flats, 42, Harrington Road, Cennai-30. and Printed at Premium prints, Chennai-2. Editor : G.S.Manian. Cell : 98424 49517